## ஆசிரியரின் பிற வெளியீடுகள்

| | |
|---|---|
| மௌனமே காதலாக | 65.00 |
| காதல் தேன் நிலா | 115.00 |
| என் இனிய கண்ணாளா | 65.00 |
| தோகை இளம்மயில் | 65.00 |
| அன்புள்ள மான் விழியே | 100.00 |
| எங்கே என் தேவதை? | 100.00 |
| ரதி என்னும் அழகுக்கு | 70.00 |
| மன்னவனே வரலாமா | 70.00 |
| கண்மணி நிமிர்ந்து நில்லடி | 65.00 |
| வருகிறேன் ராஜகுமாரி | 65.00 |
| வண்ணமயில் பெண்ணொருத்தி | 85.00 |
| விழியோரப் பார்வையிலே | 70.00 |
| காக்கைச் சிறகினிலே | 80.00 |
| பால்வண்ணம் பருவம் கண்டு | 75.00 |
| வா பொன் மயிலே | 70.00 |
| அழகு மயிலாள் | 70.00 |
| மைவிழி மானே | 90.00 |

# அழகி...
# நீ.. பேரழகி...!

## 1

'இனி.. எப்போதும் மகிழ்ச்சிதான்! சந்தோஷம்தான்!' துள்ளாத குறையாய் உற்சாகமாய் கூவினாள் காஞ்சன மாலா.

அவள் அப்படி தன்னை மறந்து உற்சாகம் பொங்கக் குதூகலித்த இடம் அவளது கல்லூரி வளாகம். ஹாஸ்டல் கட்டிடம். எப்போதும் அவள் அப்படித்தான். எவ்வித உணர்ச்சியையும், முக்கியமாய் உள்ளத்தில் பொங்கும்

உவகை, சந்தோஷம் போன்ற இனிமையான விஷயங்களை அடக்கக் கூடாது. குளிர்பானத்தைத் திறந்தால் குபுக்கென பிரவாகமெடுத்துப் பொங்கும் நுரை வெள்ளம் போல உற்சாகத்தில் திளைக்க வேண்டும். வாய் விட்டு கலகலவென சிரித்து மனம் முழுவதும் மகிழ வேண்டும் என நினைப்பாள். அது அவளது பிடிவாதமான பழக்கமும் கூட.

இப்போதும் அதனாலே டிகிரி படிப்பு முடிந்து, ஹாஸ்டல் வாசத்திற்கு முற்றுப் புள்ளி வைத்தவாறு, மூட்டை முடிச்சுடன் தனது சொந்த ஊருக்கு, அவளது அழகான பூம்பொழில் கிராமத்திற்குச் செல்லப் போகிற சந்தோஷம்தான்!

என்ன நிறைய உயிர்த்தோழிமார்களை பிரிய வேண்டிய துயரம் இருந்தாலும் கண் கலங்க அவர்களைக் கட்டித் தழுவி அவர்களது முகவரி, போன் நம்பர்களை அக்கறையாய் குறித்து, 'நினைத்தால் எப்போது வேண்டுமானாலும் பேசிக் கொள்ளலாமே!' என ஆறுதல் கொள்ள வேண்டிய கட்டாயமும் அவளுக்கு ஏற்பட்டது.

ஒரு வழியாய் அந்தப் பிரியாவிடைகளை எல்லாம் முடித்து தனது லக்கேஜுடன் ட்ரெயினில் ஏறி உட்கார்ந்தாள். இனி ஒரு ஆறு மணி நேரப் பயணம்.. என்ன ஒரு அலுப்பில்லாத பயணம். திருச்சியைத் தாண்டி மூன்று ஸ்டேஷன்களை கடந்து விட்டால்... அவளது பூம்பொழில் கிராமம் வந்து விடும்.

இரண்டு மூன்று நிமிடமே வண்டி அங்கு நிற்கும். அதற்குள் அவள் உடமைகளுடன் ட்ரெயினை விட்டு துள்ளிக் குதித்து மான்போல் ஓடிவிட வேண்டும்.



அவளும் ஓடி விடுவாள்தான்...

மை விழிகளை ஒரு நிமிடம் மூடி யோசித்தவளுக்கு தந்தை கைலாசநாதரின் புன்னகை ததும்பும் முகமே பெரிதும் விரியலாயிற்று. இமைகளில் விரியலாயிற்று.

கைலாசநாதர் ஓய்வு பெற்ற தமிழாசிரியர். சிறு வயதிலேயே அவள் தாயை இழந்து விட்டதாலோ என்னவோ தனது பாசம் முழுவதையும் அவளிடம் காட்டியே வளர்த்தார். அவள் எது சொன்னாலும் எது கேட்டாலும் உடன் ரைட்தான். ஓகே.தான். தலையாட்டலான சம்மதம்தான்.

அதனாலே காஞ்சனை அரசுப் பள்ளியில் ப்ளஸ் டூவை முடித்து விட்டு டிகிரி படிப்பை நகரத்தில் ஹாஸ்டலில் தங்கிப் படிக்க அவள் நினைத்தபோது... மகளைப் பிரிய வேண்டுமே என்ற வருத்தத்திலும், தலையசைத்தார்.

காஞ்சனமாலாவுக்கும் அப்படித் தந்தையைப் பிரிந்து சென்று படிப்பதில் இஷ்டமில்லை தான். ஆனாலும் எதிர்காலத்தில் தந்தையைப் போல் தானும் ஒரு டீச்சராக வேண்டும்.. என்று தனது லட்சியக் கனவை நிறைவேற்றவாவது தான் டிகிரிப் படிப்பை முடித்தாக வேண்டும் என்ற கட்டாயத்திலே அவளும் படிக்கச் சென்றாள்.

இதோ... மூன்று வருடம் போனதே தெரியவில்லை. டிகிரியை முடித்தாயிற்று. இனி எதாவது பல்கலைக் கழக பி.எட். கரஸ்பாண்டன்ஸ் கோர்ஸில் சேர்ந்தால் போதும். சொந்த கிராமத்தில் இருந்து படித்தே அவளது ஆசிரியப் படிப்பையும் முடித்து விடுவாள். பின் தந்தையின்

உதவியுடன் அவளது பூம்பொழில் கிராமத்தில் உள்ள எண்ணற்ற ஏழைச் சிறுவர்களுக்காக ஒரு சிறு பள்ளிக் கூடம் ஒன்றையும் ஆரம்பித்து விட்டால் அவள் லட்சியத்தையும் அடைந்து விட முடியும்.

கண்களை மூடி நினைத்துப் பார்த்தபோது காஞ்சன மாலாவுக்கு எல்லாமே இனிமையாய் தித்திப்பாய் தோன்றியது. அந்த கனவு தித்திப்புகளை வெளியே விட்டு விடக் கூடாது என்பது போல் கைகளைப் பொத்தி நெஞ்சில் அழுத்திக் கொண்டாள்.

பக்கத்திலிருந்த நடுத்தர வயது பெண்ணின் மூன்று வயது வாண்டு அவளைப் பார்த்து கெக்க பிக்கவென ஒரு மழலைச் சிரிப்பு சிரிக்க... பையினுள் வைத்திருந்த பிஸ்கட் பாக்கெட்டைப் பிரித்துச் சாப்பிடக் கொடுத்தாள்.

பக்கத்து கம்பார்ட்மெண்டில் யாரோ ஒரு ஆசாமி செல்போனில் பழைய பாட்டுக்களை சத்தமாய் ஒலிக்க விட பாட்டின் இனிமையில் மறுபடியும் கண்களை மூடி மெய் மறந்தாள்.

இப்படியும் அப்படியுமாய் பாட்டில், பழைய நினைவுகளில் மூழ்கியே நேரம் போயிற்று. இடையில் நின்ற ஸ்டேஷனில் சின்னதாய் ஒரு டிபனை சாப்பிட்டு வயிற்றையும் நிரப்பிக் கொண்டாள்.

வண்டி திருச்சியைத் தாண்டி விட்டதும் அவளது மை விழிக் கண்கள் கொட்டக் கொட்ட விழித்து காவல் காக்க ஆரம்பித்து விட்டது.

இன்னும் மூன்றே ஸ்டேஷன்கள்தான்... அவளது பூம் பொழில் கிராமம் வந்து விடும். உற்சாகமாகி விட்டாள் காஞ்சனமாலா.



இதோ மேலும் பத்து நிமிடம் பயணம்... அவளது பூம்பொழில் ஸ்டேஷன் வந்தே விட்டது. பக்கத்து இருக்கைப் பெண்மணியிடம் புன்னகையுடன் விடை பெற்று லெதர் பேக்கையும் சூட்கேஸையும் தூக்கிக் கொண்டு துள்ளலாய்த்தான் இறங்கி ஓடினாள் அவள்.

பிளாட்பார இருக்கை ஒன்றில் தயாராய் அவளது தந்தை கைலாசநாதர் பரிதவிப்பு பார்வையுடன் தேடிக் கொண்டிருக்க.. ஓடிச் சென்று அவரை கட்டிக் கொண்டாள் காஞ்சனமாலா.

கைலாசநாதருக்கும் மகளைப் பார்த்ததும் ஒரே மகிழ்ச்சிதான்! அதைவிட படிப்பு முடிந்து விட்டதால் இனி மகள் தன்னுடனே இருக்கப் போகிறாள் என்ற பூரிப்பு பெருமிதமாய் அவர் முகத்தில் தாண்டவமாடியது.

ஐந்து நிமிட குசல விசாரிப்புகளுக்குப் பின் இருவரும் நடந்தனர்.

ஸ்டேஷனுக்கு வெளியே கைலாசநாதரின் பொலிவான காளைகளுடன் கூடிய வண்ணக்கூரை மாட்டு வண்டி.

வண்டிக்காரன் கட்டையன் பொங்கும் சிரிப்புடன் "காஞ்சனை அம்மா சவுக்கியமுங்களா?" என்றபடி வந்து அவள் உடைமைகளை வாங்கினான். புன்னகையுடன் பதில் சொன்னவள் கட்டையனது குடும்ப உறுப்பினர்களை அக்கறையாய் விசாரித்தாள்.

பின் எல்லோரையும் ஏத்திக் கொண்டு அந்த நிலவு ஒளியில் ஜில்ஜில் என செம்மண் பாதையில் குதித்து

ஓடியது மாட்டு வண்டி. சுகந்தமான தூய்மைக் காற்று, நெற் பயிர்களின் இதமான வாசனை என கிராமத்து மணத்தை இனிமையாய் உணர்ந்து மலர்ந்தாள் அவள்.

பத்து நிமிட பயணத்திற்கு முன் கிராமத்தின் மச்சு வீடு என சொல்லப்படும் அவள் வீட்டு முன் வண்டி நின்றது.

துள்ளி இறங்கியவளுக்கு மறுபடியும் ஒரு இன்ப அதிர்ச்சி.

அந்த இரவு நேரத்திலும் அவள் வருகையை உணர்ந்து அவளைப் பார்க்கக் காத்திருக்கும் அன்புத் தோழி மார்கள்!

பக்கத்து தெரு தோழி நீலாவதி எதிர்வீட்டு செண்பகக் கண்ணு மூணாம் வீட்டு மல்லிகைக் கொடி!

''அடாடா! நீங்கள் என் மீது வைத்திருக்கும் பாசமே தனி..'' என ஓடிப்போய் அவர்களை கண்கள் தளும்ப கட்டிக் கொண்டாள் காஞ்சனமாலா.

அவர்களிடம் நலம் விசாரித்துப் பேசி விடை கொடுத்தபோது முன்னறை ஓரமாக செல்வம் நின்று கொண்டு தயங்கித் தயங்கி அவளைப் பார்ப்பது தெரிந்தது.

''அட.. செல்வம் அத்தான்..!'' உற்சாகமாய் கூவினாள் காஞ்சனை.

செல்வம் அவளுக்கு ஒன்று விட்ட மாமா மகன். முறைப் பையன் என்பதால் சிறு வயது முதலே அவனை செல்வம் அத்தான். செல்வம் அத்தான் என கூப்பிடு வதே அவளுக்கு வாடிக்கையாயிற்று.



மாமாவையும் அத்தையையும் இள வயதிலே இறந்து விட்டதால் அனாதையாய் நின்ற செல்வத்திற்கு காஞ்சனையின் தந்தை கைலாசநாதர் தான் நேசக்கரம் நீட்டி தன்னுடன் வைத்துக் கொண்டார். படிப்பில் ஆர்வமில்லாத செல்வத்திற்கு தன்னுடைய விவசாயத் தையே கற்றுக் கொடுத்து தன்னுடனே வைத்துக் கொண்டார்.

காஞ்சனைக்கும் செல்வம் சிறு வயதிலேயே தாய் தந்தை இழந்து விட்டதால் அவன் மீது இரக்கமும் மிகுந்த பரிவும் உண்டு. சிறு வயதில் தாயை இழந்த தான் நிறைய நேரங்களில் தாயின் பிரிவை நினைத்து வருந் தும்போது... இரண்டு பேரையும் இழந்த செல்வம் எப்படி தாங்கிக் கொள்வான்? என வருந்தினாள்.

அந்த எண்ணத்தில் அவன் மீது பரிவும் அத்தான் என்ற பாசத்தையும் காட்டத்தான் செய்தாள். ஆனால் செல்வத்திற்கு அந்த காஞ்சனையின் பரிவும் பாசமும் அவள் தன் முறைப்பெண்ணாய் இருப்பதாலே என்ற நினைப்பு இருந்தது.

அதற்கேற்றாற்போல் அவ்வப்போது உறவினர்கள் காதுபட, 'காஞ்சனைக் கென்ன அவள் முறை மாமன் செல்வம் பக்கத்திலேயே கட்டிக் கொள்ளத் தயாராய் இருக்கிறானே?' என கேலி செய்யும்போது கூட காஞ் சனை ஒரு அசட்டுச் சிரிப்பு சிரித்தபடி எவ்வித பதிலும் சொல்லாமல் சென்று விடுவாள்.

அந்தச் சிரிப்பை காஞ்சனையின் சம்மதமாகவே நினைத்துக் கொண்டிருந்தான் செல்வம்.

அன்றும் ஊரிலிருந்து காலேஜ் குமரியாய் வந்த காஞ்சனையை அவள் பளீரிடும் இளமை அழகை ஆசையாய் தனக்கு விரைவில் சொந்தமாகப் போகிற பொருள் போலவே நினைத்துப் பார்த்தான். அவளிடம் வழியாத குறையாய் நலம் விசாரித்துப் பேசினான்.

ஆனால் எவ்வித கபடமும் இல்லாமல் வெள்ளை மனதுடன்தான் அவனுடன் பழகினாள் காஞ்சனை.

## 2

அன்று என்றுமில்லாத நிம்மதியுடன், தனது ரூமில் தனது கயிற்றுக் கட்டிலில் படுத்துத் தூங்கினாள் காஞ்சனை.

மறுநாள் காலை விடிந்ததும் குஷியோடு தோழிமார் களை தேடிப் போனாள்.

நீலாவதி, செண்பகக்கண்ணு, மல்லிகைக் கொடி மூவர் துணையாய் அணிவகுக்க காஞ்சனை தலைமைப் பொறுப்பு ஏற்ற தலைவி போல் வழி நடத்தி ஊர் சுற்ற அன்றே கிளம்பி விட்டாள்.

''இதோ பாருங்க... இன்னிக்கு நிறையப் ப்ரோக்ராம் தான்...'' என காஞ்சனமாலா ஆரம்பித்து வரிசைப் படுத்த ஆரம்பித்தாள். முதலில் பனை மரக் காட்டில் போய் சுவையான பதனீர், பின் காளையார் கோயில் வீரபாண்டி



சாமியை தரிசனம் செய்துவிட்டு பின் தோப்புக்காடு வழியாய் போய் மாஞ்சோலை குளத்தருவியில் சுகமான குளியல் பின் அப்படியே தங்கம்மா பாட்டி குடிசைக்குச் சென்று பழைய சோற்றையும் வத்தல் குழம்பையும் ஒரு பிடி பிடித்துவிட வேண்டும்.. பின் மாலை வரை ஊர்க் கோடி மைதானத்தில் பந்து விளையாட்டு, ஊஞ்சல் என ஒரே ஆட்டம் பாட்டம்தான். என்ன ஓகேயா?'' சொல் லியபடி திரும்பி மூவரையும் பார்க்க பூம்பூம் மாடு போல் பல்லிளித்து தலையாட்டினர் மூவரும்.

''அட... வாயில் என்ன கொழுக்கட்டையா...? எதாவது பேசுங்கப்பா!'' என காஞ்சனமாலா சட்டென நீலாவதி ஜடையை இழுத்து மல்லிகைக் கொடி இடுப்பைக் கிள்ளி வம்படியை ஆரம்பித்து வைக்க... மூவரும் மடை திறந்தாற்போல் தயக்கம் நீங்கி சளசளக்க ஆரம்பித்து விட்டார்கள்.

தோழிமார் மூவருக்கும் காஞ்சனமாலா பெரிய படிப்புக்காரி. பட்டணத்தில் படிப்பவள். நம்மையெல் லாம் சமமாய் மதிப்பாளா..? என்கிற எண்ணம் ஆரம் பத்தில் தலை தூக்கும். ஆனால் நொடியில் அதை புரிந்து கொண்டு அதற்கு இடம் கொடுக்காமல் தனது சீண்டி விளையாடும் இயல்பான பேச்சினால் தவிடு பொடி யாக்கி விடுவாள் காஞ்சனமாலா.

அன்றும் அப்படித்தான் உரிமையோடு சீண்டி கேலி யும் கிண்டலுமாய் பயணத்தைத் துவக்கினாள். பனங்காட்டில் போய் முதல் வேலையாய் ஓலைக் குவிப் பானில் வயிறு முட்டுமளவுக்கு சுவையான பதநீரைக் குடித்தார்கள்.

பின் காளையார்கோவில் நோக்கி சருகுக் குவியல்களை மிதித்தபடி ஊர்க்கதை, உலகக் கதைகள் வாய்களில் சலசலக்க உற்சாகமாய் நடந்தார்கள்.

பாதி குவியல்களை கடந்து காளையார் கோவிலை நெருங்கும் நேரம் பார்த்து குளம்பொலிகள் அதிர பெரும் புரவிச் சப்தம் கேட்டது.

திடுக்கிட்டு திரும்பிப் பார்த்தார்கள் நால்வரும்.

முண்டாசு கட்டிய ஒருவன் வெள்ளைக்குதிரை ரேக்ளா வண்டியை சரட்டென அவர்கள் முன்னால் வழிமறிப்பது போல் விட்டு டக்கென நிறுத்தினான்.

இடுங்கிய கண்களை அகல விரித்து காஞ்சனமாலாவையே உறுத்துப் பார்த்தான் அவன்.

அவன் முகம் ஆச்சரியத்திற்குப் போனது. இப்படி ஒரு அழகியா? என்பது போல் மேலும் கண்களை சுருக்கி அவளைப் பார்த்தான்.

டக்கென தன் முன் நின்று தன்னையே உற்றுப் பார்த்தவனைக் கண்டு காஞ்சனை அசரவில்லை. அவளும் நெஞ்சு நிமிர்த்தியவளாய் புருவம் உயர்த்திப் பார்த்தாள்.

மற்ற தோழிமார்கள் எல்லாம் குனிந்து கிராமத்துப் பெண்களாய் வெட்கப்பட அவள் மட்டும் சிலிர்த்து நின்றது அவனை வியக்க வைத்தது.

'அட.. யார் இவள்?' என்ற நினைப்புடன் வண்டியை விட்டு இறங்கினான்.



கண்களால் மேலும் கீழும் உற்றுப் பார்த்துவிட்டு நெற்றியைச் சுருக்கியவன் சட்டென கண்டு பிடித்து விட்டவன் போல் நிமிர்ந்து, ''நீ கைலாசநாதருடைய பெண்தானே?'' எனவும் காஞ்சனை திடுக்கிடவே செய்தாள்.

''நீ.. நீ.. நீங்கள்..?''

அவளறியாமலே அவளது வாய் எதிர் கேள்வியை வீசியது.

''என்னைத் தெரியவில்லை...? நன்றாக உற்றுப் பார்...'' என்றான் அவன்.

காஞ்சனை முறைத்தாள். ''இதற்கு மேல் உங்களை உற்றுப் பார்த்தால் கண்கள் பிதுங்கி வெளியே வந்துவிடும். சொல்லுங்கள் மிஸ்டர் யார் நீங்கள்?''

''அட.. என் ராஜ்யத்திற்கு வந்து என்னையே மிரட்டுகிறாயா?''

''உங்கள் ராஜ்யமா? சரிதான்! இது போன்ற வண்டியில் வரும்போதே நினைத்தேன். குதிரையில் வந்ததும் பெரும் மன்னர் நினைப்பு வந்து விட்டதோ..?''

அவன் தோள்களைக் குலுக்கினான். ''நீ சொன்னாலும் சொல்லா விட்டாலும்.. நான் மன்னர்தான்..! மன்னர் பரம்பரைதான். மன்னர் வம்சத்து மகேந்திர பூபதி நான்தான்! உனக்குப் புரியும்படி சொல்ல வேண்டுமானால் பண்ணை வீட்டு ஜமீன்...'' சொல்லியபடி அவன் தனது நீளமான மீசையை முறுக்கிக் காட்ட காஞ்சனமாலாவுக்கு சிரிப்பு வந்து விட்டது.

இப்போது ஓரளவு அவன் யார் என்று புரியவும் ஆரம்பித்து விட்டது. பூம்பொழில் கிராமத்து பண்ணை ஜமீன்தாரின் ஒரே வாரிசு. சிறு வயதிலேயே பட்டணத்து ஹாஸ்டலில் சேர்த்து படிக்க வைத்து விட்டார்கள்.. அங்கேயே... உறவினர் வீட்டில் தங்கி வளர்கிறான் என.. அவள் முன்பு கேள்விப்பட்ட அந்த 'சின்ன ஜமீன் இவன்.. இவன்தானா?'

''ம்ம்.. புரிகிறது. அந்த சின்ன... சின்ன ஜமீன் நீங்கள் தானோ?'' வேண்டுமென்றே அந்த 'சின்ன' வார்த்தையில் அழுத்தம் கொடுத்தாள்.

அவனும் அசராமல், ''சின்ன ஜமீன்தான். ஆனால் இப்போதுதான் வளர்ந்து பெரிய ஜமீன் ஆகி விட்டேனே! பார் ஆறடி ஐந்து அங்குலம்..'' என்றபடி நெஞ்சு நிமிர்த்திக் காட்டினான்.

''சரியான நெட்டைக் கொக்கு..'' முணுமுணுத்தபடி அவள் அசட்டுச் சிரிப்பு சிரித்தாள்.

பாம்புச் செவி போலும். அதுவும், அவன் காதுகளுக்கு கேட்டு விட்டது.

''என்ன.. முணுமுணுக்கிறாய்? நெட்டைக் கொக்கா? உவமை கூட உனக்கு சொல்லத் தெரியவில்லையே? எந்த நெட்டைக் கொக்கிற்காவது இப்படி உருண்டு திரண்ட திடமான புஜங்கள் அசகாய வலிமை இருப்பதைப் பார்த்திருக்கிறாயா?'' என்றதும் நிஜமாகவே அவனை உற்றுப் பார்த்து வியக்கவே செய்தாள். உடற்பயிற்சியால் கட்டுக்கோப்பான உடலுடன் கிரேக்க போர் வீரன் போல் நெஞ்சு நிமிர ஆஜானுபாகுவாய்.. என ஒரு கணம் அதில் அதிசயித்தவள், அட... என்ன இது



அந்நியன் ஒருவன் உடற்கட்டை இப்படி வாய் பிளக்க பார்த்துக் கொண்டு..? தன்னைத் தானே கடிந்து கொண்டு தலையை தாழ்த்தினாள்.

''அட.. வெட்கமில்லாமல் சும்மாவாக பார்.. நான் ஒன்றும் செய்ய மாட்டேன்..'' என்றதும் மறுபடியும் நிமிர்ந்து கண்களை உருட்டினாள்.

''அடாடா... பெரிய மன்மதன்..! பார்த்தவுடன் மன்மத வில்லால் அப்படியே என் இதயத்தை தைத்து சின்னா பின்னமாக்கி விடுவீர்கள் என்றல்லவா ஒரு கணம் பயந்தே போய் விட்டேன்..'' சொல்லியபடி போலியாய் நடுங்குவது போல் நடுங்கியும் காட்டினாள்.

அவனோ மறுபடியும் மீசையை முறுக்கிக் கொண்டு, ''இப்போது புரிந்து விட்டது..'' என்றான்.

''என்ன புரிந்து விட்டது?''

''நான் மன்மதனோ இல்லையோ.. நீ அழகான ரதிதேவிதான்! அதை நான் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் இதை இப்படி என் வாயிலிருந்து வரவழைப்பதற்காகத்தான் நீ இப்படி வேண்டுமென்றே மன்மதன் உதாரணத்தைக் காட்டி கிண்டலடித்திருக்கிறாய். என்ன என் நினைப்பு சரிதானே?''

அவள் தலையை மறுபடியும் கிடுகிடுவென ஆட்டிக் காண்பித்தவள், ''ஆமாம் ஐயா! நீங்கள் பேசிய இனிப்பான வார்த்தைகள் காதில் தேனாய் புகுந்து... கூடவே நிறைய எறும்புக் கூட்டங்களும் உள்ளே புகுந்து விட்டன... அது உங்களுக்குத் தெரியுமா?''

மகேந்திரன் பற்கள் முழுவதையும் காட்டி கடகட வெனச் சிரித்தான். அந்த வசீகரச் சிரிப்பு காஞ்சனையை என்னவோ பண்ணத்தான் செய்தது.

''சரியான சுட்டிப் பெண்ணாக இருக்கிறாயே. உன் பெயரென்ன எலிவாலா? என்ன பெயரென்று தைரியமாகச் சொல் பார்ப்போம்..''

அவன் போட்டு வாங்குவதைப் புரியாமல் ''எனக் கென்ன பயம்? என் பெயர் எலிவால் இல்லை புலி வால்..!'' புயலாய் புலியாய் சீறும் காஞ்சனமாலா. சுருக்கமாய் ''காஞ்சனை!'' என்றாள் அவள்.

'காஞ்சனமாலா...' என ஒரு கணம் உச்சரித்துப் பார்த்த அவன்.. 'அட பெயர் கூட அழகாகத்தான் இருக்கிறது..' என முணுமுணுத்துவிட்டு, ''ஓ.கே. காஞ்சனை... நாம் இருவரும் ஒரே ஊர்க்காரர்கள். நன்கு அறிமுகமாகியும் விட்டோம். இனி நல்ல நண்பர்களாகவும் இருப்போம். சரியா?''

''எல்லாம் தங்களது உத்தரவு.. மன்னா... மிஸ்டர் மகேந்திர பூபதி மன்னா...!''

சலாம் அடிக்காத குறையாய் அவள் சொல்ல, அவன் மறுபடி சிரித்தவன், ''உன் அழகைப் போல் உன் சுட்டித் தனமும் எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது'' எனச் சொல்லியபடி திரும்பினான். தன் ரேக்ளா வண்டி நோக்கி விறுவிறுவென நடந்தான் அவன்.

தன்னையறியாமல் அவனையே வைத்த கண்ணாய் பார்த்துக் கொண்டிருந்தாள் காஞ்சனை.



# 3

அதற்குப் பின் காஞ்சனை அந்த மகேந்திரனை மறந்து விட்டாள் என்றுதான் சொல்ல வேண்டும்.

எல்லாம் மறுவாரம் வரையில்தான்.

மறுவார சந்தையில் அவள் காய்கறிகளை மும்முர மாய் வாங்கிக் கொண்டிருந்தபோது கனைப்புச் சத்தம் கேட்டு திரும்பிப் பார்த்தாள்.

பின்னால் கைகளைக் கட்டியபடி மகேந்திரன்!

ரொம்ப நேரமாய் அப்படி நின்று பார்த்துக் கொண் டிருப்பது போல், தான் தான் அவளைக் கவனிக்காதது போல் உணர்ந்தாள்.

பக்கத்தில் சென்றதும், ''என்ன காய்கள் வாங்க வந் தாயா?'' என்றான் அவன் இயல்பான குரலில்.

''இல்லை.. சுள்ளி பொறுக்க வந்தேன்..'' என்றாள் அவள் குறும்பாய்.

அவனும் விடவில்லை. ''சுள்ளிகள் கிடைத்ததா?'' என் றான் அக்கறையாய்.

''கிடைத்தது. ஆனால்.. மகேந்திர மன்னர் அதற்கு வரி கேட்டு விடுவாரோ என்ற பயம்தான் இருக்கிறது.''

அவன் பதிலுக்கு இலகுவாய் சிரித்து, ''மன்னர் விரும்புவது வரியை அல்ல. உன் சுட்டித்தனமான

நட்பை. ஒரு நாள் என் பண்ணை வீட்டுக்கு வா.. நிறைய பேசுவோம்..'' என்று சொல்லிவிட்டு அதே சிரிப்புடன் விடை பெற்று அகன்று விட்டான் மகேந்திரன்.

மேலும் ஒரு வாரம் சென்றது.

அன்று என்னவோ விடிந்ததும் காஞ்சனமாலாவுக்கு இருப்புக் கொள்ளவில்லை. 'என் பண்ணை வீட்டுக்கு ஒரு முறை வா. சுற்றிக் காட்டுகிறேன்..' என மகேந்திரன் சொல்லியிருந்த வார்த்தைகள் அவளைப் பிடித்து விடாது ஆட்டியது.

சிறு குழந்தைப் பருவத்திலேயே அந்தப் பெரிய பண்ணை வீட்டைக் கடந்து போகும்போது, 'இவ்வளவு பெரிய வீடா?' என ஆச்சரியமாய்ப் பார்ப்பாள். உள்ளே தெரியும் பலவித வண்ண விளக்கொளிகள் தெரிய பார்ப்பதற்கு ஒரு அரண்மனை போன்ற பிரமிப்பை அவளுக்கு ஏற்படுத்தும்.

தந்தையிடம், 'உள்ளே போய் பார்க்கலாமா?' என தன் ஆவலை அவள் சொல்லும் போதெல்லாம், 'ஐயோ! அது பெரும் பணக்கார இடம். நம்மை உள்ளே விட மாட்டார்களம்மா.' என தடுத்து விடுவார்.

அதனாலே வளர வளர அந்த வீட்டைப் பார்க்கும் போதெல்லாம், இவ்வளவு பெரிய விஸ்தரிப்பு உள்ள வீட்டில் என்னவெல்லாம் இருக்கும்? என்ற ஆவல் அவளுள் ஏக்கமாகவே ஆகிவிட்டது.

அதனாலே மகேந்திரன் சம்பிரதாயமாய் சொல்லி யிருந்தாலும் கூட குதிபோட்டுக் கொண்டு கிளம்பி விட்டாள்.



தனியாகப் போய் அவன் முன் நிற்க ஒரு மாதிரியாக உணர்ந்தவள் தோழிமார்களை துணைக்கு அழைக்க.. ஆள் ஆளுக்கு பண்ணை வீடா..? ஆளை விடு.. என்பது போல் ஓடி ஒளிந்தார்கள்.

கடைசியில் செண்பகக்கண்ணுவை அமுக்கிப் பிடித்து அழைத்துக் கொண்டு இழுக்காத குறையாய் கூட்டிப் போனாள். பண்ணை வீட்டின் பெரிய க்ரில் கேட் கதவையே இரண்டு பேரும் தள்ளித்தான் திறக்க வேண்டியிருந்தது.

அவர்கள் உள்ளே நுழைந்ததும் பணியாள் ஒருவன் ஓடி வந்து விசாரிக்க, ''உங்க ஐயாவைப் பார்க்கணும்... மகேந்திரன் ஐயாவைப் பார்க்கணும்...'' என்றாள் ராகமாக.

''ஐயாவுங்களா... தோட்டத்தில வேலையா இருக்காரும்மா... பின்புறமா போங்க...!'' என வழியைக் காட்ட... ''வேணாம்.. போயிருவோம்டி...'' எனத் தயங்கிய செண்பகக் கண்ணுவை இழுத்துக் கொண்டு அவன் காட்டிய திசையில் ஓடினாள்.

உள்ளே... தென்னை மரத் தோப்புப் பக்கம் தலையில் முண்டாசு கட்டியபடி மகேந்திரன் குனிந்து தோட்ட வேலை பார்த்துக் கொண்டிருந்தான்.

''ஹலோ... மிஸ்டர்... பூபதி. மன்னர்... பூபதி! மகேந்திர பூபதி...!'' வேண்டுமென்றே உரக்க அழைத்துக் கூப்பிட்டாள் அவள்.

மகேந்திரன் நிமிர்ந்து பார்த்தான். அவன் புருவங்கள் வியப்பால் விரிந்தது. மண்வெட்டியைக் கீழே வைத்து விட்டு கைகளைத் தட்டியபடி பக்கத்தில் வந்தான்.

அவன் வந்ததும் குனிந்து பெரிய சலாம் போட்டாள் காஞ்சனமாலா.

''மன்னர் மகேந்திர பூபதிக்கு கோடி வணக்கங்கள். மன்னரின் அரண்மனையை சுற்றிப் பார்க்க இன்று செண்பகக் கண்ணுவுடன் யாம் வருகை புரிந்துள்ளோம். சுற்றிக் காட்ட மன்னர் தயாராக இருக்கிறாரோ?'' என்றாள் முகத்தை நிமிர்த்தியபடி.

அவள் ஏற்றி இறக்கிப் பேசியதை ரசித்த மகேந்திரன் கடகடவெனச் சிரித்து, ''சரியான துடுக்குக் காரியாக இருக்கிறாயே? இது உன் கூட வந்திருப்பது யார்... உன் தோழியா? செண்பகக் கண்ணுவா..? அவள் எப்படி... அவளும் உன்னைப் போல்தானா?''

மகேந்திரன் மறுபடியும் கண்களை விரிக்க,

''பயப்பட வேண்டாம் மிஸ்டர் மன்னர் பூபதி. வால் அவளுக்குக் கிடையாது. எனக்கு மட்டும்தான் உண்டு...'' என்றாள் காஞ்சனமாலா சிரிப்புடன்.

''அதை ஒத்துக் கொண்டாயே...? அது ஒன்று போதும்...!''

இருவரும் கொல்லெனச் சிரித்தார்கள். செண்பகக் கண்ணுவும் தயக்கம் நீங்கி மெல்லச் சிரித்தாள்.

அதைக் கவனித்து அவள் தோள்களை ஒரு தட்டு தட்டிய காஞ்சனா, ''சும்மா வாய் விட்டுச் சிரிடி... உன் சிரிப்பை ஒன்னும் மன்னர் பிடுங்கிக் கொள்ள மாட்டார். அவர் பெரிய கருணை வள்ளல். இன்னும் கொஞ்ச நேரத்தில் உனக்கு ஜூஸ், மோர், பழச்சாறு என வகை வகையாய் கொடுக்கப் போகிறார். என்ன அப்படித்தானே மன்னரே?'' என்றாள் இடக்காக.



மகேந்திரன் திரும்பவும் வாய் விட்டுச் சிரித்தவன், ''ஜூஸ் எல்லாம் இல்லை. சுவையான கம்பங் கூழ் இருக்கிறது. பருகுகிறீர்களா?'' என்றான்.

''அதை நீங்களே பருகிக் கொள்ளுங்கள் ஐயா.. எங்களுக்கு மாளிகையை சுற்றிக் காட்டுங்கள்..'' என்றாள்.

''இதோ வாருங்கள்...'' என்றபடி மகேந்திரன் அழைத்துப் போனான். பண்ணை வீட்டு பங்களாவின் ஒவ்வொரு அறையாய் கூட்டிப் போனான். பாதி அறைகள் கவனிப்பாரின்றி பூட்டியே கிடந்தன.

மகேந்திரன் ஒவ்வொரு அறையாய் சோம்பல் படாமல் திறந்து காட்டினான். வித விதமான இருக்கைகள், சாண்டலியர் விளக்குகள். பலதரப்பட்ட மரச் சாமான்கள் என அறைகளை நிறைத்திருந்தது.

சில விசாலமான அறைகளில் ஆயில் பெயிண்டுகளில் வண்ண வண்ண ஓவியங்கள். மகாபாரத இராமாயண இதிகாச காட்சிகள் அதில் அழகாக வரையப் பட்டிருந்தன.

வியந்து பார்த்தவளுக்குக் காட்சிகளின் நிலையைச் சொல்லி விளக்கவும் செய்தான் மகேந்திரன்.

இது மகாபாரதத்தில் பகவான் கிருஷ்ணர் துரியோதனிடம் லட்சக்கணக்கான சேனைப் படை வீரர்களை காட்டி 'அவர்கள் வேண்டுமா இல்லை நான் ஒருவன் வேண்டுமா? எது வேண்டும் சொல்!' எனக் கேட்கும் அற்புதக் காட்சி. அதற்கு பதிலாக துரியோதனன் 'சேனைப் படைகள்தான் தனக்கு வேண்டும்' எனக்

கேட்பதும் ஓவியமாய் மற்றொருபுறம் வரையப்பட்டிருந்தது. அதையும் காட்டி மகேந்திரன் விவரித்தான்.

பின் பெரிய பெரிய.. பிரேமிட்டிருந்த போட்டோக்களில் ஜமீன்தார் உடைகளில் அவனது முன்னோர்களது படங்கள் வரிசையாக மாட்டப்பட்டிருக்க... அதையும் வியப்போடு பார்த்தாள் காஞ்சனமாலா.

ஒவ்வொரு மிடுக்கான புகைப்படத்திற்குக் கீழும் பல்லவ பூபதி, மாணிக்க பூபதி, செல்வ பூபதி என வரிசையாய் அவர்களது பெயர்கள் எழுதப்பட்டிருக்க... ''அடடா... பெரிய பூபதி பரம்பரையாய் அல்லவா தெரிகிறது? இந்த மகேந்திர பூபதி இவர்களின் கடைசி வாரிசோ..?'' என்றாள்.

''கடைக்குட்டி வாரிசு...'' என அதைத் திருத்தினான் மகேந்திரன். ''மேலும் இதில் இன்னொரு ஆச்சரியமான விஷயமும் இருக்கிறது...'' என்றான் பீடிகையாய்.

''அது என்னவோ?'' என்றாள் காஞ்சனை போலி வியப்பு ஒன்று காட்டி.

''இந்த என் முன்னோர்கள் எல்லாம் அசல் பண்ணை முதலாளிகள் போல் ஜமீன்தார்கள் போலவே தங்கள் வாழ்நாள் முழுக்க வாழ்ந்தார்கள். அதை நான் ஒருவன் தான் உடைத்து சாதாரண வாரிசாய் குடிமகனாய் மாறி விட்டேன். என் தந்தையும் என்னிடம் இந்த ஆடம்பர பகட்டுத்தனத்திற்கு மாறும்படி என்னை எவ்வளவோ வற்புறுத்தினார். நான் ஒரேடியாய் மறுத்து விட்டேன். தெரியுமா?''

அவன் பெருமையாய்ச் சொல்ல தலையை வெகுவாய் ஆட்டிய காஞ்சனை, ''ம்ம்.. இது... நல்ல



விஷயம்தான். வேண்டுமானால் பாராட்டு விழா நடத்தி விடுவோமா?'' என்றாள்.

அவன் மகேந்திரன் சற்று உரத்த குரலில், ''ஹேய்.. நான் எவ்வளவு சீரியசாய்ச் சொல்கிறேன். உனக்கு எல்லாமே விளையாட்டுத்தானா?'' எனவும் அதற்கும் காஞ்சனை விடாமல், ''வாழ்க்கையே ஒரு விளையாட்டு தான். அதில் நாம் எல்லாம் கடவுள் உருவாக்கிய பொம்மைகள். தெரியுமா?'' எனச் சொல்லி மறுபடியும் தலையாட்டிக் காட்ட மகேந்திரன் பட்டெனச் சிரித்து விட்டான்.

பின் மகேந்திரன் உள்புற பெரிய அறை ஒன்றுக்கு கூட்டிப் போய் காட்டினான். ''இது தான் கஜானா அறை என்பது. இதில் விதவிதமான தங்க நகைகள், வைரங்கள் இருக்கிறது. பல கோடி பெறும். பார்க்கிறாயா?'' என்றபடி பீரோக்களைத் திறந்து கண்ணைக் கவரும் நகைகளைக் காட்டினான்.

வியப்பால் கண்கள் விரிந்தாலும் அவைகளை சலனமே இல்லாமல்தான் பார்த்தாள் காஞ்சனை. அவள் உற்றுப் பார்ப்பதை கவனித்த மகேந்திரன், ''உனக்கு எதுவும் வேண்டுமானால் எடுத்துக் கொள் தாராளமாக...'' என்றான்.

தலையை மறுப்பாய் வெட்டினாள் காஞ்சனமாலா.

''ஏன் உனக்கு நகைகளிடம் ஆசை இல்லையா? ஆச்சரியமாய் இருக்கிறது...'' அவன் அதிசயிக்க பதிலுக்கு அவனை உறுத்துப் பார்த்தவள், ''எனக்கு நகைகளில் ஆசையில்லை. வேறு ஒரு ஆசை இருக்

கிறது. நிறைவேற்றுவீர்களா?'' என்றாள் ஏக்கம் சற்று தொனிக்கும் குரலில்.

மகேந்திரன் புன்னகையுடன் முகம் விரிந்தவன், ''எதுவானாலும் சொல். உடனே நிறைவேற்றி வைக் கிறேன்...'' என்றான் அவசரக் குரலில்.

காஞ்சனமாலா லேசாக தொண்டையைச் சரி செய்து கொண்டு, ''அதாவது... மகேந்திரன் சார்.. உங்கள் மூக்கிற்கு கீழ்... கறுப்பாய் அடர்ந்து போய் ஒரு பெரிய முறுக்கு மீசை தெரிகிறது அல்லவா..?'' என நிறுத்தி னாள்.

''ஆ.. ஆமாம்...'' என்றான் மகேந்திரன்.

''அதை என் இரண்டு கைகளாலும் பிடித்து கிடு கிடுவென ஆட்டிப் பார்க்க வேண்டும். அது அதுதான் எனது தீராத இப்போதைய ஆசை. நிறைவேற்று வீர்களா?'' என்றாள் சிரிப்பை அடக்கிய சீரியஸான குரலில்.

## 4

ஒருவாறு அன்று முழுவதும் மாலை வரை மகே திரன் சுற்றிக் காட்டிய அவனது பண்ணை வீட்டை பார்ப்பதிலேயே நேரம் கழிந்தது.

மகேந்திரனும் சலிக்காமல் அறைகளிலிருந்து தோட்ட தோப்பு என்று ஒன்று விடாமல் காட்டி விளக்கினா



''அடாடா... இவ்வளவு பெரிய்ய்ய்ய்...ய பணக்காரரா நீங்கள்?'' என்றாள் காஞ்சனை. மை விழிக் கண்கள் விரிய.

''ம்ம்.. பெரிய்ய்ய்...ய பணக்காரன்தான். தலையில் கொம்புகூட இருக்கிறது பார்த்தாயா?'' என அவளைப் போலவே நீட்டி இறக்கிப் பேசிச் சிரித்தான் மகேந் திரன்.

''அட... என்னைப் போல சுட்டியாய் அதற்குள் பேச ஆரம்பித்து விட்டீர்களே..!''

''எல்லாம் காஞ்சனா டீச்சரம்மாவிடம் கற்றுக் கொண் டதுதான்...''

''ம்ம்... ம்ம்... அப்படியாவது சிறு பையன் சிறு பிள்ளைத்தனம் என உங்களை ஒத்துக் கொண்டீர்களே? அது போதும். இனி என் போன்ற பெரியவர்கள் சொல் கேட்டு நடக்க வேண்டும். புரிகிறதா?''

''புரிகிறது. எல்லாம் தங்களது உத்தரவு மகாராணி...''

அவள் போலியாய் மிரட்டியதற்கு அவனும் போலி யாய் தலையை குனிய வைத்து சலாம் அடித்தான்.

''அட... இப்படி கிண்டல் கூட செய்வீர்களா..?''

''எல்லாம் அங்கு படித்த பாடம்தான்...'' என அவள் பக்கம் காட்டினான் அவன்.

''ஓஹோ...''

''எனக்கு உன் சுட்டித்தனம் ரொம்பவும் பிடித்து விட்டது காஞ்சனை...'' என மகேந்திரன் ரசித்துச் சொல்ல,

''எனக்கு உங்கள் மீசை ரொம்பவும் பிடித்திருக்கிறது...'' என்று பதிலுக்குச் சொல்லி கெக்க பிக்கச் சிரிப்பு சிரித்து ஓடினாள் காஞ்சனை.

இரண்டு மூன்று நாளே பழகிய ஒரு அந்நியனிடம் இப்படி சிரித்துப் பேசி கிண்டலடித்து உரிமையாய் பேசுமளவுக்கு தான் எப்படி மாறினோம் என்றே வீடு வரும்வரை காஞ்சனைக்கு அடங்காத ஆச்சரியமாய் மனதுள் எழுந்தது.

பக்கத்தில் கூடவே வந்த வாயாடி செண்பகக் கண்ணு கூட ஒரு வார்த்தை மகேந்திரனிடம் பேசினாளா? இடித்த புளி மாதிரிதானே இருந்தாள்? அவள் மட்டுமா... இந்த மகேந்திரன் கூட அவளிடம் பேசவில்லைதானே? மகேந்திரன் அவளிடம் தான் பேச மிகுந்த ஆர்வம் காட்டுவதாகவும் அவளுக்குத் தோன்றியது.

இரண்டு நாள் கழித்து நடந்த சம்பவம் ஒன்றும் அதையே உறுதிப்படுத்தியது.

அவனது தென்னந்தோப்பு தோட்டப் பக்கம் தன் தோழிகளோடு அவள் உலா போக அங்கு.. மரங்களுக்குப் பாத்தி கட்டுவதை கவனித்தபடி மகேந்திரன் நின்று கொண்டிருப்பதை அவள் பார்த்தாள்.

அவள் பார்க்கும்போதே அவனும் அவளைப் பார்த்து விட்டான். உற்சாகமாய் எழுந்து வந்தான்.

வந்தவன் அவளைப் பார்த்து, ''என்ன காஞ்சனை என்னைப் பார்த்தால்... உன்னைக் கடித்து தின்று விடுவேன் என்ற பயமா? எப்போதும் தோழிகள் புடை சூழவே வருகிறாய்? அவ்வளவு பெரிய பயந்தாங்



குள்ளியா நீ..?'' எனக் கேட்க அவன் கிண்டலாய் கேட்பதைப் பார்த்து காஞ்சனை பதில் சொல்வதற்குள், ''பயந்தாங் கொள்ளி அவள் இல்லை. நாங்கள் தான்..!'' என பயந்தடித்துக் கொண்டு ஓடினார்கள் தோழிமார்கள்.

காஞ்சனை தடுத்தும் கேட்கவில்லை. திரும்பிய காஞ்சனைக்கு வந்ததே கோபம். நெஞ்சு நிமிர்த்தி அவனைப் பார்த்தவள், ''எனக்கு என்ன பயம் உங்களிடம்?'' என்றாள் முறைப்புடன்.

''என்ன.. என்னிடம் ஒரு ஆண் மகனிடம் உனக்கு பயமே இல்லையா?'' என சிரிப்புடன் பக்கத்தில் வந்த மகேந்திரன் டக்கென அந்தக் காரியத்தைச் செய்தான்.

மெல்ல கரங்களால் சட்டென அணைத்து மறுகணமே அவளை விடுவித்தான் அவன்.

காஞ்சனை இதை சற்றும் எதிர்பார்க்கவில்லை.

''ச்சீ..! விடுங்கள்..! என்ன இது..?'' காறி உமிழாத குறையாய் முகம் வெட்டினாள் அவள்.

பின் அவள் அதே கோபத்துடன் வெடுக்கென போகப் போனாள்.

''நில் அப்படியே...!'' என்றான் மகேந்திரன் ஆணையிடுவது போல்.

இவன் சொன்னால் அவள் என்ன நின்று விடுவாளா?

சிறிதும் சட்டை செய்யாமல் நகரப் போனாள் அவள்.

சட்டென அவளது தோளை அவனது வலுவான கரம் பற்றியது.

ஆ! என்ன இது? உரிமையாய் தோளைப் பிடிக்கிறானே..? என அவள் கொதித்து நினைக்கும்போதே கன்னத்தையும் ஒரு சேரப் பற்றி அவனை நோக்கி அவளது பார்வையைத் திருப்பினான்.

''என்னை... எனது கண்களை நன்றாகப் பார்...!'' என்றான் உறுமுவது போல்.

காஞ்சனையும் திடுக்கிட்டவள் விழிகளை விரித்தே அவனது விழிகளை ஊடுருவினாள்.

சலனமே இல்லாமல் அவனது பார்வை தெரிந்தது.

''பார்! நன்றாகப் பார்! எவ்வித உணர்வும் சலனமும் இல்லாமல் என் விழிகள் தெரிகிறதா? அது போல்தான் என் மனதும்! புரிந்து கொள்; என்னிடம் எவ்வித தவறான எண்ணமும் இல்லை!'' என்றான் உறுதியான குரலில்.

''பின் ஏன் அப்படிச் செய்தீர்கள்?''

''அது... விளையாட்டு...'' என்று உரக்கவே சொன்னவன் நிறுத்திவிட்டு, ''ஏன்... நீ எத்தனை முறை என்னிடம் எப்படியெல்லாம் விளையாட்டாய் பேசியிருக்கிறாய்? நான் கோபிக்கவா செய்தேன்? சிரித்து ரசிக்கத்தானே செய்தேன்?'' அவன் உரிமையும் ஆவேசமுமாய் மூச்சு வாங்க கேட்டு முடித்தான்.

அவள் பதில் சொல்லாமல் ஓரிரு நிமிடங்கள் அவனையே வெறித்து யோசித்தாள்.

இவன் சொல்வது உண்மைதானோ? நாம் தான் அவசரப்பட்டு மூக்கு நுனி சிவந்து விட்டோமோ? நிஜமாகவே விளையாட்டுக்குத் தான் சொல்லியிருப்பானோ?



அவள் தலை சட்டென தாழ்ந்து கீழ் நோக்கியது.

''எனக்குப் புரிகிறது. ஸாரி...!'' என்றாள் மெல்ல மென்மைக் குரலில்.

''ம்ஹூம்! ஸாரி சொன்னால் மட்டும் போதுமா?'' என்றான் அவன் சற்றும் கோபம் குறையாதவன் போல்.

''பின் வேறு என்ன செய்ய வேண்டும்?'' அவள் புதிராய் நிமிர்ந்தாள்.

''உன் முப்பத்திரண்டு 'ஈ'யன்னாக்களை காட்டி 'ஈ' என இளிக்க வேண்டும். புரிகிறதா?'' அவன் கொஞ்சமும் சிரிக்காமல் சீரியஸாய் சொல்லி... கலகலவென நகைக்க ஆரம்பித்தாள் காஞ்சனமாலா.

காஞ்சனமாலாவுக்கு என்னவோ அவன் மகேந்திரனை சீண்டிப் பார்க்கும் எண்ணமோ அடிக்கடி அப்படியே பேசினாள். ''எங்கள் செல்வம் அத்தான் எப்படித் தெரியுமா?'' என கண்கள் விரிய ஆரம்பித்து, ''ஒருமுறை நெல் சாகுபடி நேரத்தில் மழை தொடங்க இரவோடிரவாய் குடோன் ஒன்று பிடித்து நெல் மூட்டைகளை பத்திரப் படுத்தியது, சூரைக்காற்று ஒரு சமயம் வீசிய போது வாழைக் குலைகளை கயிறு வைத்து கட்டி பாதுகாத்தது'' என மூச்சு விடாமல் சொல்லி முடித்தாள்.

பொறுமையாக கேட்ட மகேந்திரன், ''நல்லது காஞ்சனை. நான் ஒத்துக் கொள்கிறேன். உன் செல்வம் மாமா. நல்லவர். வல்லவர். அசகாய சூரர்தான். வேண்டுமானால் அவர் வந்தவுடன் நான் அவரை தலையில் தூக்கி

வைத்துக் கொண்டு 'ததிங்கிணத்தோம்...' ஆட்டம் ஒன்று ஆடி விடட்டுமா?'' என்றான் சிரிக்காத அப்பாவி போல் முகத்தை வைத்துக் கொண்டு.

கலகலவென அடக்க முடியாமல் சிரித்து விட்டாள் காஞ்சனமாலா.

அவள் அப்படி பளீரென சிரிப்பதை உற்றுக் கவனித் தவன், ''அட... இந்த முத்துப் புன்னகைக்கு உன்னையும் கூட அவருடன் சேர்த்து தூக்கி வைத்துக் கொண்டு ஆடலாம்தான்..!'' எனக் கூறி மேலும் அவளை அதிரத் தான் வைத்தான் மகேந்திரன்.

காஞ்சனை அவன் சொன்ன விஷயத்திற்காக அதிர வில்லை. அவன் அப்படி தன் புன்னகையை புகழ்ந்து சொன்னதும் தன்னையறியாமல் தன் முகம் சிவந்து போனதை கண்டுதான் அதிர்ந்து போனாள்.

அதன் பின் அதே நகையுணர்வுடன் அவளிடம் பேசி விட்டு அகன்று விட்டான். அவனிடம் விடைபெற்று வீடு வரும் வரை காஞ்சனை அதே இதழ் விரிந்த சிரிப்பு போஸுடன் மகேந்திரனின் நகைச்சுவை உணர்வை எண்ணிச் சிரித்தபடியே வந்தாள் என்றுதான் சொல்ல வேண்டும்.

ஆனால் வீட்டுத் தோட்டப் பக்கம் நின்று கொண் டிருந்த செல்வம் அந்த அவளது தானாகச் சிரித்து கொண்டு வரும் போஸை கவனித்து விட்டான். அவன் முகம் கடுகடுப்புக்கு போனது.

அதே கோபத்துடன் அவள் முன் விரைவாய் வந்தான்

''என்ன காஞ்சனை இன்னமும் சிறு குழந்தை போல பொறுப்பில்லாமல் சிரித்துக் கொண்டு... பெரிய



பெண்ணாய் நீ வளர்ந்து விட்டதை அடிக்கடி மறந்து விடுகிறாயே?'' என்றான் குற்றம் சாட்டுபவன் போல்.

''பெரிய பெண்ணாய் வளர்ந்து விட்டேன்தான். அதற்காக சிரிக்கக் கூடாதா?''

வெடுக்கென பதிலுக்கு காஞ்சனை சுண்டிக் கேட்ட தும் அவசரப்பட்டுக் கோபத்தைக் காட்டி விட்டோமோ? என செல்வம் முகம் கூம்பியவன் சட்டென சுதாரித்துக் கொண்டு, ''அப்படி ஒன்றும் இல்லை. சொன்னால் நானும் அந்த நகைச்சுவையை உணர்ந்து சிரிப் பேனே..?'' என சமாளிக்கவும் செய்தான்.

# 5

மறுவாரம் வேறு எதையும் நினைக்க முடியாத படி ஊரிலிருந்து அத்தை வந்து இறங்கி விட்டாள். அத்தை கனகம் தந்தை கைலாசநாதரின் ஒன்று விட்ட தங்கை. அவளுக்கு ஒரே மகள் கோமளா. அவள் வயிற்றுப் பிள்ளைகளாய் ஒரு பேரனும் இரண்டு பேத்தி களும்.

கோடை விடுமுறையாகையால் மகளையும் மூன்று பேரன்டுகளையும் கூட்டிக் கொண்டு கிராமத்துக் காற்றை அனுபவிக்க பூம்பொழிலுக்கு வந்து விட்டாள் அத்தை.

தந்தையும் மகளும் உற்சாகமாய் வரவேற்று உபசரித்தனர். அதிலும் காஞ்சனமாலாவிற்கு கனகம் அத்தையை ரொம்பவும் பிடித்துப் போக ஒரு காரணமும் இருந்தது.

கனகம் எப்போதும் அவளை 'காஞ்சனாக் கண்ணு...' என விளித்து வாஞ்சையுடன் அழைக்கும்போது, சிறு வயது குழந்தையாய் தன்னைக் கொஞ்சிய தாயின் முகம் அவளுக்கு வந்து போகும். அதனாலே ஒரு தாயின் பரிவை அவளிடம் உணர்வாள் அவள்.

அதைவிட வாண்டுகளான நீலா, பூமா, சேகர் வந்து விட்டால் அவளுக்கு குஷியுடன் கும்மாளமும் சேர்ந்து விடும். அவர்களுடன் தானும் சிறு குழந்தை போல் ஆகி ஒவ்வொரு விளையாட்டாய் விளையாட ஆரம்பித்து விடுவாள்.

அவர்களை பக்கத்து மேட்டுத் திடல், கூட்டிப் போய் அவர்களோடு வண்ண வண்ண காற்றாடிகளை பறக்க விடுவாள். பண்ணைக்கார மாந்தோப்புக்குக் கூட்டிப் போய் மாங்காய்கள், கொய்யாக் கனிகளை மரக்கிளைகளை ஆட்டி நெல்லிக்காய், கொடுக்காப்புளி என ஒவ்வொன்றாய் பொறுக்கித் தின்பது சுவாரஸ்யமான அனுபவம்.

இது போதாதென்று தோழிகள் மல்லிகைக் கொடி, செண்பகக் கண்ணு வந்து விட்டால் அவர்களுடன் சேர்ந்து எல்லாரும் பாண்டி விளையாட்டு, தாயக்கட்டம், கள்ளன் போலீஸ், கொல கொலயா முந்திரிக்கா, கபடி விளையாட்டு, சீட்டுக்கட்டு என்று ஒன்று விடாமல் விளையாடுவர்.



அது என்னவோ அந்த சிறு சிறு வாண்டுகளோடு விளையாடும் போது எல்லோருக்கும் அளவு கடந்த சந்தோஷமாகவும் குதூகலமாகவும் இருக்கும்.

ஆனால் எத்தனையோ முறை செல்வத்தை வாண்டுகள் விளையாடக் கூப்பிட்ட போதும், ''ச்சு.. இது... என்ன கூத்து?'' கடிந்து முகம் வெட்டி அகன்று விடுவான். சில சமயம் கொஞ்சம் உரிமையெடுத்து காஞ்சனையிடமே, ''எதற்கு இந்த வாண்டுகளுடன் சிறு பிள்ளைத்தனமாய் விளையாடுகிறாய்?'' என கண்டிக்க முயல்வது உண்டு.

''போங்கள் மாமா.. உங்களுக்கு புரியாது...'' என்று அவனைப் போலவே முகம் வெட்டி அகன்றதும் வாயை மூடி விட்டான் செல்வம்.

ஆனால் மகேந்திரன் தற்செயலாய் காஞ்சனையைத் தேடி வந்தவன் வாண்டுகள் இருப்பதைப் பார்த்து தன் தோட்டத்து கனிகளை, கடைத் தெருவிற்குச் சென்று விளையாட்டுப் பொருட்கள் குவியலோடு முதல் நாளே நுழைய... மாமா... மாமா.. என உடனடியாய் அவனைச் சூழ்ந்து கொண்டன வாண்டுகள். அன்றே அவர்களுக்கு உற்ற தோழனாகி விட்டான் மகேந்திரன்.

தினம் மகேந்திரன் வந்து வாண்டுகளுக்காக நேரம் ஒதுக்கி விளையாடினான். புதுப்புது கதைகள் சொல்வான். தன் பெரிய பண்ணை வீட்டுக்கு அழைத்துச் சென்று அங்குள்ள தோட்டங்களில் விளையாட விட்டான். காஞ்சனா, காஞ்சனா தோழிகள், வாண்டுகள், மகேந்திரன் என எல்லோரும் சேர்ந்து நேரம் போவது தெரியாமல் விளையாடுவார்கள்.

அன்றும் அப்படித்தான் மதிய நேரம் தோட்ட வேலை களை முடித்து விட்டு காஞ்சனை வீட்டுப் பக்கம் வந்து கொண்டிருந்தான் மகேந்திரன். நீலா, பூமா, சேகர் இன்னும் பக்கத்து வீட்டு சிறுசுகள் என ஒரு பத்து பேர் வாண்டுகளாய் சேர்ந்து பந்து எறிதல் விளையாட்டில் மும்முரமாய் ஈடுபட்டிருந்தனர்.

தடதடத்த புல்லட் பைக்கில் மகேந்திரன் வருவதைப் பார்த்ததும் அந்த வாண்டுகளுக்கு ஒரே உற்சாகம். ''மகேன் மாமா நீங்க எங்க கூட விளையாட வாங்க..!'' என கையைப் பிடித்து இருபுறமும் இழுக்க ஆரம்பித்து விட்டனர்.

மகேந்திரனோ சிரிப்புடன் பைக்கை விட்டு இறங் கியவன் அவனும் உற்சாகமாகி விளையாடத் தயாராகி விட்டான். கூடவே திண்டில் உட்கார்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த காஞ்சனையையும் தோழிகளை யும் கை காட்டினான்.

வாண்டுகளுக்கு புரிந்து விட்டது. பூமாவும் குண்டு பாலுவும் சில வாண்டுகளுடன் ஓடி வந்து காஞ்சன மாலாவின் கையைப் பிடித்துக் கொண்டனர். ''அக்கா நீங்களும் விளையாட வாருங்கள். நாம் ஒரு டீம். அவ கள் எதிர் டீம்!'' என படபடவென அவளை இழுத்துத் தயாராகி விட்டனர்.

காஞ்சனமாலா என்ன பேச என்ன சொல்ல என்று முடிவெடுப்பதற்குள், ''மகேன் மாமா தலைமையில் நாங்கள் எதிர் டீம்!'' என ஓங்கிக் குரல் கொடுத்தான் ஒல்லிப்பிச்சான் என சொல்லப்படும் பக்கத்துத் தெரு வாண்டு முகேஷ்.



கடைசியில் ஒருவாறு முடிவு செய்யப்பட்டு காஞ் சனை தலைமையில் ஒரு டீமும் மகேந்திரன் தலைமை யில் ஒரு டீமும் தொடங்கப்பட்டு விளையாட்டுத் தொடங்கியது.

பந்து எறியும் 'வாலிபால்' விளையாட்டு என்பதால் பந்தை தரையைத் தொடாமல் அடிக்கும் லாவகத்திற் காக அத்தனை வாண்டுகளும் 'ஹோ..'வென கூச்ச லிட்டபடி விளையாண்டு கொண்டிருந்தனர்.

ஒவ்வொரு டீமுக்கும் மதிப்பெண் போடும் நடுவராக ரெப்ரீ போல் எதிர்வீட்டு கிட்டு மாமா தேர்வு செய் யப்பட்டு அவருக்கு ஏற்ற கிடுகிடு நாற்காலி ஒன்றில் அவர் உட்கார வைக்கப்பட்டார். அவர் அந்தக் காலத்து வாலிபால் ப்ளேயராம்.

போட்டியில் அதிக மதிப்பெண் பெற்று ஜெயிக்கும் டீமுக்கு பெரிய கப் வெனிலா ஐஸ்க்ரீம்களை தோற்ற டீம் வாங்கிக் கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனை வேறு.

விறுவிறுவென ஆட்டம் கூச்சலும் கும்மாளமும் பொங்கத் தொடங்கியது. முதல் ஐந்து நிமிட வீச்சி லேயே மகேந்திரன் லாவகமாய் பந்தை வீசி எதிர் அணியை திணறடித்தான். தனது டீமிற்கான முதல் மதிப்பெண்ணை பெற வைத்தான்.

அப்படி மகேந்திரன் டீம் மார்க் எடுத்ததும் காஞ்சனை யின் டீமில் உள்ள பூமாவும் குண்டு பாலுவும் துடிக்காத குறையாய் அவளிடம் பரபரத்தனர். ''அக்கா விடாதீர்கள். உங்கள் திறமையைக் காட்டுங்கள். எப்படியும் நாம் ஜெயித்தாக வேண்டும்!''

வாண்டுகளின் உசுப்பல்கள் ஒருபுறமிருக்க... மகேந்திரனும் தன் காலரைத் தூக்கி விட்டபடி, "பாருங்கள் தோற்கப் போகிற டீம் அது..!" என குரல் கொடுக்க கடுப்பாகிப் போனது காஞ்சனையின் டீம்.

காஞ்சனையும் தோழிகளும் சேலையை வரிந்து கட்டிக் கொண்டு கோதாவில் இறங்கினர். குறி பார்த்து பந்தை வீசினர். தாவிப் போய் பிடித்தனர். மின்னலாய் சுழன்று அடித்தனர். அப்படி அவர்கள் டீம் காட்டிய வேகத்தில் அடுத்த இரண்டு நிமிடத்திலேயே பந்தை தட்ட முடியாமல் கோட்டை விட்டது மகேந்திரன் டீம்!

மறுபடியும் ஹோ.. வென கூச்சல்! துள்ளிக் குதித்த வாண்டுகள் காஞ்சனையை சூழ்ந்து கொண்டு கைகளைத் தட்டினர்.

எதிர் டீம் வாண்டுகளோடு கோபமாகி, "மாமா விடா தீர்கள். பந்தை வைத்து நீங்கள் லாவகமாய் அடிக்கும் 'கட் பால்' அடி அடியுங்கள். எதிர் டீம் தோற்று விடும்!" என மகேந்திரனை உசுப்பேற்றிக் கொண்டிருக்க மகேந்திரனும் வீரமாய் இறங்கி விளையாடுவது போல் வேகம் காட்டினான்.

அவன் அப்படி விளையாடுவதை ஓரிரு சமயம் உற்றுக் கவனித்த காஞ்சனை அப்போதுதான் அதையும் கவனித்தாள்.

அவன் மகேந்திரன் வாண்டுகள் முன்னிலையில் தான் பரபரப்பாய் விளையாடுவது போல் வேகம் காட்டினானே தவிர பந்து வீச்சில் சாதாரணமாகவே எளிதில் பிடிக்கும் படியாகவே வீசினான். வேண்டுமென்றே வேகமாய்



பந்துக்கு பதிலடி கொடுத்து திணறடிக்காமல் மெதுவாகவே அடித்தான்.

வாண்டுகள் சொன்ன அந்த கட்பால் அடியைக் கொடுக்க எத்தனையோ சந்தர்ப்பங்கள் வந்த போதும் அவன் கொடுக்காமல் சும்மாகவே இருந்தான்.

அரை மணி நேரத்தில் மற்றொரு மதிப்பெண் பெற்று எளிதில் ஜெயித்து விட்டது காஞ்சனையின் டீம்! 'ஐயோ நன்றாக சொதப்பி எங்களை கவிழ்த்து விட்டீர்களே மகேன் மாமா..' என அவனது டீம் வாண்டுகள் சூழ்ந்து கொண்டு மகேந்திரனை வறுத்தெடுத்துக் கொண்டிருக்க... அசட்டுப் புன்னகையுடன் அவர்களைச் சமாளித்து சமாதானம் பண்ணிக் கொண்டிருந்தான் அவன்.

காஞ்சனையின் பக்கமோ.. குஷியாய் சந்தோஷக் கூச்சலிட்ட வாண்டுகள் அவளை இறுக கட்டிப் பிடித்து முத்த மழை பொழிந்து கொண்டிருந்தார்கள். கடைசியில் போட்டியின் விதிமுறைப்படி மகேந்திரன் சார்பில் ஜெயித்த டீம்மிற்கு பெரிய கப் வெனிலா ஐஸ்க்ரீம் வழங்கப்பட்டது.

எதிர் அணி டீம் வாண்டுகள் நோகக்கூடாது என்பதற்காக காஞ்சனாவும் தனது செலவில் அந்த டீம் வாண்டுகளுக்கு அதே வெனிலா ஐஸ் க்ரீமை வாங்கிக் கொடுத்து குஷிப்படுத்தினாள்.

எல்லோரும் போட்டியை மறந்து சிரிப்புடன் கை குலுக்கினர். ஆர்வமாய் ஐஸ் க்ரீமை சுவைக்க ஆரம்பித்தனர்.

காஞ்சனை அவைகளை கண் குளிர ரசித்தவாறு மகேந்திரன் பக்கம் போனாள். மகேந்திரன் அதே

குறுஞ்சிரிப்புடன் அவளிடம் ஒரு ஐஸ்க்ரீமை நீட்டி னான். வாங்கிக் கொண்டவள் அவனையே இமைகள் விரிய உறுத்துப் பார்த்தாள்.

''என்ன அப்படி ஒரு பார்வை பார்க்கிறாய்?'' என்றான் அவன்.

''நீங்கள் வேண்டுமென்றே.. சரியாக விளையாட வில்லை. அது எனக்குத் தெரியும்!'' என்றாள்.

''அதை நீ கண்டு பிடித்து விட்டாயா?'' என புருவம் உயர நிமிர்ந்தவன் கண்களாலேயே சிமிட்டலோடு அவளைப் பார்த்துச் சிரித்தான்.

அவளுக்கு அவனது செய்கையின் அர்த்தம் சுத்த மாய்ப் புரியவில்லை.

''எதற்காக?'' என்றாள் ஆவல் அடங்காமல்.

''எல்லாம் அதற்காகத்தான்..'' என்றான் அவன் திரும் பவும் விட்டேற்றியாய்.

''புரியவில்லை...'' என அவள் மை விழிகளை விரிக்க பக்கத்தில் வந்து அவள் விழிகளை உற்றுப் பார்த்த மகேந் திரன், ''உன் மனம் நோகக் கூடாது. அதற்காகத்தான்!'' என்றான் அழுத்தமான குரலில்.

## 6

காஞ்சனைக்கு மகேந்திரனைப் பற்றிய அந்த விஷயம் ரொம்ப நாளாய் உறுத்திக் கொண்டே இருந்தது. அன்று அடக்க முடியாமல் கேட்டே விட்டாள்.



''ஏன்.. இவ்வளவு பெரிய பண்ணை வீட்டில் நீங்கள் மட்டும் தனியாய்? மற்ற சொந்தங்களை எல்லாம் அடித்துத் துவைத்து விரட்டி விட்டீர்களா?'' என்றுதான் துடுக்காய் ஆரம்பித்தாள்.

அவள் சொன்னதைக் கேட்டு ரசித்துச் சிரித்தவன், ''ஒரு வகையில் அப்படித்தான். ஆனால் விரட்டியது நான் இல்லை. என் தந்தையின் தந்தை. தாத்தா மகேந்திர பல்லவ பூபதி. அவர் என்ன செய்தார் தெரியுமா?'' என பெரிய ரகசியம் போல் நிறுத்தினான்.

''ம்ம்.. கதை ரொம்பவும் சுவாரஸ்யமாய் இருக்கிறது சொல்லுங்கள்...!'' என்றாள் அவளும் கண்கள் விரிய கன்னத்தில் கை வைத்தவாறு.

''அவர் தனது பூர்வாங்க சொத்து முழுவதும் பேரனான எனக்கு மட்டும்தான் சொந்தம் என்று தெளிவாக உயில் எழுதி ரிஜிஸ்தர் செய்து விட்டார்.

மற்ற மாமா, சித்தப்பா, பெரியப்பா... என இங்கு புடைசூழ குடும்பம் நடத்திக் கொண்டிருந்த சொந்தங் களுக்கு எல்லாம் பெரிய அதிர்ச்சி! திகைத்துப் போய் விட்டார்கள். பல கெட்டப் பழக்கங்களை உடைய அவர்களுக்கு சொத்துக்களைக் கொடுத்தால்.. கெட்ட வழிகளில் அழித்து விடுவார்கள் என்றே என் தாத்தா அவர்களுக்கு எழுதி வைக்கவில்லை. அது அவர்களுக்கு பெரும் கோபத்தைக் கிளப்ப... உங்கள் உறவே வேண்டாம்... என ஒரு நாள் கோபமாய் சண்டையிட்டு வெளியேறி சென்று விட்டனர். எனக்கும் உடன் பிறந்தவர் யாரும் கிடையாது. நான் என் தந்தைக்கு ஒரே பிள்ளை. சிறு வயதிலேயே தாயைப் பறிகொடுத்தவன்.

அதனால் வேறு வழி? நானும் தந்தை மற்றும் பணியாட்களின் அரவணைப்பிலேயே வளர்ந்தேன். இன்று என் தந்தையும் மறைந்து விட்டதால்.. நான் ஒருவன் மட்டும் தனியாளாய் வளர்ந்து..."

அவன் மகேந்திரன் அப்படியே சோகமாய் நிறுத்த, "ம்ம்.. அப்படி வளர்ந்து பெரிய ஆளாகி... இப்போது என் எதிரில் நின்று பேசிக் கொண்டிருக்கிறீர்கள். அப் படித்தானே?" என சிரிப்புடன் கேட்டு முடித்தாள் காஞ்சனை.

"ஹேய்... நான் எவ்வளவு சீரியஸாய் சோகமாய் சொல்லிக் கொண்டிருக்கிறேன். நீ என்னடாவென்றால்... விளையாடுகிறாய்?" என்றான் லேசான கோபப் பார்வையுடன்.

அதற்கும் வேகமாய் தலையாட்டினாள் காஞ்சனை.

"மிஸ்டர் மகேந்திரன், வாழ்க்கையே ஒரு விளையாட்டுத்தான். அதில் நாமெல்லாம் இறைவனால் ஆட்டுவிக்கப்படும் பொம்மைகள்!" என ஒரு தத்துவத்தையும் உதிர்த்தாள்.

"ஆஹா.. தத்துவம் பிரமாதம்!" என பதிலுக்கு கோபத்தை மறந்து சிரித்தான் அவன்.

அவன் அப்படி வாய்விட்டுச் சிரிப்பதைப் பார்த்து டக்கென கைகளைச் சுண்டினாள் அவள்.

"பார்த்தீர்களா... பார்த்தீர்களா? எவ்வளவு சோகமாய் சுய இரக்கத்தோடு பேசிக் கொண்டிருந்தீர்கள்.. நான் கேலியாய் சொன்னதும் உடனே அந்த சோகத்தை மறந்து சிரித்து விட்டீர்கள்தானே? இப்போது புரிகிறதா.. எனது



துடுக்குப் பேச்சு கூட நன்மைதான் செய்யும் என..!" பெரிய கண்டு பிடிப்பு போல் கண்களை விரித்து உருட்டிச் சொன்னாள் காஞ்சனை.

"புரிகிறது.. புரிகிறது... காஞ்சனை டீச்சரம்மா...! தங்களது பள்ளியில் என்றுமே நான் மாணாக்கன்தான்... கடைசி பெஞ்சு மாணவன்தான்..!"

"அதைப் புரிந்தால் சரி.. அடிக்கடி நினைவு படுத்திக் கொண்டால் சரி..!" சொல்லியபடி நிமிர்ந்து கொண்ட காஞ்சனை என்ன நினைத்தாளோ.. தன் கைகளால் அவன் தலையில் செல்லமாய் ஒரு குட்டு வைத்து விட்டு வேகமாய் ஓட ஆரம்பித்தாள்.

அவளது செய்கை மகேந்திரனையும் குறும்பாக்கி விட, "ஆ.. என்ன தைரியம்..? என்னை குட்டிக் கொண்டு ஓடுகிறாயா..? உன்னை விட்டேனா பார்..!" என துரத்துவது போல் பின்னால் வர ஆரம்பித்தான்.

திரும்பி அவன் அப்படி வருவதை உணர்ந்த காஞ்சனை, "அட.. என்னைப் பிடிப்பதா...? அதெல்லாம் நடவாத காரியம்... பார்க்கிறீர்களா?" என்றபடி துள்ளி ஓடும் மான் போல் தோப்பு மரங்களுக்கிடையே ஓடினாள்.

'அதையும் பார்த்து விடுவோமே..' என்றபடி அவளைப் பிடிப்பது போல் விரட்ட ஆரம்பித்தான் மகேந்திரன்.

விடுவிடுவென ஓடி சிட்டாய் காஞ்சனை பறந்தாலும் வலுவான மகேந்திரனின் ஓட்டத்தின் வேகம் முன் அவளால் ஈடு கொடுக்க முடியவில்லை.

ஐந்து நிமிடத்திற்குள் அவளைத் தாவிப் பிடித்து விட்டான் மகேந்திரன்.

பிடித்தவன் அப்படியே கரங்களால் அவளை அழுத்திப் பிடித்துக் கொண்டு, ''என்னை தலையில் குட்டினாய் அல்லவா... அதற்கு உனக்கு சரியான தண்டனை கொடுக்கப் போகிறேன்..'' என்றான் குரலை உயர்த்தியவாறு.

அவன் அப்படி தன்னை இறுக்கிப் பிடித்திருப் பதைக் கூட கொஞ்சமும் உணராத காஞ்சனை, ''தண் டனையா..? அதுவும் எனக்கா?'' என்றுதான் இடக்காய் கேட்டாள்.

''ம்ம்.. பெரிய தண்டனை... கொடுக்கப் போகிறேன் அதைக் கேட்டால் நீ பயந்து நடுங்கப் போகிறாய்...'' என்றான் மகேந்திரன் பிடியை விடாமல் பீடிகை போட்டவாறு.

''ஆமாம்.. ஆமாம்.. நான்... இந்த பூம்பொழில் கிராமத்திலேயே பார்க்க முடியாத பெரிய பயந்தாங் குள்ளி! அதனால் நீங்கள் கொடுக்கும் தண்டனையைப் பார்த்து அப்படியே நடுநடுங்கி போய் விடுவேன் தான்..!'' சொல்லியபடி கலகலவென சிரிக்க ஆரம்பித் தாள் அவள் முகம் நிமிர்த்தி கம்பீரமான பார்வையை பார்த்தபடி.

மகேந்திரனோ, ''காஞ்சனை இந்தத் தண்டனை நீ நினைப்பது போல் இல்லை. ரொம்பவும் பயங்கரமானது. நீ அப்படியே வெலவெலத்து விடுவாய்...'' என்று மேலும் பேச்சை வளர்த்தான்.

அவள் காஞ்சனை புருவங்களை உயர்த்தி, ''அப்படி என்ன தண்டனை..?'' என நிஜமாகவே யோசனையுடன் வியக்க... அதுவரை தன்னோடு வளைத்துப் பிடித்திருந்த



கரங்களை மெல்ல விலக்கி அவளை விடுவித்தான் மகேந்திரன்.

''ம்ம்... தண்டனை முடிந்து விட்டது...'' என்றான் முணங்கலாய். அவளை குறும்புப் பார்வை பார்த்த வாறு.

மறுபடியும் புரியாமல் விழித்தவளிடம்,

''இன்னுமா உனக்குப் புரியவில்லை? உன்னை சில நிமிடம் அப்படியே என்னோடு இறுக்கிக் கட்டிப் பிடித்துக் கொண்டு நின்றேனே... அது... அதுதான்... தண்டனை! நான் உனக்குக் கொடுத்த அன்புத் தண் டனை..!''

அவன் சொல்லி முடிக்க.. உண்மை புரிந்தவளாய் குப்பென முகம் சிவக்க ஓடினாள் காஞ்சனை!

# 7

ஒவ்வொரு நாளும் மகேந்திரனுடன் பேசுவது காஞ்சனைக்கு உற்சாகமாய் பெரும் சந்தோஷத்தையே கொடுத்தது. வார்த்தைக்கு வார்த்தை அவளுடன் போட்டி போட்டுக் கொண்டு மல்லாடுவது அவளுக்கு இனம் புரியா ஒரு துள்ளல் உணர்வைக் கொடுத்தது.

அவன் மகேந்திரன் இப்போது தான் அறிமுகமானவன் புதியவன் அந்நியன் என்ற எண்ணமெல்லாம் மறைந்து

போய் அவனுடன் நீண்ட நாள் பழகியது போன்ற உணர்வே ஏற்பட்டது.

அன்றும் விடிந்ததும் அதேபோல் அவனைத் தேடித் தான் போனாள். பண்ணை வீட்டில் அவன் இல்லை. பணியாள் அவன் திராட்சைத் தோட்டத்தைப் பார்வை யிட சென்றிருப்பதாய்ச் சொல்ல.. அவள் அங்கே சென்று அவனைச் சந்திக்க முடிவெடுத்தாள்.

மகேந்திரனுடைய திராட்சைத் தோட்டம் ஊர்க் கோடியில் விஸ்தாரமான பரப்பளவில் அமைந்திருந்தது. தோழிகள், ''அங்கு போனால் ரொம்ப நேரமாகும். நாங்கள் வரவில்லைப்பா...'' என்று கழன்று கொள்ள... வாடகை சைக்கிள் ஒன்றை எடுத்துக் கொண்டு கிளம்பி விட்டாள். பத்து நிமிட அழுத்தத்தில் திராட்சைத் தோட் டத்தையும் அடைந்து விட்டாள்.

தோட்ட முகப்பில் மகேந்திரனின் புல்லட் பைக் கம் பீரமாக நின்று கொண்டிருந்தது. அது பழங்கள் பழுக்கும் பருவம் ஆனதால்... பணியாளர்களால் காயாய் பூத் திருந்த திராட்சைகளை பாதுகாத்து.. நெளிசலாய் படர்ந்த கொடிகளை நேர்படுத்தி.. பூச்சிகளை அண்ட விடாமல் ரசாயனக் கலவைகளை தெளித்து.. என வெவ்வேறு பணிகளில் ஈடுபட்டிருந்தனர்.

அவர்களுக்கு பணிகளை பிறப்பித்தபடி தோட்டத்தை சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தான் மகேந்திரன். அவள் சைக்கிளை ஸ்டாண்ட் செய்துவிட்டு உள்ளே நுழைவ தையும் பார்த்து விட்டான்.

அவன் கண்களில் பெரும் ஆச்சரியம் ஓடியது. அது விலகாதவனாய் புருவம் உயர அவளை நெருங்கினான்.



''என்ன விஷயம் காஞ்சனை? என்னைத் தேடி இங்கே வந்து விட்டாய்?'' என அவன் கேட்டபோதுதான் காஞ் சனைக்கு சுருக்கென்றது.

அவள் இதைக் கொஞ்சமும் யோசிக்கவில்லையே...! அவன் வீட்டில் இல்லா விட்டால் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று போகாமல் தேடிக் கண்டு பிடித்து பேச ஓடி வந்திருக்கிறாளே?

அப்படி.. என்ன பேச்சு? காணாததைக் கண்டது போல்.. அவனிடம் ஒரு நாள் பார்த்து பேசா விட்டால் தூக்கம் வராதது போல் அல்லவா ஓடி வந்திருக்கிறாள்..?

சே! என்ன நினைப்பான் இந்த மகேந்திரன்? சரியான அலைகிற கேஸ் என்றுகூட தன்னை நினைத்துக் கொள்ளக் கூடுமே!

பயமாய் நினைத்து தன்னைத்தானே நொந்து கொண் டவள் பேசாமல் இவன் நம்புகிற மாதிரி ஏதாவது பொய்யைச் சொல்லி தப்பித்து விடுவோமா..? என யோசனையை ஓட விட்டாள்.

''பொய்களைத் தேட வேண்டாம்.. காஞ்சனை! உண்மை உன் கண்களில் அப்படியே அப்பட்டமாய் தெரிகிறது.''

இடியாய் கர்ஜனை போல் அவன் குரல் ஒலிக்க அவள் திடுக்கிடவே செய்தாள்.

எவ்வளவு சரியாய் கண்டு பிடித்து விட்டான்! சரி யான எமகாதகன்தான்!

அவள் வேண்டுமென்றே தனது மை விழிகளை. மேலும் அகல விரித்து படபடவென கருவிழிகளை உருட்டிக் காட்டினாள்.

''எங்கே.. மிஸ்டர் மகேந்திரன் சார், இன்னும் கொஞ்சம் நன்கு நன்றாக என் கண்களை உற்றுப் பார்த்து... வேறு என்னவெல்லாம் தெரிகிறது. என கண்டு பிடித்துச் சொல்லுங்களேன்..'' என்றாள் துடுக் கான குரலில்.

அவன் மகேந்திரனும் விடாமல், ''அதற்கென்ன சொன்னால் போயிற்று'' என உற்றுப் பார்த்தவன் சீரிய ஸான முகத்துடன், ''ம்ம்... வரிசையாக சொல்லட்டுமா? காலை எழுந்து பல் துலக்கி குளித்து பத்து பதினாறு இட்லிகளை ஒரு பிடி பிடித்து அப்படியே பால் ஒரு செம்பு நிறைய குடித்து... முறுக்குச் சீடை என பலகார வகைகளைச் சட்டியில் கை விட்டு அள்ளி வாயின் இரண்டு பக்கங்களிலும் திணித்துக் கொண்டு... இதை யெல்லாம் ஒன்று விடாமல் தின்று விட்ட பற்களைக் காட்டி என் முன் ஈயென இளித்துக் கொண்டு...''

அவன் நிறுத்த... அதற்கு மேல் பொங்கிய சிரிப்பை அடக்க முடியாமல் கலகலவெனச் சிரித்து விட்டாள் காஞ்சனை.

'அட.. சொல்லி முடிப்பதற்குள் மறுபடியும் ஈயென ஒரு இளிப்பா? போதுமடா சாமி..!' என போலியாய் அவன் கைகூப்பி மறுபடியும் கேலியில் இறங்க இம் முறை கைகளால் மறைத்தபடி அடக்க முடியாத சிரிப்பை மேலும் உதிர விட்டாள்.

பின் சட்டெனச் சிரிப்பதை நிறுத்தியவள், ''இப்போது புரிகிறதா மிஸ்டர் மகேந்திரன்? இதற்காகத்தான் இப்படிக் குலுங்கக் குலுங்க உங்களுடன் சிரித்துப் பேசத்தான் இங்கு ஓடி வந்தேன்'' என்றாள் முன்பு அவன் கேட்ட கேள்விக்கு சரியான விளக்கம் கொடுப்பது போல்.



அவனும் சிரிப்பையும் கேலியையும் நிறுத்தியவன், ''அப்படியா..? அது ஒன்று மட்டும்தான் காரணமா?'' என்றான் சந்தேகக் குரலில்.

''ம்ம்.. அதில் என்ன சந்தேகம் உங்களுக்கு? வேறு என்ன காரணம் இருக்கக்கூடும் என நீங்கள் நினைக் கிறீர்கள்?'' பெரிதாய் அதிர்ந்து கேட்பது போல் முகத்தில் வியப்பும் கூட்டிக் கேட்டாள் அவள்.

''எதுவும் இருந்தால் அறிந்து கொள்ளலாம் என்று தான்..!'' அவளை மேலும் நோட்டமிடுவது போல் இழுத் தான் அவன்.

''அப்படி அறிந்தால்... என்ன செய்வீர்களாம்?'' என்றாள் அவள் துடுக்காக.

''இப்படித் தூண்டில் போட்டுக் கேட்டால் எல்லாம் நான் சிக்க மாட்டேன்..'' அவன் சிரிக்க ஆரம்பிக்க, ''நானும் லேசில் சிக்க மாட்டேன்ப்பா!'' எனக் கூறி அவனை மறு படியும் அதிர வைத்தாள் அவள்.

## 8

அன்று அப்படி விழுந்தடித்து காஞ்சனை திராட்சைத் தோட்டம் சென்று மகேந்திரனைப் பார்த்தது செல்வத் திற்கு எப்படியோ தெரிந்து விட்டது போலும்.

மறுநாள் காலை அடுப்பில் குஷியோடு சுள்ளிகளைப் பொறுக்கிப் போட்டு வெந்நீர் போட்டுக் கொண்டிருந்த அவளைத் தேடி வந்து விட்டான்.

''என்ன.. காஞ்சனை நேற்று உன்னைத் திராட்சைத் தோட்டம் பக்கம் பார்த்ததாகச் சொன்னார்கள.. உண் மையா?''

பீடிகையாய் கேட்டவாறு அவள் முகக் குறிப்பையே உற்றுக் கவனித்து ஆராய்ந்தான்.

அவன் செல்வம் எதைக் கேட்க வருகிறான் என்பது காஞ்சனைக்கு நன்கு புரிந்தாலும் புரியாதவள் போல் முகத்தை வைத்துக் கொண்டாள்.

'திராட்சைத் தோட்டமா?' என யோசிப்பது போல் செய்து விட்டு தலையை ஆமோதிப்பது போல் அசைக் கவும் செய்தாள்.

அத்தோடு மறுபடியும் சுள்ளிகளைப் பொறுக்கிப் போடுவதில் கவனம் காட்டினாள்.

அவள் அதற்கு மேல் பேசாமல் நிறுத்தி விட்டது செல்வத்திற்கு ஏமாற்றமாய் எரிச்சலாய் இருந்தது. இருந்தாலும் அடக்கிக் கொண்டு அடுத்த கேள்வியை வீசினான்.

''எதற்கு காஞ்சனை? சும்மாதானா?'' என்றான்.

காஞ்சனைக்கு அவன் அப்படி நோண்டுவது எரிச்ச லையே உண்டு பண்ணியது.

அதனாலே, ''சும்மாதான்! திராட்சைப் பழங்களை பார்த்து ரொம்ப நாள் ஆகியிருந்தது. அதனால் தான் போய் பார்த்தேன்...'' என்றாள் வெடுக்கென குரலோடு.

செல்வத்திற்கு அவள் கோபப்படுவது புரிந்தது. இருந்தாலும் அவன் மண்டையைக் குடையும் விஷயங் களைக் கேட்டாக வேண்டுமே?



ஆனாலும் அவளை எரிச்சல் படுத்தக் கூடாது என்ற உணர்வோடு, ''பழங்கள் எல்லாம் நன்றாய் இருந்ததா காஞ்சனை?'' என அவள் சொன்ன தொனியிலே கேட்டான்.

'அட.. இப்படிக் கூட இவனுக்குப் பேச வருமா?' என திரும்பி கண்கள் அகல அவனைப் பார்த்த காஞ்சனை குபுக்கெனச் சிரித்தாள்.

''ம்ம்.. பழங்கள்... கறுப்பாய்... அழகாய்... கொத்துக் கொத்தாய் தொங்கிக் கொண்டிருந்தது பார்ப்பதற்கு ரம்மியமாய்த் தெரிந்தது. ரொம்பவும் ரசித்துப் பார்த் தேன்..'' என்றாள் கொண்டிருந்த சிரிப்பை விடாமல்.

செல்வத்திற்கு அவளது நகைப்பு ரசிப்பை ஏற்படுத் தாமல் எரிச்சலையே உண்டு பண்ணியது.

இவளிடம் இப்படி நாசுக்காய் கேட்டால் எல்லாம் உண்மையைச் சொல்ல மாட்டாள் என நினைத்தவன் நேரிடையாகவே கேட்க தீர்மானித்து, ''தோட்டத்து சொந்தக்காரர் அந்த மகேந்திரன் சார்தானே?'' என்றான்.

''ம்ம்.. அவர்தான்! அதிலென்ன சந்தேகம்?'' ஜடை கள் ஆட வேகமாய் தலையாட்டி மறுபடியும் சிரித்தாள் அவள்.

''அப்படியானால்... காஞ்சனை... நீ... நீ...'' என ஆரம் பித்து அதற்கு கேட்கத் தயங்குபவன் போல் செல்வம் நிறுத்தினான்.

''ம்ம்.. கேளுங்கள் அத்தான்...''

காஞ்சனை கொடுத்த தைரியத்தில் டபக்கென அந்தக் கேள்வியையும் வீசினான் செல்வம்.

''அப்படியானால்.. காஞ்சனை.. நீ... பார்க்கப் போனது மகேந்திரன் சாரையா அல்லது திராட்சைத் தோட்டத் தையா... சொல்.. காஞ்சனை..?''

அவளை ஏதோ குற்றவாளிக் கூண்டில் ஏற்றி கேட்பது போல் கேட்க காஞ்சனையின் முகம் மாறியது. ''எதற்கு கேட்கிறீர்கள்?'' என்றாள் அதே வேகத்துடன்.

''சும்மாதான் காஞ்சனை...'' செல்வம் குரலை இறக்கி மழுப்பினான்.

காஞ்சனைக்குப் புரிந்து விட்டது. செல்வம் நேற்று மகேந்திரனை சென்று பார்த்ததைப் பார்த்திருக்கிறான், அல்லது யாரோ சொல்லியிருக்கிறார்கள்..! அதைத்தான் நேரிடையாகக் கேட்காமல் இப்படிச் சுற்றி வளைத்து...

எதற்காக? என வியந்து யோசித்தவள் இதில் மறைப்ப தற்கு என்ன இருக்கிறது என்ற முடிவில், ''இரண்டும் தான்...'' என்றாள்.

செல்வத்திற்கோ எரிச்சல். ''அது.. என்ன காஞ்சனை இரண்டும் என்று? கொஞ்சம் விளக்கமாகச் சொல்லேன்..'' என்றாள் விடாமல்.

காஞ்சனை இம்முறை எழுந்து கைகளை குறுக்காய் கட்டிக் கொண்டாள்.

''ம்ம்.. என்ன விளக்கமாக சொல்ல வேண்டுமா..? சொல்லி விட்டால் போயிற்று.. மிஸ்டர் செல்வம் அத் தான், நான் மிஸ்டர் மகேந்திரன் சாரைப் பார்த்துப் பே வும், திராட்சைப் பழங்களைப் பார்த்து ரசிக்கவும் போனேன். இதுதான் நான் சொன்ன இரண்டு கா ணங்கள். இப்போது எல்லாம் விளக்கமாகப் புரிந்ததா.



இல்லை இன்னும் இதைவிட...'' என்றபடி காஞ்சனை நிறுத்திச் செல்வத்தின் முகத்தை உற்றுப் பார்த்தாள்.

அவன் திருதிருவென விழிப்பதைப் பார்த்துவிட்டு கடகடவெனச் சிரிக்க ஆரம்பித்தாள். அப்போதுதான் செல்வத்திற்கு சீரியசாய் தான் கேட்ட கேள்வியை கேலியும் கிண்டலுமாய் அவள் மாற்றி விட்டாள் என்பது புரிந்தது.

ஆயினும் அதை வெளிக்காட்டாமல் அசட்டுச் சிரிப்பொன்று சிரித்தவன் சமாளித்தவாறு, ''அது வேறு ஒன்றும் இல்லை காஞ்சனை. நீ சொல்லியிருந்தால் நானும் உன்னுடன் வந்திருப்பேன். எனக்கும் மகேந்திரன் சாரின் திராட்சைத் தோட்டத்தைப் பார்க்க கொள்ளை ஆசை...'' என்றான்.

காஞ்சனைக்கு அவனது சமாளிப்பைக் கண்டு மறு படியும் சிரிப்புதான் பொங்கியது.

''என்ன கொள்ளை ஆசையா அத்தான்?''

''ஆமாம்.. ஆமாம்...!'' காஞ்சனையை நோக்கி பல மாய் தலையாட்டினான் செல்வம்.

''அப்படியானால் நாளையே நாம் இருவரும் அங்கு போவோம் அத்தான். நீங்கள் திராட்சைத் தோட்டத்தைப் பாருங்கள். நான் மகேந்திரன் சாருடன் பேசிக் கொண் டிருக்கிறேன். என்ன சரிதானா?''

கேட்டுவிட்டுச் சிரிப்பை அடக்கி மீண்டும் அவன் முகத்தை உற்றுப் பார்த்தாள் காஞ்சனை.

ஆனால் அதற்கு மேல் செல்வத்தினால் பொறுமை யாய், கோபத்தை அடக்கி இருக்க முடியவில்லை!

பட்டென முகத்தை கடுகடுப்பாக்கியவன், ''நான் வர
வில்லை. நீயே போய்க்கொள்...!'' என்றபடி விடுவிடு
வென நடக்க ஆரம்பித்தான்.

''அட... கோபத்தைப் பாரேன்!'' என உதடு குவிய
விரிந்தபடி அவன் போவதையே ஆச்சரியமாகப் பார்த்
தாள் காஞ்சனை.

# 9

அந்த வாரம் ஆரம்பம் முதலே தடபுடலாகி விட்டது
காஞ்சனைக்கு. தோழி செண்பகக் கண்ணுவின் மூத்த
சகோதரிக்குத் திருமணம். செண்பகக் கண்ணு குடும்பத்
திற்கு சொந்த பந்தம் என்று சொல்லிக் கொள்ள ஒரு
சில பேரே இருந்த காரணத்தினால், திருமணத்தை
தானே முன் நின்று பொறுப்பேற்று நடத்த தீர்மானித்
தாள் காஞ்சனை.

மணப்பெண் அலங்காரத்திலிருந்து பந்தி சாப்பாடு
வரை அவளது ஏற்பாடுதான். திருமணச் செலவுக்கு
தனது பங்காக தனது சேமிப்பு பணத்திலிருந்து பத்
தாயிரம் ரூபாயை தந்தையிடம் பேசிச் சம்மதம் வாங்கி
செண்பகக் கண்ணுவிடம் அளித்திருந்தாள்.

நாளை விடிந்தால் கல்யாணம். அந்த பூம்பொழில்
கிராமத்தில் உள்ள சிறிய திருமண மண்டபத்தில் எல்லா
ஏற்பாடுகளையும் செய்து வந்தபடி பம்பரமாய் சுழன்று
கொண்டிருந்தாள் அவள்.



''அட... கல்யாணம் உனக்கே நடப்பது போல்.. என்ன
ஒரு குஷி..!'' - திடீரென பழக்கப்பட்ட குரலும்
கிண்டலான கணைப்புச் சப்தமும் கேட்க திடுக்கிட்டுத்
திரும்பினாள்.

பின்னால்.. குறும்புச் சிரிப்புடன் மகேந்திரன்!

''அட... வம்பளக்க.. வந்தாயிற்றா..? சரி தான்..!'' என
அவனைப் போலவே ஒய்யாரக் குரலில் ஆரம்பித்து
பேசிக் காட்டியவள், ''ஏன்.. மிஸ்டர், எனக்கும் கல்
யாணம் என்ற ஒன்று நடக்கத்தானே போகிறது?
அப்போது இந்த தலையைப் பிய்த்துக் கொள்கிற 'குஷி'
எழுந்து என் கண்களுக்குத் தெரிந்தால் அதை உங்
களுக்கு கண்டிப்பாய் காட்டுகிறேன். போதுமா?''
என்றாள்.

மகேந்திரனும் விடவில்லை.

''ம்ம்.. காட்டுவாய்... காட்டுவாய்.. உன் அந்த
முப்பத்திரண்டு ஈயன்னாக்களை. டூத் பேஸ்ட் விளம்பரம்
போல் வைத்துக் கொண்டு கண்ணாடியைப் பார்த்தாலே
போதுமே? அந்த குஷியைக் கண்டு பிடித்து விட
லாமே?''

காஞ்சனையும் சளைக்கவில்லை.

''அப்படியா மகேந்திரன் சார்? எனது குஷியை அப்படி
சிரமப்பட்டு தேடிக் கண்டு பிடித்ததற்கு மிகவும் நன்றி..''
என்றவள் விடாது,

''அங்கு மட்டும் என்ன வாழுதாம்? அந்த அடர்ந்த
கறுப்பு புதர்களுக்கு கீழே வெள்ளைக் குத்தீட்டி போன்று
வரிசையாய் நின்று குஷியை அடிக்கடி காட்டத்தானே
செய்கிறது?'' என பதிலடியும் கொடுத்தாள்.

மகேந்திரன் கோபப்படாமல் அதை ரசித்து தனது கடகட சிரிப்பை உதிர்த்தவன், "அட.. என் மீசை உனக்கு கறுப்பு புதரா? அதை அப்படி இப்படி ரொம்பவும் பிடித்திருக்கிறது. என்றெல்லாம் அன்று எவ்வளவு ரீல் விட்டாய்.. அது எல்லாம் பொய்தானே?" எனவும், "பொய் தான்! அதான் ரீல் என்று நீங்களே சொல்லி விட்டீர்களே.. பின் என்ன?" என்றாள் மடக்கும் தோரணையில்.

மகேந்திரன் கைகளை உயர்த்தி போலி கும்பிடு ஒன்றை போட்டவன், "ஒத்துக் கொள்கிறேன். மகாராணி இந்த தடாலடி பேச்சில் உன்னை வெல்ல முடியாது தான்!" என்றான்.

மறுபடியும் சிரித்தவாறு,

காஞ்சனையும் பதிலுக்குச் சிரித்து விட்டு,

"சரி.. விஷயத்துக்கு வருவோம் மகேந்திரன், சார். நாளைவிடிந்தால் செண்பகக் கண்ணு சகோதரியின் திருமணம். நீங்களும் கூட மாட இருந்து ஒத்தாசை செய்கிறீர்களா?" எனவும், மகேந்திரன் பலமாய் தலையாட்டினான்.

"அது மகாராணியார் உத்தரவு! நிறைவேற்றக் காத்திருக்கிறேன்.." என்றான் குரலை உயர்த்தியவாறு.

காஞ்சனையும் வேலை சொல்ல கொஞ்சமும் தயங்கவில்லை. மறுநாள் அதிகாலை செய்ய வேண்டிய வேலைகள் சிலவற்றை வரிசைப்படுத்தி அவனிடம் பொறுப்புகளை ஒப்படைத்தாள்.

மகேந்திரன் கவனமாய் கேட்டுக் கொண்டு அகன்றான்.



பார்த்துக் கொண்டிருந்த தோழி செண்பகக் கண்ணுவிற்குத் தான் பகீரென்று இருந்தது. "டீ.. காஞ்சனை, அவர் பண்ணை வீட்டு ஜமீன்தார்... அவரைப் போய் என் வீட்டு எடுபிடி வேலைகளை செய்யச் சொல்லியிருக்கிறாய். உனக்கு என்னதான் ஆயிற்று?" என்றாள் பதட்டத்தோடு.

காஞ்சனைக்கும் செண்பகக் கண்ணு சொல்வதைப் பார்த்து நாம்தான் அவசரப்பட்டு விட்டோமோ? என துணுக்கென்றது.

ஆனால் மறுநாள் மகேந்திரன் எவ்வித சங்கோஜமுமில்லாமல் காஞ்சனை சொன்ன அவ்வளவு வேலைகளையும் இழுத்துப் போட்டுக் கொண்டான். எவ்வித கௌரவமும் பார்க்காமல் ஒரு பண்ணையாளைப் போல் ஓடியாடி செய்தான். அவனது நடவடிக்கையைக் கண்டு மொத்த கிராமமே அவனை ஆச்சரியமாய்ப் பார்த்தது.

காஞ்சனைக்கும் பெருமிதம்தான்! பெரிய பணக்காரனாய் இருந்தும் எளிமையாய் எல்லோருடைய கஷ்ட நஷ்டங்களை உணர்ந்தவனாய் நல்ல குணத்துடன் இருக்கிறானே! என அதிசயப்பட்டாள்.

ஆனால் மகேந்திரனே, "எல்லாம் உனக்காகத்தான் காஞ்சனை. உனக்காக எது வேண்டுமானாலும் நான் செய்வேன்.." என்று கூறி அவளை மேலும் அதிர வைத்தான்.

கூடவே கல்யாண வைபவ நிகழ்ச்சியின் போதும், கல்யாண சடங்குகள் ஒவ்வொன்றாய் நடக்கக் கண்கள் விரியப் பார்த்த காஞ்சனையின் தோள்களை வந்து இடித்து கிண்டல் கேலி செய்யவும் தவறவில்லை.

''பார், மணமேடையில் மணப் பெண் எப்படி தலையை குனிய வைத்துக் கொண்டு இருக்கிறாள்... நாளை அது போல்தான் நீயும் இருக்க வேண்டும். அத னால் இப்போதே நன்றாகத் தலையை குனிய வைத்துப் பழகிக் கொள்...!'' என்றான்.

காஞ்சனையும் விடவில்லை.

கைகளை முஷ்டியால் மடக்கி செல்லமாய் அவன் தலையில் ஒரு வலிக்காத குட்டு ஒன்றும் வைத்தாள்.

''இது... கல்யாண வைபவ நிகழ்ச்சி. உங்கள் கிண்டல் கேலியை எல்லாம் மூட்டை கட்டி விட்டு நடப்பதைப் பாருங்கள் சார்..!'' என்றாள் அதிகாரம் செய்யும் தொனி யில்.

இருவரும் கலகலவெனச் சிரித்தார்கள்.

அப்படி அவர்கள் மனம் விட்டுச் சிரிப்பதை கூட்டத் தில் தூரமாய் நின்றபடி ஒரு உருவம் எரிச்சலுடன் பார்த்துக் கொண்டிருந்தது.

அது... செல்வம்!

## 10

காஞ்சனைக்கு என்னவோ தெரியவில்லை. அவள் மகேந்திரனிடம் எதாவது செய்து வம்பிழுக்க வேண்டும் என்றே தோன்றியது போலும்!



மறுநாள் மகேந்திரன் ஊரில் இல்லை. தோட்டப் பயிர்களுக்கு உரம் வாங்குவது சம்பந்தமாக பக்கத்து ஊர் சென்றிருக்கிறான் என்பது தெரிந்ததும் தோழியர் படையோடு கிளம்பி விட்டாள்.

நேராய் அவனது மாஞ்சோலை தோப்பிற்கு அவர் களை கூட்டிச் சென்றாள். மகேந்திரனுக்குச் சொந்தமான மாந்தோப்பு அது. பல ஏக்கர் பரப்பளவில் விஸ்தாரமாய் நிறைய மரங்களோடு அமைந்திருந்தது.

அது கனியாகும் பருவம் என்பதால் மரங்களில் கொத்துக் கொத்தாய் மாங்கனிகள் தொங்கியபடி. பார்த்த காஞ்சனையையும் தோழிமார்களையும் ஆசை பிடித்து ஆட்டியது.

தயங்கிய தோழிகளிடம், ''சும்மா வாங்கடி. திருட்டு மாங்கனியின் சுவையே தனி...'' என்று தைரியம் கொடுத்தவள் தோப்பின் நுழைவாய் இருந்த தடுப்பு வேலிகளை அகற்றி உள்ளே கூட்டிப் போனாள்.

தோழிகள் மல்லிகைக் கொடியும் செண்பகக் கண் ணும் எதிர் வீட்டுக் குமுதாவும் பயப்படவே செய்தனர். ''அட... நம்ம மகேந்திரன் சார்தான்..டி.. ஒன்றும் சொல்ல மாட்டார். பயப்படாமல் நீங்கள் வாருங்கள்..!'' என தொனிக் கொடுத்து கூட்டிப் போனாள் காஞ்சனை.

உள்ளே தோட்ட காவலாளி போட்டு விட்டுச் சென் றிருந்த பம்ப் செட்டில் இருந்து தண்ணீர் வெள்ளமாய் நிரம்பி வழிந்து வரிசையாய் கட்டப்பட்டிருந்த பாத்தி களுக்குச் சென்று கொண்டிருந்தது.

பெரிய தொட்டியையும் நுரையாய் பொதுமும் வெள்ளை நீர்க் குவியலைப் பார்த்ததும் காஞ்சனைக்கு குளிக்க வேண்டும் என்ற ஆசை வந்து விட்டது.

''முதலில் அலுப்பு தீரக் குளியல். ஒன்று போடு வோம். பின் மாங்கனிகளைப் புசித்து பசியாற்றுவோம் சரியா?'' என தோழிகளைப் பார்க்க மூவரும் தலையாட் டினர்.

உடனே உடைகளை குளிக்கத் தயார் செய்து கொண்டு எல்லோரும் தொட்டியில் இறங்கி விட்டனர்.

சுமார் ஒரு மணி நேரத்திற்கு நால்வரும் ஒரே ஆனந்தக் குளியல்தான்! தண்ணீரை ஒருவர் மீது ஒருவர் அடித்துக் கொண்டு... ஒவ்வொருவராய் பிடித்து முங்க வைத்து ஒன்று இரண்டு மூன்று என எண்களை எண்ணி விளையாடிக் கொண்டு.. நீச்சல் தெரியாமல் பயந்து பயந்து குளிக்கும் மல்லிகைக் கொடியை ஆள் ஆளுக் குப் பிடித்து தண்ணீருக்குள் அழுத்தி அவளை பயங் காட்டி விளையாடிக் கொண்டு... என நேரம் போவதே தெரியாத அளவுக்கு கும்மாளமும் குதூகலமுமாய் விளை யாடினார்கள் அவர்கள்.

பின் குளியலை முடித்து உடை மாற்றி தோப்புக்குள் நுழைந்தனர். காஞ்சனை விடுவிடுவென மரம் ஏறி நல்ல பழுத்த கனிகளாய் பார்த்து பறித்துப் போட்டாள்.

கனிகளை எல்லாம் பொறுக்கிச் சேர்த்துக் கொண்டு நிழலாய் தெரிந்த பெரிய மேட்டுத் திண்டில் எல் லோரும் உட்கார்ந்தனர். மாங்கனிகளை ஒவ்வொன்றாய் எடுத்து சப்புக் கொட்டாத குறையாய் சுவைபட ரசித்து புசிக்க ஆரம்பித்தனர்.

அப்படி அவர்கள் ருசித்து ரசித்து உண்ண ஆரம்பித்த போதுதான் அந்த கம்பீர கணைப்புச் சத்தம் பின்னால் இருந்து கேட்டது.



திரும்பிப் பார்த்தாள் கைகளைக் கட்டியபடி மகேந் திரன்!

ஆஹா! இன்று எல்லோரும் வசமாக மாட்டிக் கொண் டீர்கள்! கைகளைத் தட்டியபடி உற்சாகமாய் கத்த வெலவெலத்துப் போயினர்.

''ஐயோ.. காஞ்சனை! வசமாய்.. மாட்டிக் கொண் டோம்.. டி..''

தோழிகள் எல்லோரும் பயத்தில் நடுங்க ஆரம்பிக்க.. அதைக் கண்டு மேலும் குதூகலித்த மகேந்திரன், ''இருங்கள்.. உங்கள் அனைவரையும் தோப்பு நடு மரத்தில் கயிற்றால் கட்டி கடி எறும்புகளால் கடிக்க விட்டு.. உங்கள் கொழுப்பையெல்லாம் கரைத்து உங்களை ஒரு வழி பண்ணுகிறேன்!''

கண்களை உருட்டி மிரட்டலாய் அவன் சொல்லியபடி அவர்களை நெருங்கினான். புலி பாய்ச்சலாய் பயந்து ஓட்டம் பிடித்தனர் தோழிமார்கள்!

''ஏய்... நில்லு..! நில்லுங்கடி..! நான்.. நான் இருக் கிறேன்.. எல்லாவற்றையும் பார்த்துக் கொள்கிறேன்..!'' என தைரியமாய் நின்று ஓடியவர்களை பார்த்து கையசைத் தாள் காஞ்சனை.

ஆனால் அவர்களாவது நிற்பதாவது...!

கையும் களவுமாய் மாட்டிக் கொண்டது காஞ்சனை ஒருத்தி மட்டும்தான்!

கையில் அவள் வைத்திருக்கும் மாங்கனியை உற்றுப் பார்த்தாள்.

அதைப் பார்த்து, ''திருட்டு மாங்காய்க்கு ருசி ஜாஸ்தி. கொஞ்சம் சாப்பிட்டுப் பார்க்கிறீர்களா?'' கொஞ்சமும்

பயமில்லாமல் கையிலிருந்த பாதி கடித்த மாங்கனியை நீட்டினாள்.

''அடாடா.. பொல்லாத துணிச்சல்தான்! கீழே விழுந்தும் மீசையில் மண் ஒட்டாத குறை தான்!''

சொல்லியபடி அவன் சிரிக்க, ''மீசை இருந்தால் தானே மண் ஒட்டுவதற்கு?'' வெடுக்கென சொன்னவள் விடாது, ''மிஸ்டர் மகேந்திரன், நீங்கள் ஒன்றும் பயப் படத் தேவையில்லை. நானும் தோழிகளும் பறித்த மாங்கனிகளுக்கு கணக்கு வைத்துக் கொள்ளுங்கள். நாளை பணம் கொண்டு வந்து பைசா பாக்கி இல்லாமல் கொடுத்து விடுவேன்..'' என்றாள் தோள்களைக் குலுக்கி ஒருவித அலட்சியத்தோடு.

மகேந்திரன் மீசையை நீவி முறுக்கிக் கொண்டு பெரிதாய் தலையாட்டினான். ''அது சரிதான்! காய்களைத் திருடி விட்டு... பின் கூலி வேறா?'' என்றவன், ''இதோ பார் காஞ்சனை, இப்படியெல்லாம் பேசி என்னிடம் தப்பிக்க முடியாது...'' என்றான் மிரட்டுவது போல்.

''ஓஹோ! இப்படியெல்லாம் பேசி என்னை மிரட்ட விடவும் முடியாது...'' என்றாள் பதிலுக்கு காஞ்சனை.

''என்ன... தப்பு செய்தும் உனக்கு உரைக்கவில்லையா! பயம் வரவில்லையா?''

''ஒன்றும் வரவில்லை..! எது வருகிறது என்று சொல் லட்டுமா?'' என்றாள் பீடிகை போல் பேசி நிறுத்தி வாறு.

மகேந்திரன் புரியாமல் நெற்றியைச் சுருக்கிக் கொண்டு பார்த்தான்.



''சொல்லு! எது வருகிறது?''

''வேறென்ன? சரியான இளிச்சவாயனாக இருக்கும் உங்களைப் பார்த்து முப்பத்திரண்டு ஈயன்னாக்களை காட்டிக் கொண்டு ஓட வேண்டும் என்றுதான்...!''

- சொல்லியபடி கலகலவென முத்துப்பல் நகைப்பை உதிர்த்தபடி அவனிடமிருந்து தப்பித்து ஓடினாள் காஞ்சனை!

# 11

கனகம் அத்தை காஞ்சனை அடிக்கடி வெளியே செல்வது மகேந்திரனை சந்தித்துப் பேசுவது பற்றி யெல்லாம் எப்படியோ தெரிந்து கொண்டாள். அவளுக்கு மகேந்திரனைக் கண்டதும் துள்ளிக் குதி போட்டுக் கொண்டு ஓடும் காஞ்சனையின் உற்சாகம் ரொம்பவும் யோசிக்க வைத்தது.

அதனாலே கைலாசநாதரிடமே மகேந்திரன் பற்றி காஞ்சனை அவனுடன் பழகுவது பற்றி விசாரிக்க ஆரம்பித்து விட்டார். அவள் பயத்திற்கு பெரிதும் சிரித்த கைலாசநாதர், ''நீ ஒன்றும் பயப்படத் தேவையில்லை கனகம். அந்தத் தம்பி மகேந்திரன் பெரும் பணக்காரன் மட்டுமல்ல. நல்ல குணமுள்ள மரியாதைக்காரன்...'' என்று முடித்தார்.

ஆனாலும் கனகத்திற்கு அந்த சந்தேகம் வந்து விட்டது. ''அண்ணா, இன்னொரு விஷயம்...'' என இழுத்தாள்.

''கேளு... கனகம்...''

''காஞ்சனைக்கு செல்வம்தான் என நினைத்து வைத்திருக்கிறீர்களா.. உங்கள் அபிப்ராயம் நான் என்ன?'' என்றாள் வெளிப்படையாய். கைலாசநாதர் மறுபடியும் சிரித்தவர், ''நானும் மனதுள் அப்படித்தான் முடிச்சுப் போட்டு வைத்திருந்தேன். ஆனால்...''

''சொல்லுங்கள் அண்ணா...''

''அப்படி நம் எண்ணத்தை குழந்தைகள் மீது திணிக்காமல் அவர்களையே சுதந்திரமாக முடிவெடுக்க விட்டு லாம் எனவும் எனக்கு தோணுகிறது.''

''அப்படியா?''

''ஆமாம் கனகம். கொஞ்சம் யோசித்துப் பார். வாழப் போவது அவர்கள். அவர்களே நன்கு சிந்தித்து முடிவெடுக்கட்டுமே. நாம் போய் ஏன் அதில் வற்புறுத்தல் செய்ய வேண்டும்.''

''நீங்கள் சொல்வது புரிகிறது அண்ணா. இருந்தாலும் காஞ்சனை...''

மறுபடியும் நகைப்புக்குப் போன கைலாசநாதர், ''காஞ்சனை ஒன்றும் சின்னப் பெண் இல்லை கனகம். அவளுக்கு எல்லா விபரங்களும் நன்கு தெரியும். சிந்தித்து முடிவெடுக்க அவளுக்குத் தெரியும். அதனால் அவளிடமே அந்தப் பொறுப்பை விட்டு விடப் போகி றேன்..'' என்றார்.



இருவரும் பேசிக் கொண்டிருக்க அந்த பேச்சுக்கள் முழுவதும் தற்செயலாய் அங்கு வந்த செல்வம் காது களில் விழுந்தது.

அப்படியே திகைத்துப் போனான் செல்வம்!

மாமா கைலாசநாதரா இப்படி பேசுவது என அவனுக்கு ஒரே அதிர்ச்சி!

இதுநாள் வரை காஞ்சனை அவனுக்குத்தான் என்பது போலத்தானே நடந்து வந்தார். பேசி வந்தார். இப்போது என்னாயிற்று? என் இந்த மாற்றம்?

எல்லாவற்றையும் காஞ்சனையின் முடிவிற்கே விட்டு விடுவோம் என்கிறார். எதனால் இப்படிச் சொல்கிறார்?

புரியாமல் குழம்பித்தான் போனான் செல்வம்.

அவனை இன்னொரு விஷயமும் பிடித்து வாட்டியது. மாமா.. காஞ்சனையின் விருப்பம்தான் என்று சொல்லி விட்டார். ஒருவேளை காஞ்சனைக்கு... விருப்ப மில்லை... தன்னைப் பிடிக்கவில்லை என்று சொல்லி விட்டால்? நினைத்துப் பார்க்கவே அவனுக்கு பயமாய் இருந்தது.

எல்லாவற்றுக்கும் காரணம் மகேந்திரன்!

அவன் வந்ததினால்.. வந்து காஞ்சனையுடன் பழக ஆரம்பித்ததினால்... வந்த விபரீதம் குழப்பம் இது!

அவனை மட்டும் தடுத்து விட்டால், காஞ்சனை யோடு பழகுவதை எப்படியாவது நிறுத்தி விட்டால்... எவ்வித பிரச்சினையும் இருக்காது.

யோசித்தவன் அதற்காகத் திட்டங்களைத் தீட்டவும் ஆரம்பித்தான்.

காலையில் அப்படி மகேந்திரன் காஞ்சனையை தேடி வரும் சமயம் வேண்டுமென்றே வீட்டு வாசல் முன் போய் நின்று ஏதோ வேலை செய்வது போல் நின்று கொள்வான்.

மகேந்திரன் காஞ்சனையை தேடிக் கேட்பதற்கு முன்னாலே, "காஞ்சனை வீட்டில் இல்லையே... வெளியே எங்கோ சென்றிருக்கிறாள்.." என கூசாமல் பொய்யும் சொன்னான்.

மகேந்திரனோ அதை அப்படியே நம்பி ஒரு சின்ன தலையசைப்புடன் அகன்று போய் விடுவான். இந்தக் கூத்து இரண்டு மூன்று நாள் தொடர்ந்து நடந்தது.

ஆனால் நான்காம் நாள் காஞ்சனையையே மகேந் திரனை தேடி அவன் பண்ணை வீட்டுக்குச் சென்று பேசப் போய்விட கைகளைக் குத்திக் கொண்டு திகைத்தான் செல்வம்.

அதை எப்படியாவது தடுத்துப் பார்ப்போம் என நினைத்து முயற்சி செய்தவன் அப்படி காஞ்சனை மகேந் திரனை சந்திக்கச் செல்லும் போது எதாவது சாக்கு வைத்து அவளோடு சென்றான்.

அப்படி அவர்கள் பேசும்போது அவனும் உடன் இருந் தால் அவர்களால் கொஞ்சிப் பேசிச் சிரித்து கூத்தடிக்க முடியாது அல்லவா? என்பது அவனது எண்ணம்.

ஆனால் காஞ்சனை எவ்வித சங்கோஜமுமில்லாமல் தாராளமாய் வா.. என்பது போல்தான் அவனையும் கூட்டிப் போனாள். மாஞ்சோலை தோப்பில், திராட்சைத் தோட்டத்தில், பண்ணை வீட்டில் என ஒவ்வொரு



இடத்தில் மகேந்திரனுடன் காஞ்சனை பேசச் செல்லும் போதும் செல்வம் உடன் இருந்தாள்.

ஆனாலும் அது எவ்வித பிரயோஜனமும் அளிக்க வில்லை. அவன் நினைத்தது போல் இல்லாமல் இரு வரும் பொது விஷயங்கள், உலக நடப்புகள் என வெவ்வேறு கோணத்தில் பேச்சைத் தொடர... அவனால் அதில் கலந்து கொள்ள முடியவில்லை. கொஞ்சமும் அதில் ரசித்து லயிக்க முடியவில்லை. ஆனால் மகேந் திரனும் காஞ்சனையும் அப்படி பொதுப்படையான விஷயங்களைப் பேசியே விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

அதிலும் காஞ்சனை அவன் மகேந்திரன் என்ன ஒரு வார்த்தை சொன்னாலும் சரி.. காது மடல்கள் அதிர கலகலவெனச் சிரிப்பதாய் செல்வத்திற்குத் தோன்றியது.

அப்படி என்னத்தைச் சொல்லி விட்டான்? இதற்குப் போய் இந்தச் சிரிப்பு சிரிக்கிறாளே? என கடுப்பாகி எரிச்சலில் குமைந்தான் அவன்.

ஒருவேளை காஞ்சனை விஷயத்தில் நாம் இருவரை யும் தவறாக நினைக்கிறோமோ... இருவரும் சாதாரண மாய்த்தான் பழகுகிறார்களா? என்ற சந்தேகமும் அவ் வப்போது அவனுள் எழத்தான் செய்தது.

என்ன இருந்தாலும் மகேந்திரன் பண்ணை வீட்டுக் காரன், பெரிய கோடீஸ்வரன். அவன் போய் சாதாரண பள்ளித் தமிழாசிரியர் மகளான காஞ்சனையைக் கட்டிக் கொள்வானா? அது நடக்காத காரியமாயிற்றே?

அந்தக் கோணத்திலும் சிந்தித்துக் குழம்பலானான் செல்வம்.

# 12

மகேந்திரன் அவ்வப்போது காஞ்சனை வீட்டுக்கு வரும் சமயமெல்லாம் தவறாது தந்தை சிவகுருநாதன யும் பார்த்து அவரிடம் ஓரிரு வார்த்தைகள் பேசிவிட்டு செல்வது வழக்கம்.

தந்தையும் அவன் சென்றதும், ''எவ்வளவு பெரி பண்ணை ஜமீன் இவர்? கொஞ்சமும் பணக்காரத்தன இல்லாமல் எளிமையாக எப்படி பழகுகிறார். நல் குணமம்மா இவருக்கு..!'' என வியப்பார்.

அன்றும் அவள் முற்றத்தில் நெல் மணிகளை காயப்போட்டுக் கொண்டிருக்கும்போது வந்து விட்டான்.

கைலாசநாதர் ஓரமான தென்னை மர நிழலில் ஈசி சேரில் ஓய்வெடுத்துக் கொண்டிருக்க.. மகேந்திரன் அவரை நோக்கி நடந்தான். அவன் வருவதை காஞ்சனை உணர்ந்தாலும் கவனியாதவள் போல்தான் நெ மணிகளை கையில் பிடித்திருந்த வரட்டி ஒன்றினா கவனமாய் உலர்த்துவது போல் தீவிரமாய் இருந்தாள்.

எதற்கு இந்த புதுவித பாசாங்கு? இதுவரை எவரு குமே இப்படி பார்க்காதது போல் ஒரு நடிப்பு நடித் தில்லையே.. எதனால் இந்த கள்ளத்தனம் வருகிறது என உள்ளூர அவளுள் ஒரு திடுக்கிடலும் எழுந் மறையத்தான் செய்தது.

அதற்குள் கைலாசநாதர் மகேந்திரனை கவனித்து ''வாங்க.. தம்பி...'' என உற்சாகமாய் வரவேற்ற



பதிலுக்கு நமஸ்கரித்த மகேந்திரன் சிரித்தபடியே அவர் பக்கத்தில் இருந்த திண்டில் உட்கார்ந்து கொண்டான்.

அவன் கைலாசநாதரின் உடல் நலம் பற்றி விசாரிக்க பதிலுக்கு அவர் மகேந்திரனின் விவசாயப் பண்ணையைப் பற்றி ஆர்வமாய் கேட்க ஐந்து பத்து நிமிடங்கள் அதிலே போயிற்று.

காஞ்சனைதான் கருமமே கண்ணாய் இருப்பது போல் நெல்மணிகளை உலர வைத்தவள், கொட்டில் களை திறந்து வாத்துக் கூட்டங்களை மேய விட்டாள், சிறு சிறு வண்ணச் செடிகளுக்கு தோட்ட மண்ணில் பாத்தி கட்டி நீர் ஊற்றினாள். கயிறுகளில் பீர்க்கங் கொடி பிஞ்சுகளை எல்லாம் வாகாய் வளைத்து விட்டாள். முற்றத்து ஓட்டுத் தரையில் உட்கார ஆரம்பித்த புறாக் கூட்டத்திற்கு உணவு மணிகளை விசிறலாய் தெளிக்க ஆரம்பித்தாள்.

அப்படியே ஓடினாள். திரும்பி வந்தாள். குனிந்தாள். வளைந்தாள். தண்ணீர் ஊற்றினாள். சுறுசுறுப்பாய் நடந்தாள். எல்லாம் அவள் வழக்கத்திற்கு மாறான விசித் திரப் பழக்கங்கள். வினோத செய்கைகள்!

என்ன ஆயினும் என்ன வேலை செய்தாகினும் அவள் ஓர விழியின் ஓரக் கண்கள் மட்டும் மகேந்திரனை வட்டமிட்டுக் கொண்டே இருந்தன. அவன் தன்னை கவனித்துக் கொண்டிருக்கிறானா? என நோட்டமிட்டுக் கொண்டு இருந்தது. அவன் சில சமயம் தன்னையே விடாது உற்றுப் பார்ப்பது போல் அவள் உணர்ந்ததும் அவள் கண்கள் படபடப்பாகவும் ஆயின.

மகேந்திரனும் வந்த சில நொடிகளிலே அவளிடம் வழக்கமாய் பேசி விடுபவன் இந்த முறை இந்த புது

விதமான விளையாட்டை ரசித்தானோ என்னவே அவனும் அவளிடம் பேசாமல் கைலாசநாதரிடமே கதையளந்து கொண்டிருந்தான்.

அந்தப் பேச்சும் கூட எவ்வித சுவாரஸ்யமுமில்லாமல் அவன் உதடுகள் அசைந்து ஒப்புக்காக பேசுவது போலவே இருந்தது. ஆனால் கண்கள்..? அது காஞ்சனை நினை தது போல் அவளையே சுற்றிக் கொண்டுதான் இருந்தது

ஒரு கட்டத்திற்கு மேல் இந்த 'பார்வை' விளையாட் கைலாசநாதரின் பேச்சாலே தடைபட வேண்டிய தாயிற்று.

''என்னம்மா... நீ... தம்பி வந்து எவ்வளவு நே மாயிற்று? ஒரு குவளை மோர் அல்லது குளிர்பான எதாவது கொண்டு வாம்மா..! மறந்தே போய் வி டாயே..!'' என்று காஞ்சனையின் பக்கம் திரும்பி சொ னதும்தான் அப்போதுதான் அவனை கவனிப்பவ போல் பரபரவென சுறுசுறுப்பானாள் அவள்.

''இதோ... வருகிறேன்..!'' என்று பத்து நொடிகளி மோர்க்குவளையுடன் தோன்றி அவனிடம் நீட்டினா சிரிப்புடன் குவளையை வாங்கிய மகேந்திரன் அ ளையே உற்றுப் பார்க்க.. அந்தப் பார்வையை உஷ மாய் உணர்ந்தவளாய் தரை தாழ குனிந்தாள். சினிமா கதாநாயகி போல் அவள் கால்களால் வட்டம் போடு கிறாளா என மகேந்திரன் தலை நீட்டிப் பார்ப்பதை கண்டு நிமிர்ந்து முறைத்தாள்.

இதையெல்லாம் கொஞ்சமும் உணராத கைலா நாதர் தன் பிரச்சினையை மகேந்திரனிடம் சொல்வ போல், ''எனக்கும் வயதாகிக் கொண்டிருக்கிறது தம்பி



காலாகாலத்தில் இவளை ஒரு நல்லவனுக்கு கைப்பிடித் துக் கொடுத்து விட்டால் நானும் நிம்மதியாகி விடு வேன்'' எனவும் மகேந்திரனும் பலமாய் தலையாட்டிய படி, ''ஆமாம்.. ஆமாம். காஞ்சனைக்கு வயது ஏறிக் கொண்டுதானே.. போகிறது..'' என குரலை உயர்த்தி யவன் சட்டென தாழ்த்தி, அவளுக்கு மட்டும் கேட்கும் வண்ணம், ''இந்தப் பூத்துக் குலுங்கும் அழகு வயதாகி உதிர்வதற்குள் எவனாவது இளிச்சவாயன் தலையில் கட்டிவிட வேண்டியதுதான். இல்லையெனில் போணி யாகுவது கஷ்டமாய்ப் போய்விடும்!'' எனச் சொல்ல மறு படி முறைத்தவள் கோபமாய் அவன் கைகளில் நறுக் கென கிள்ளவும் செய்தாள்.

மகேந்திரன் கைகளால் விளையாட்டாய் எச்சரித்து விட்டு கைலாசநாதர் பக்கம் திரும்பியவன், ''நீங்கள் அதற்கு எல்லாம் கவலைப்படுதல் தேவையே இல்லை ஐயா, ஏனெனில் நம் காஞ்சனை சுட்டிகை மட்டுமல்ல.. புத்திசாலியாய்... உலகம் புரிந்த அறிவுக் கொழுந்தாய்த் தான் திகழ்கிறாள்...'' என முடிக்கவும் காஞ்சனை வேண்டு மென்றே தலையில் இரண்டு கொம்புகள் இருப்பது போல் விரல்களை வைத்துக் காட்டி, ''ஆமாம் அறிவுக் கொம்பு!'' என நகைக்க மூவரும் சிரித்தனர்.

கைலாசநாதர் கூடவே, ''சுட்டிகை மட்டுமல்ல. சேட்டைக்காரப் பெண். சிறு வயதில் இவள் பண்ணும் சேஷ்டைகளைப் பார்த்து ரசிக்கவே பக்கத்து வீட்டுப் பெண்கள் எதிர் வீட்டுப் பெண்கள் என ஒரு கூட்டம் கூடிவிடும். பெரிய மனுஷி போல் அப்போதே அவ்வளவு சுட்டித் தனம் பண்ணுவாள்...'' என்று பழைய நிகழ்வு களை விவரித்தார்.

'அடாடா.. அப்படியா?' என்பது போல் மகேந்திரன் கதை கேட்க ஆரம்பிக்க தந்தையின் பின் நின்று கொண்டிருந்த காஞ்சனையோ உதடுகளை விளித்து, கண்களைச் சுழற்றி கைகளால் அபிநயம் பிடித்து ஒரு குட்டி டான்ஸே செய்து அவனுக்கு பழிப்புக் காட்டினாள்.

தொடர்ந்து கேலியும் சீண்டலுமாய் கைலாசநாத ருக்கு முன்னே, அவர் அறியாமல் இருவரும் விளை யாடியது சொற்ப நேரம்தான் என்றாலும் அந்த வினாடி களை இருவரும் இனிமையாகவே உணர்ந்தனர்.

அந்த இனிமைக்கு பங்கம் வருவது போல் செல்வம் மளிகைச் சாமான்கள் மூட்டை ஒன்றுடன் நுழைந்தான் இயல்பாக வந்தவனின் முகம் மகேந்திரனைப் பார்த்ததும் கறுத்தது. அதிலும் கைலாசநாதரும் காஞ்சனையும் அவனும் நகைப்பாய் பேசிக் கொண்டிருந்தது கண்டு கடுகடுப்பிற்குப் போனது.

அப்படி என்ன பேச்சு? என கோபமாய் நினைத்தவன் அதை ஓரளவு வெளிக்காட்டியவாறே, "என்ன அப்பா பேசிக் கொண்டிருக்கிறீர்கள்?" என்றான் படபடப்பாய்.

கைலாசநாதர் பெரிய தலையசைப்புடன், "எல்லாம் நம் காஞ்சனை பற்றித்தான் செல்வம்.." என்றார் அவ மனநிலையைப் புரியாமல்.

"என்ன காஞ்சனை பற்றியா..? அவளுக்கென்ன?"

"அவளுக்கொன்றுமில்லை..! காலா காலத்தில் அவளுக்கு கல்யாணம் செய்யவேண்டும் அல்லவா?"

மறுபடியும் கைலாசநாதர் அதையே சொல்ல காஞ் சனையின் முகம் மாற ஆரம்பித்தது.



செல்வமோ முகத்தில் அதிக அக்கறை காட்டுபவ னாய், "இதில் கவலைப்பட என்ன இருக்கிறது? எல்லாம் பேசி முடித்த விஷயம்தானே?" எனவும் அவன் சொல் வதன் அர்த்தம் புரிந்து காஞ்சனையின் முகம் சீரியஸாக, மகேந்திரன் தன்னை உற்றுப் பார்ப்பதையும் உணர்ந் தாள் அவள்.

செல்வமோ மகேந்திரனுக்கு இந்த முறை நன்கு உணர்த்திவிட வேண்டும் என நினைத்தவன் அவனை நோக்கி, "மகேந்திரன் சார், உங்களுக்குத் தெரியாது. எனக்கும் காஞ்சனைக்கு சிறு வயது முதலே கல்யாணம் செய்து விடுவது என பேசி முடித்த விஷயம்.. அதைத் தான் மாமா சொல்கிறார்கள்..!" என அழுத்தமான குரலில் சொல்லி முடித்தான்.

முகத்தில் ஈயாடாத குறையாய் ஸ்தம்பித்து நின்றிருந் தாள் காஞ்சனை.

## 13

அத்தை கனகமும் ஒரு வாரமாய் பார்த்து விட்டாள். செல்வத்தின் முகமே சரியில்லை. எப்போதும் எதையோ பறி கொடுத்தவன் போல்தான் உம்மென நடமாடிக் கொண்டிருந்தான்.

பொறுக்க முடியாதவளாய் ஒரு நாள் வாய்விட்டே கேட்டு விட மளமளவென கொட்டி விட்டான் செல்வம்.

''வேறு எதைச் சொல்ல அத்தை? எல்லாம் நம் காஞ்சனை விஷயம்தான்! இவ்வளவு நாள் காஞ்சனை நமக்குத்தான் என மனக்கோட்டைகள் கட்டி விட்டேன். ஆனால் இப்போது கரடி போல் நுழைந்திருக்கும் மகேந் திரனால் பயம் வந்து விட்டது...'' என்றான் நேரிடையாய் விஷயம் முழுவதையும் உடைத்தவாறு.

கனகத்துக்கும் ஆச்சரியம்தான்!

செல்வம் காஞ்சனை மீது இவ்வளவு பிரியம் வைத் திருக்கிறானா.. என்றொரு ஆச்சரியம். இன்னொன்று காஞ்சனை மகேந்திரனுடன் பழகுகிறாளா என்று!

''என்ன செல்வம், நீ சொல்வது நிஜமா? காஞ்சனை மகேந்திரனுடன் விருப்பமாய் பழகுகிறாளா?''

அத்தை கேட்டதற்கு தலையே கழன்று விடும் அளவுக்கு பெரிதாய் தலையாட்டினான் செல்வம்.

''ம்ம்... நெருக்கமான பழக்கம்தான்! சிரிக்கச் சிரிக்க பேசுகிறார்கள். மணிக்கணக்கில் பேசுகிறார்கள். இரு வருக்கும் தினம் தினம் பார்க்கா விட்டால் பேசா விட் டால் தூக்கம் கூட வராது. அந்த அளவுக்குப் போய் விட்டது நிலைமை...''

''அப்படியா?''

இம்முறை வாய் பிளக்க அதிசயித்தது கனகம்.

செல்வம் விடவில்லை. இதுதான் சமயம் என முகத்தை மேலும் சோகமாக வைத்துக் கொண்டான்.

''நீங்களே சொல்லுங்கள் அத்தை. சிறு வயதில் இருந்தே காஞ்சனை எனக்குத்தான் என எல்லோரும் சொல்லி வளர்த்து விட்டார்கள். என் நெஞ்சிலும்



காஞ்சனை உருவம் அப்படியே பதிந்து விட்டது. இனி காஞ்சனை இல்லாத ஒரு வாழ்க்கையை என்னாலும் நினைத்துப் பார்க்க முடியாது. அதனால் நீங்கள்தான் எனக்கு ஒரு நல்ல வழி சொல்லுங்கள் அத்தை...'' என்றான் உதவி கேட்பது போல்.

''நல்ல வழியா? எப்படி செல்வம்?''

புரியாமல் கேட்ட கனகத்திற்கு விளக்கினான் செல்வம்.

''கொஞ்சம் காஞ்சனையுடன் பேசிப் பாருங்களேன்.''

''பேசிப் பார்த்தால் சரியாகி விடுமா?''

செல்வம் மறுபடியும் தலையாட்டினான்.

''சரியாகி விடாதுதான்! ஆனால் காஞ்சனை மனதில் என்ன நினைக்கிறாள் என்பதை கண்டு பிடித்து விடலாம் தானே!''

''ம்ம்... கண்டு பிடித்து விடலாம். ஆனால்... செல்வம்...''

''சொல்லுங்கள் அத்தை...''

''அப்படிக் கண்டு பிடித்து நீ என்ன செய்ய முடியும்?''

செல்வம் புருவம் உயர்த்தி குழப்பமானான்.

''நீங்கள் சொல்வது புரியவில்லையே அத்தை...''

கனகம் தனது கனத்த சரீரத்தை அசைத்தபடி பேச ஆரம்பித்தவள், ''செல்வம், உனக்கு காஞ்சனையின் சுபா வம் தெரியாதா? எதையும் பட்டென பட்டாணி போல் உடைத்துச் சொல்லி விடுவாள் தானே? இந்த விஷயத் திலும் அதே போல் மகேந்திரனுடன் பழகுகிறேன்.

அவரை எனக்குப் பிடித்திருக்கிறது. அதனால் என்ன? என்று சொல்லி விட்டால்.. என்ன ஆகும்..? கொஞ்சம் யோசித்துப் பார் செல்வம்..!''

அத்தை சொல்ல செல்வத்திற்கும் மின்னலாய் புரிந்தது.

கனகம் சொல்வதும் உண்மைதான். காஞ்சனை அப்படி பேசக் கூடியவள்தான்! அத்தை சொல்வது போல் மகேந்திரனை விரும்புகிறேன். அவரையே கல்யாணம் செய்து கொள்வேன்.. என்று சொன்னாலும் சொல்லி விடுவாள்!

பின் தாடி வளர்க்காத குறையாய் சோகத்தில் தத்தளிக்கப் போகும் முகத்தை எங்கே கொண்டு போய் வைத்துக் கொள்வது?

நினைப்பே செல்வத்திற்கு மிகப் பெரிய பயத்தைத் தர அந்த யோசனை சரி வராது என்று அப்போதே முடிவு செய்து விட்டான் அவன்.

வேறு என்ன செய்யலாம்? என யோசித்தபோது கனகமே அந்த யோசனையைச் சொன்னாள்.

''மற்றவர்களை ஏன் எதிர்பார்க்கிறாய் செல்வம்? காஞ்சனையின் முறை மாமன் நீ தானே? நீயே காஞ்சனையிடம் பேச வேண்டியதுதானே? உரிமையோடு அவளை கண்டிக்க வேண்டியதுதானே?''

கனகம் சொல்ல திடுக்கிடவே செய்தான் செல்வம்.

''என்ன அத்தை... சொல்கிறாய்? நான் காஞ்சனையை கண்டிப்பதா?''

''ஏன் கூடாது...?'' என கனகம் முகம் விரியப் பார்த்தவள், ''செல்வம், காஞ்சனை யார் உன் அத்தை பெண் தானே? முறைப் பையனான உனக்குத் தான் அவளைக் கண்டிக்கவும் முழு உரிமை உள்ளது...''



அத்தை சொல்லச் சொல்ல செல்வத்திற்கு இந்த யோசனை ரொம்பவும் பிடித்து விட்டது. உற்சாகமானவன் போல் குஷியாய் தலையசைத்தவன் கூடவே, ''சரி அத்தை, நான் அப்படிக் கண்டித்தால் காஞ்சனைக் கேட்டு விடுவாளா?'' என்றான் புது யோசனையாய்.

கனகம் விடவில்லை.

''நீ சொல்கிற விதமாய் சொல்லு செல்வம். காஞ்சனை கண்டிப்பாகக் கேட்பாள்...'' என்றாள் மேலும் அவனைத் தூண்டும் விதமாக.

அத்தோடு அவர்கள் இருவரும் பேச்சை முடித்துக் கொண்டார்கள்.

மறுநாள் செல்வம் தாமதிக்காமல் யோசனை செய்து அத்தை சொன்ன 'கண்டிப்பு' வழியை காஞ்சனை மீது பிரயோகிக்க நினைத்தான்.

கைலாசநாதர் வயல் வரப்புகளைப் பார்க்கச் சென்றிருக்க... தோட்டத்துப் பக்கம் பறவைகளுக்கு தானியங்களை விசிறியபடி தெளித்துக் கொண்டிருந்தாள் காஞ்சனை.

அவளை முகத்தில் ஒருவித இறுக்கத்தோடு தேடிச் சென்றான் செல்வம்.

தனது கடுகடுவென்ற முகத்தை மேலும் கடுமையாக்கியவாறு அவளைப் பார்த்தான்.

''இதோ பார் காஞ்சனை, ஒரு முக்கியமான விஷயம். பேசி உன்னை எச்சரிக்கவே வந்தேன்...'' என்றான் அதே கடுமைத் தொனியில்.

திடீரென கோபம் கொண்ட கோமாளி போல் தன் முன் வந்து பேசும் அவனை நகைப்பை அடக்கிக் கொண்டு அமைதியாகவே பார்த்தாள் காஞ்சனை.

''என்ன விஷயம்? முதலில் அதைச் சொல்லுங்கள்.. செல்வம்.. மிஸ்டர்.. செல்வம்.. அத்தான்!'' என்றாள் இடக்காய்.

''அது.. அது...''

எப்படி அதைச் சொல்வது என செல்வம் தடுமாறவே செய்தான்.

''ம்ம்... சொல்லுங்கள்.''

''நீ.. அந்த மகேந்திரனோடு பேசுவது சிரிக்கச் சிரிக்கப் பழகுவது.. எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை...''

அவன் சொல்லியபடி அவள் முகக் குறிப்பை பார்த்த வாறு நிறுத்த, ''அப்படியா? வேண்டுமானால் சிரிக் காமல் பழகட்டுமா செல்வம் அத்தான்?'' என்றாள் கொஞ்சமும் அதிராமல்.

''கா..ஞ்..சனை..!'' செல்வம் குரலை உயர்த்தியவன்,

''நான் சொல்வது முக்கியமான விஷயம்... முறை மாமன் என்ற உரிமையில் சொல்கிறேன்'' என்றான் தனது சின்ன மீசையில் கை வைத்து முறுக்குவது போல்.

காஞ்சனையோ மீண்டும் வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு கொஞ்சமும் அதிராது. ''அட.. அது வேறா? சரி... சொல்லுங்கள். நானும் முறைப்பெண் என்ற உரிமையில் காது கொடுத்துக் கேட்டுக் கொள்கிறேன்'' என்றாள்.



செல்வம் மறுபடியும் குரலை உயர்த்தினான். ''எனக்கு பிடிக்காத விஷயத்தை நீ செய்யக் கூடாது காஞ்சனை. அந்த மகேந்திரனின் பார்வையோ நோக்கமோ கொஞ்சமும் சரியில்லை. அதனால்... அதனால் அவரைப் பார்த்தாலே எனக்கு பிடிப்பதில்லை. மேலும்...''

அவன் முடிப்பதற்குள், ''பொ...றா...மை..!'' என அவன் காதுபடவே முணுமுணுத்தாள் காஞ்சனை.

அதைக் கேட்டு கொதிப்பானான் செல்வம். ''என்ன... சொன்னாய்..? என்ன... சொன்னாய்..? பொறாமையா..? அதுவும் எனக்கா..?'' என்றவன் தலையை அப்படியும் இப்படியுமாய் வேகமாய் ஆட்டினான்.

''சே! சே..! அவரைப் பார்த்து நான் பொறாமைப் படவா..? எதற்கு..? எனக்கு என்ன குறைச்சல் வந்து விட்டது? சொல்லப் போனால் அந்த மகேந்திரன்தான் அழகான நீ எனது முறைப் பெண் என்று தெரிந்து பொறாமைப்பட்டு அதை குலைத்து விடுவது போல் உன்னுடன் பேசிப் பழகி... உன்னுடைய மனதை மாற்ற முயல்கிறார். அதனால்தான் உனக்கு எச்சரிக்கை கொடுக்க வந்தேன் காஞ்சனை...''

இம்முறை காஞ்சனை பலமாய் திடுக்கிடவே செய்தாள்.

''எச்சரிக்கையா..? அதுவும் எனக்கா?''

அவள் விழி விரித்து கோபமாய் கேட்டதை கொஞ்சமும் உணராத செல்வம் தொடர்ந்தான்.

''ஆமாம் காஞ்சனை! எது நடந்தாலும் சரி.. என.. என்னால் சும்மா பார்த்துக் கொண்டிருக்க முடியாது. எது நடந்தாலும் தட்டிக் கேட்க வேண்டிய கடமை ஒன்று எனக்கு இருக்கிறது. அதனால்...''

அவன் பெரும் பீடிகை போடுவது போல் மறுபடியும் நிறுத்த, ''ம்ம்... சொல்ல வந்ததைச் சொல்லுங்கள்!'' என்றாள் எரிச்சலாய்.

''வேறு என்ன? இனி நீ அந்த மகேந்திரனை பார்க்க கூடாது. அவருடன் பேசக் கூடாது. இதுதான் நான் உனக்கு விதிக்கும் கட்டளை... கட்டுப்பாடு...! புரி கிறதா?''

படபடவென பேசிவிட்டு தான் நினைத்ததை ஒன்று விடாமல் சரியாகச் சொல்லி விட்டோம் என்ற இறுமாப் போடு தலையை நிமிர்த்தி பார்த்தான் அவன்.

காஞ்சனையோ சிரிக்க ஆரம்பித்தபடி கைகளை வேகமாய் தட்டி அவன் சொல்வதை ரசிப்பது போன்ற பாவனை செய்தவள், ''அட.. என்னை மிரட்டும் அள வுக்கு செல்வம் அத்தானுக்கு இவ்வளவு துணிச்சலா?'' என்றவள் அதே தொனியில் குரலை உயர்த்தியபடி, ''ஆனால் பாருங்கள் செல்வம் அத்தான், என்னிடம் மட்டும் இப்படி மிரட்டி கிரட்டி வாலை ஆட்ட நினைத் தால் அவ்வளவுதான்? வாலை ஒட்ட நறுக்கி விடு வேன்!'' கைகளை காட்டி எச்சரிப்பது போல் சொல்லி விட்டு சிரிப்புடன் ஓடினாள் காஞ்சனை!

# 14

அன்று மகேந்திரன் ஜீப்பை உறும விட்டவாறு குளத் தங்கரை படிக்கட்டில் அமர்ந்து வம்பளந்து கொண்டிருந்த அவர்கள் முன் தோன்றினான்.



காஞ்சனை மல்லிகைக் கொடி, செண்பகக் கண்ணு டன் கல்லூரியில் நடந்த ஒன்றைச் சொல்லி கலகல வென நகைக்க வைத்துக் கொண்டிருக்க... உள்ளே நுழைந்தான் மகேந்திரன்.

முரட்டு ஜீன்ஸ், டீ ஷர்ட், தலையில் தொப்பி, தோள் பட்டையில் பெல்ட்டுடன் கூடிய நீளமான குழல் துப்பாக்கி. இவற்றுடன் உறுமும் ஜீப்பில் மகேந்திரன்!

''அட... இது என்ன கோமாளித்தனம்?'' வியந்து காஞ்சனை கேட்க, ''என்ன கோமாளித்தனமா...? நன்றாய் என்னை உற்றுப் பார்! நான் வேட்டைக்காரன்! காடு களில் போய் கொடிய மிருகங்களை எல்லாம் கொன்று குவித்து விடுவேன்!'' என்றான் மகேந்திரன் மிடுக்காய்.

காஞ்சனை கடகடவெனச் சிரித்தவள், ''ஆஹா..! முயலையும் எலியையும் வேட்டையாடிவிட்டு புலியை வேட்டையாடியது போல் ஜம்பமடிப்பீர்கள். உங்கள் வீரம் எனக்குத் தெரியாதா?'' என்றாள். பதிலுக்கு தோள் களைக் குலுக்கி சிலிர்த்தான் மகேந்திரன்.

''என் வேட்டையை சாதாரணமாக நினைத்து விடாதே.. காஞ்சனை... எத்தனையோ கொடிய மிருகங்களை வேட்டையாடி இருக்கிறேன். உனக்கு தைரியமிருந்தால் என்னுடன் வா..! என் வேட்டையாடும் திறமையைக் காட்டுகிறேன்.''

அவன் சொல்ல மறுபடியும் கேலி விலகாமல் நகைத் தாள் அவள். கூடவோ, ''மிஸ்டர் மகேந்திரன், ரொம்பவும் இப்படி ரீல்கள் விடக் கூடாது. எனக்கும் சட்டம் தெரி யும். அரசாங்க வன பாதுகாப்பு சட்டப்படி... காடுகளுக் குள் அனுமதியில்லாமல் போவதே குற்றம்தான்.

அதிலும் மிருகங்களை வேட்டையாடினால்.. உடனே ஜெயில்தான்... களியைத் தின்ன வேண்டியதுதான்..!

அவள் சொல்லி முடிக்க தலையசைத்த மகேந்திர ''பரவாயில்லை. நிறைய தெரிந்து வைத்திரு கிறாயே..!'' என்றவன், ''ஆனால் இதையும் தெரி கொள் காஞ்சனை. நான் வனச்சரகரிடம் முறைப்ப அனுமதி வாங்கி இருக்கிறேன். மேலும் நான் வேட யாடுவது நரி, ஓநாய் போன்ற சிறு சிறு மிருகங்கள் தான்...'' என்று முடிக்க, ''அப்பாடா.. உண்மை ஒத்துக் கொண்டீர்களே.. அது போதும்! புலி பிடிக் சென்று எலியை பிடித்த கதைதான். நான் மு சொன்னது சரிதானே?'' எனவும் மகேந்திரன் வி வில்லை.

''காஞ்சனை, ஆனால் அந்த பயங்கரமான காட் குள் தனியாக சென்று வருவதே ஒரு சாதனைதா எங்கே உனக்கு தைரியமிருந்தால் என்னுடன் வ பார்ப்போம்..!''

அவன் உசுப்பேற்றுவது போல் கேட்க அ கொஞ்சமும் உணராமல், ''எனக்கென்ன பயம்? இதே இப்போதே வருகிறேன்!'' என்றபடி எழுந்து விட்டா

எழுந்து தோழிகளைப் பார்த்து, ''வாங்கடி, நாம் லோரும் போவோம்...'' என அழைக்க...

''ஐயையோ... நான் வரலைப்பா...!'' என்றபடி வொருவராய் தப்பித்தோம் பிழைத்தோம்... என ஓடி

'சே! சுத்தப் பயந்தாங்குள்ளிகள்...!' என அவர்க நிந்தித்து விட்டு தைரியமாய் ஜீப்பில் ஏறி அமர்ந் காஞ்சனை.



மகேந்திரன் அவள் துணிச்சலைக் கண்டு வியக்க, ''அட... இன்னும் ஏன் நடுநடுங்கிக் கொண்டிருக்கிறீர்கள் மிஸ்டர் மகேந்திரன்? அதுதான் துணைக்கு நான் வருகிறேனே? தைரியமாக கிளம்புங்கள்!'' என்றாள் வந்த சிரிப்பை அடக்கியவாறு.

''ம்ம்.. சரியான வாலுதான்!'' முணுமுணுத்தபடி சிரிப்புடன் மகேந்திரனும் ஜீப்பை கிளப்பினான்.

ஜீப்.. நகரின் ஒதுக்குப்புறமாய் இருக்கும் சிறிய காட்டுப் பகுதியை நோக்கிச் செல்ல ஆரம்பித்தது. குறுகலான செம்மண் பாதை பெரிய பெரிய மரங்கள் அடர்ந்த புதர்ச் செடிகள் வண்டுகளின் ரீங்காரம்... என ஒவ்வொன்றாய் கடந்து காட்டுப் பகுதியினுள் நுழைந் தனர்.

மகேந்திரன் முன்பு தான் வேட்டைக்குச் சென்று கிடைத்த அனுபவங்களை விலாவாரியாக அவளுக்கு விளக்கிக் கொண்டிருந்தான். காஞ்சனை அதைக் கேட்ட படி காட்டின் செழிப்பான இயற்கை அழகை பிரமித்தபடி பார்த்துக் கொண்டிருந்தாள்.

அரை மணி நேர பயணத்திற்குப் பின் காட்டின் உட்பகுதிக்கு வந்து விட்டார்கள். மகேந்திரன் சிறிய நீர்வீழ்ச்சி ஒன்றும் குன்று போன்ற மேட்டுப் பகுதி ஒன்றும் தெரிய ஜீப்பை அங்கு சென்று நிறுத்தினான்.

இருவரும் இறங்கினார்கள்.

''காஞ்சனை, இந்த நீர்வீழ்ச்சிப் பகுதிதான் மிருகங்கள் தங்கள் தாகம் தீர்க்க வரும் இடம். இங்கு நின்று கொண் டிருந்தாலே நிறைய மிருகங்கள் வருவதைப் பார்க்க லாம்..'' என விளக்கினான்.

காஞ்சனைக்கும் அந்த காட்டுச் சூழ்நிலை, பு
அனுபவமாய் இருந்தது. அடர்ந்த மரங்கள், புதர்க
வண்டுகளின் ரீங்காரம், மூலிகை வாசம், வினோத பி
றல்கள் என எல்லாமே காஞ்சனையை பரவசப்படுத்
மகிழச் செய்தது.

கைகளைக் கட்டிக் கொண்டு இயற்கையை ரசித்தப
மகேந்திரன் பின்னால் நடந்தாள். மகேந்திரன் த
பெரிய வேட்டுத் துப்பாக்கியை உயர்த்திப் பிடித்தப
புலியை வேட்டையாடுவது போல் சென்றது அவளு
நகைப்பையே வரவழைத்தது.

''ஹலோ... மகேந்திரன் சார்... அதோ.. அதே
அங்கே... பாருங்கள். அந்த புதர்ப் பக்கம் புலி... புலி
வருகிறது... பாருங்கள்! சீக்கிரமாக சுடுங்கள்...!''
அவள் சொல்லி விளையாடியதை ரசித்தபடி
சிரிப்புடன் சென்று கொண்டிருந்தான் மகேந்திரன்.

கூடவே, ''ஆனால் பார் காஞ்சனை, நீ இப்படி பு
வருகிறது புலி வருகிறது... என சொல்லிக் கொண்டி
தால்... நிஜமாகவே புலி வந்து விடும்.. பின் நம் இ
வரையும் தின்று.. பெரிய... ஏப்பம்தான்!'' என்று
'ஆவ்..' என வாயை அசைத்தும் காட்டினான்.

''அட... போங்க சார்.. புலியாவது வருகிறதாவது
எலிதான்.. இங்கு.. வரும்.. வரப்போகிறது...'' என்று
கலகலப்புடன் தொடர்ந்தாள் காஞ்சனை.

மேலும் ஐந்து நிமிட நடைக்குப் பின் இருவ
அடர்ந்த இருள் சூழ்ந்த காட்டுப் பகுதியை அடைந்தா

''இதற்கு மேல்.. உள்ளே செல்ல முடியாது. கா
சனை இதுதான் நாம் செல்லக் கூடிய எல்லைப் பகுதி



என்று விவரித்தபடி குவிந்து தெரிந்த பாறைப் பகுதி
ஒன்றில் உட்கார்ந்தான். அவளையும் உட்காரச் சொன்
னான்.

இருவருக்கும் பயங்கரக் களைப்பு. வயிற்றில் பிடுங்
கும் பசி. கொண்டு வந்திருந்த லெதர் பேக்கை திறந்து
ரொட்டித் துண்டுகளையும் ஜாமையும் எடுத்தான்.
அவளுக்கு சாப்பிடக் கொடுத்து தானும் உண்ண ஆரம்
பித்தான்.

மேலும் பத்து நிமிடங்கள் இருவரும் ஓய்வெடுத்
தனர். பின் கிளம்ப நினைத்து எழுந்தபோது அந்த
வினோத உறுமல் சப்தம் கேட்க... இருவரும் திடுக்
கிட்டுப் போனார்கள்.

மகேந்திரன் சுதாரித்து சப்தம் வந்த திசையில் பார்
வையை கூர்மையாக்கினான். அவனது உதடுகள்,
''காஞ்சனை... கரடி... கரடி....'' என முணுமுணுத்தது.

''என்ன.. கரடியா?'' என்றபடி காஞ்சனை மகேந்திரன்
காட்டிய திசையில் பார்த்தாள்.

கருகருவென... நாலடி உயரத்தில் புஸுபுஸுவென
ரோமங்களோடு கண்களை உருட்டியபடி... நிஜமாகவே
கரடி ஒன்று நின்று இருவரையும் பார்த்து உறுமிக்
கொண்டிருந்தது.

''ஐயோ... கரடி!'' என ஒரு கணம் வெலவெலத்துப்
போன காஞ்சனை அப்படியே பயத்தில் பக்கத்தில்
இருந்த மகேந்திரனை இறுக கட்டிக் கொண்டாள்.

மகேந்திரன் கொஞ்சமும் அசராமல் கையில் இருந்த
துப்பாக்கியை உயர்த்திப் பிடித்தவன் விசையை அழுத்
தினான். மேல் நோக்கிச் சுட்டான் அவ்வளவுதான்!

வேட்டுச் சப்தம் கேட்டு அதிர்ந்து பயந்து ஓட ஆரம்பித்தது கரடி.

இரண்டே நிமிடத்தில் அடர்ந்த புதர்களுக்குள் நுழைந்து மறைந்து விட்டது கரடி.

''கரடியை விரட்டியாயிற்று..! கரடி போய் விட்டது காஞ்சனை...!'' சொல்லியபடி தனது கரங்களால் காஞ்சனையை உலுக்கியபோது தான் - கண்களை இறுக மூடியபடி அவனை கட்டிக் கொண்டு கிடந்தவள் உணர்வுக்கு வந்தாள்.

அவளை இறுக்கமாய் கட்டிக் கிடந்த தனது நிலை கண்டு வெட்கத்தில் முகம் சிவக்க சட்டென விலகினாள்.

மகேந்திரனோ அதை கவனித்து உணராமல், ''யார் பயந்தாங்குள்ளி என இப்போது புரிகிறதா?'' என அவள் காதைப் பிடித்துத் திருகி கேலி செய்தான்.

''ஒத்துக் கொள்கிறேன் மகேந்திரன் சார்... நீங்கள் வீரர்... பெரிய சூரர்.. அதி பயங்கர வேட்டைக்காரர்தான் போதுமா?'' என்றபடி அவன் கைகளைத் தட்டி விட்டபடி கலகல நகைப்புடன் ஜீப்பை நோக்கி ஓடினாள்.

இருவரும் அடர்ந்த காட்டுப் பகுதியில் இருந்து வீடு நோக்கி கிளம்ப ஆரம்பித்தனர்.

## 15

அந்த வாரம் என்னவோ தெரியவில்லை. ஆரம்பம் முதலே காஞ்சனைக்கு மனது சரியில்லை. என்னவோ



ஒன்று அவளது மனதை இம்சித்தது. இயல்பான குதூகலமும் உற்சாகமும் இல்லாமல் அவளை தவிக்க வைத்தது.

என்னவென்று யோசித்துப் பார்த்தாள்.

காரணம் ஒன்றே ஒன்றுதான்.

இரண்டு மூன்று நாட்கள் மகேந்திரனை அவள் பார்க்கவில்லை. மகேந்திர தரிசனம் அவளுக்குக் கிடைக்கவில்லை.

அதற்காக அவள் என்ன அனிச்சமலர் போல் அவனைப் பார்க்காவிட்டால் வாடி விடுவாளா? அவன், 'பார்வை' 'தரிசனம்' இல்லாவிட்டால் அவளுக்கு உற்சாகம் இருக்காதா?

இது என்ன கூத்து?

அதையும் தான் பார்த்து விடுவோமே..! என சூளுரைத்தவள் போல் இரண்டு மூன்று நாள் பேசாமல் இருந்து பார்த்தாள்.

எவ்வித பாதிப்பும் இல்லை. இயல்பாகத்தான் இருக்கிறேன் என தனக்குத்தானே சொல்லிக் கொண்டு நடமாடினாள்.

தோழிகள் மல்லிகைக் கொடி, செண்பகக் கண்ணு, நீலாவதி என் பட்டாளத்தையெல்லாம் கூட்டிக் கொண்டு தோப்புக்காடு, குளத்தருவி, மாஞ்சோலை என கிராமத்தின் வெவ்வேறு பகுதிகளுக்குச் சென்று ஊர் சுற்றினாள். வாண்டுகளுடன் ஆட்டம் போடாத குறையாய் பல்வேறு விளையாட்டுக்கள் விளையாடினாள். சந்தோஷ

மாய் தான் இருப்பது போல் தனக்குத்தானே காட்டிக் கொண்டாள்.

எல்லாம் சரி. அவள் என்ன செய்தாலும் எவ்வளவு ஈடுபாடு காட்டினாலும் என்னவோ ஒன்று குறைந்தது ஏதோ ஒன்று இடித்தது.

மூன்று நாட்கள் இப்படி ஓட்டியவளுக்கு நாலாவது நாள் உண்மையை ஒத்துக் கொள்ள வேண்டியதாயிற்று

என்னதான் மனதைத் திருப்பினாலும் கடிகார பெண் டுலம் போல் மனது அந்த இடத்திற்கு திரும்ப வந்து ஒரு நிமிடம் நின்று நிதானித்து விட்டுத்தான் அகல்கிறது.

அந்த இடம் மகேந்திரன்!

அவனுக்கு எதுவும் பண்ணை வேலைகள் வந்து அதில் ஆழ்ந்து விட்டானா? இல்லை வேண்டுமென்றே அவளைப் பார்க்காமல் இருந்து கண்ணா மூச்சி ஆடு கிறானா?

அதைத் தெரிந்துகொள்ள விரும்புபவள் போல அன்று மகேந்திரனின் வீட்டுப் பக்கம் போனாள். போன வளுக்கு வேலையாள் சொன்னதைக் கேட்டதும் முகத் தில் ஈயாடவில்லை.

மகேந்திரன் விவசாயத்திற்கு இயந்திரக் கருவிகள் வாங்க பட்டணம் சென்றிருக்கிறானாம். திரும்பி வர ஒரு வாரம் ஆகுமாம்!

''என்னிடம் ஒரு வார்த்தை சொல்லவில்லை?'' என சட்டென தன் மனதில் தோன்றியதை வார்த்தைகளாக கேட்க பணியாள் திருதிருவென விழிக்கத்தான் செய் தான்.



''என்ன.. என்னம்மா சொல்கிறீர்கள்?'' என்றபடி அவன் தன்னை அப்படி வினோதமாய் பார்ப்பதை உணர்ந்து சட்டென உணர்வுக்கு வந்து உதட்டைக் கடித்துக் கொண்டவள், ''ஒன்றுமில்லை... ஒன்றுமில்லை!'' என்றபடி விறுவிறுவென திரும்பி நடந்தாள்.

ஆயினும் மனது வலித்தது. ஒரு வாரம் வெளியூர் சென்றிருக்கிறான். நம்மிடம் ஒரு வார்த்தை சொல்ல வில்லையே! சொல்ல வேண்டும் என்று அவனுக்குத் தோணவில்லையோ?

அந்த அளவிற்கு பழக்கம், நெருக்கம் இல்லை என்று நினைத்து விட்டானோ?

பழக்கம் சரி. அது... என்ன நெருக்கம்?

தொக்காய் அந்தக் கேள்வி எழுந்து மனதை நெருட ஒரு கணம் அப்படியே நின்றாள்.

நெருக்கம்... ம்ம்.. அந்த வார்த்தை சரியில்லையே... அவளை அவனுடன் இணைத்து வேறு ஏதோ சூழலுக்கு அல்லவா கொண்டு போகப் பார்க்கிறது?

அவன் வந்தான். பார்த்தான். பேசினான். சிரிக்கச் சிரிக்கப் பழகினான். அத்தோடு சரி. விட்டுவிட வேண் டியதுதானே?

இப்படி தனக்குத்தானே எதிர் கேள்வி கேட்டு இரண்டு மூன்று நாள் அலைந்தாள். இரவெல்லாம் தூக்கமின்றி சில மணி நேரங்கள் தவிப்பதும் புது வாடிக்கையாய் அவளை ஆக்கிரமித்துக் கொண்டது.

யாரிடமும் பேசினாலும் அவனிடம் பேசியது போல் இல்லை... வரவில்லை.. அந்த அளவிற்கு மகேந்திர

னுக்கு வசீகரப் பேச்சு என தனக்குத் தானே காரணம் கற்பித்து ஒரு விளக்கமும் சொல்லிக் கொண்டாள்.

எல்லாம் ஒரு வாரம் தான்.

புலம்பாத குறையாய் தவித்துக் கொண்டிருந்த வளுக்கு மறுநாள் திங்கட்கிழமை மகேந்திர தரிசனத் தைப் பார்த்ததும் தான் ஓடி ஓடிக் களைத்து மூச்சு வாங் குவது போல் நிம்மதியும் ஆயிற்று.

சூரியனைக் கண்ட தாமரை போல்தான் மலர்ந்து கலகலவெனச் சிரித்தாள். சிரித்தவள் டக்கென நிறுத்தி அவனது முகமும் அவளைக் கண்டதும் அப்படி மலர்ந்து போகிறதா என உற்றுக் கவனித்தாள்.

மகேந்திரன் எவ்விதச் சலனமுமில்லாமல் இயல் பாகவே இருந்தான்.

ஆக... பாதிப்பெல்லாம்... இவனுக்கு. இல்லையா... நமக்கு மட்டும்தானா?

அப்படியா? உண்மைதானா?

நம்ப முடியாமல் அவன் பக்கத்தில் போய் நின்று கொஞ்ச நேரம் எதுவும் பேசாமல் அவனையே உற்றுப் பார்த்தாள்.

மகேந்திரன் அவன் செயல் கண்டு திகைக்கத் தான் செய்தான்.

''என்ன காஞ்சனை... என்னாயிற்று உனக்கு?''

அவள் வாயைத் திறக்கவில்லை. இறுக்கமாகவே அவனைப் பார்த்தாள்.

''அட.. பதில் சொல் காஞ்சனை என்னாயிற்று உனக்கு?''



அதற்கும் பேசாமல் இருந்தாள்.

மகேந்திரனின் முகத்தில் திகைப்பு கூடியது. கொஞ்சம் பதட்டம் கொண்டவன் போல் பக்கத்தில் வந்தான்.

'சொல் காஞ்சனை... என்ன உனக்கு?'

இம்முறையும் வேண்டுமென்றே மௌனமாய் பேசா மடந்தையாய் நின்றாள். அவன் செயல்களை உற்றுக் கவனித்தாள்.

அவன் மகேந்திரன் அவள் தோள்களைப் பற்றி ஏறக் குறைய உலுக்கியே விட்டான்.

''காஞ்சனை.. என்ன... எதுவும் கோபமா? நான் சொல்லாமல் ஊருக்குச் சென்று விட்டதில் கோபமா?''

அவன் அப்படிக் கேட்டதும் பொட்டிலடித்த மாதிரி உள்ளுக்குள் துள்ளினாள். உற்சாகமானாள். அட.. மிகச் சரியாக கண்டு பிடித்து விட்டானே? அவளது நிலையை தெளிவாகப் புரிந்து வைத்திருக்கிறானே?

அப்படியானால்... அப்படியானால்.. அதற்கு என்ன அர்த்தம்? ஊருக்கு தன்னிடம் சொல்லாமல் சென்று விட்டதால் உரிமையாய் கோபிப்பாள் எனக் கூடத் தெரிந்து வைத்திருக்கிறான் என்றால்.. நம்மை நம் மனதை நன்றாகப் புரிந்து வைத்திருக்கிறான் என்று தானே அர்த்தம்?

ஆக அப்படி மனதை புரிந்தவனுக்கு, மனதில் உள்ள விஷயம், அதாவது தான் அவன் மீது காதல் கொண்டிருக் கிற விஷயமும் தெரியாமலா, புரியாமலா போய்விடும்?

குதூகலமாய் அவன் முன் கலகலவென சிரிக்க ஆரம்பித்தாள் காஞ்சனை.

# 16

மறுவாரம் 'பூம்பொழில்' கிராமத்தில் புகழ்பெற்ற கம்ப்யூட்டர் நிறுவனம் ஒன்று தனது புதுக்கிளையைத் தொடங்கியது. வேகமாக வளர்ந்து வரும் கணினி உலகின் புதுப் புது சாதனைகளை தெரிந்து கொள்ளும் வண்ணம் கோச்சிங் வகுப்புகளையும் தொடங்கியது.

விஷயம் கேள்விப்பட்ட காஞ்சனமாலா கிளை திறந்த அன்றே தோழியர்கள் புடை சூழ சென்று விசாரித்தாள். அவளுக்கு டிசைனிங் பிரிவில் மேலும் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆசை இருந்ததால் அந்தப் பிரிவு கோர்ஸில் சேர்ந்து விட்டாள்.

தோழிகளையும் வற்புறுத்தி அடிப்படை பயிற்சி கணினி வகுப்பில் சேர்த்து தனக்கு தினமும் துணைக்கு வரும்படி வைத்துக் கொண்டாள்.

தினம் ஒரு மணி நேரம் வகுப்பு. இரண்டு மூன்று நாள் குஷியாய் கணினி வகுப்புக்குச் சென்றவளுக்கு மூன்றாம் நாள் பெரும் ஆச்சரியம்!

வகுப்பின் பக்கத்து பெஞ்சில் நோட்புக்கும் கையுமாய் மகேந்திரன்!

''என்ன நீங்களா? நீங்கள் எப்படி?''

மகேந்திரன் தன் முறுக்கு மீசை அதிர சிரித்தான்.

''ஏன்... நான் வரக்கூடாதா? நானும் இந்த டிசைனிங் பிரிவு பற்றி தெரிந்து கொள்ளத்தான் சேர்ந்திருக்கிறேன். எனக்கும் படிக்க வேண்டும் இன்னும் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் இருக்கத்தான் செய்கிறது.''



''அட... நல்ல ஆர்வம் தான்...! வயல்காட்டில் மாட்டையும் ஏறையும் பிடிப்பதை விட்டுவிட்டு... இப்படி கணினி படிப்பது நல்ல ஆசைதான்'' அவள் அதிசயித்து அபிநயக்க.... அவனும் அதே போல் அபிநயத்து கைகளை வைத்தவன் ''அங்கு மட்டும் என்னவாம்? வீட்டு சமையலறையில் பிசுபிசு புளியை உருட்டி சமையல் கற்றுக் கொள்வதை விட்டு விட்டு இந்த கணினி பட்டன்களை தட்டிப் பார்க்க அல்லவா அந்த விரல்கள் வந்திருக்கிறது?'' என்றவன் விடாது... ''ஆங்.... வர்ணனையே மறந்து விட்டேனே...? கதைகளில் சொல்வது போல் பிஞ்சு வெண்டைக்காயைப் போன்ற பிஞ்சு விரல்கள்...? என்ன வர்ணனை சரிதானா?'' என முடித்து சிரிக்கவும் செய்தான்.

அவன் தன் விரல்களை ரஸித்துச் சொல்கிறானா அல்லது கேலி செய்கிறானா எனப் புரியாதவளாய் ஒரு கணம் தன் விரல்களை உற்றுப் பார்த்து விட்டுத் திரும்பியவள், ''நான் சீரியஸாக கேட்கிறேன் மகேந்திரன். நிஜமாகவே ஆர்வத்தில் தான் சேர்ந்தீர்களா?'' என்றாள் அவனது உண்மையான மனக்குறிப்பை அறிய விரும்பியவளாய்.

ஆனால் அவள் நினைப்பை முழுவதுமாய் படிக்க விரும்பியவன் போல் மகேந்திரனும் விடாது, ''வேறு எதற்காக சேர்ந்தேன் என்று நினைத்தாய்?'' என்றதும், நாம் அறிய நினைத்தால் அவன் நம் மனதை படிக்க முயல்கிறானே...? என திகைத்தவள் பேச்சை மாற்றும் விதமாய், ''நான் மட்டும் அல்ல. தோழிகள் நீலாவதி,

செண்பகக்கண்ணு, மல்லிகைக் கொடி மூவருமே என்னுடன் படிக்க வருகிறார்கள்...'' என்றாள் அவசரமாய்.

''ம்ம்... நானும் பார்த்தேன்...'' என மகேந்திரன் தலையாட்டியவன், ''மிகச் சரியான அறிவுக் கொழுந்துகளுடன் தான் வந்து சேர்ந்திருக்கிறாய்... ஆனால் ஒன்று...'' என மறுபடியும் நிறுத்தி அவளை சீரியஸாய்ப் பார்த்தவன், ''படிப்பை படித்து முடித்ததும் பார். உங்கள் எல்லோருக்கும் அறிவுக் கொம்பு ஒன்று தலையில் முளைத்து வெளியில் நீட்டிக்கொண்டு தெரியப்போகிறது. நீங்கள் ஜாக்கிரதையாய் நடமாட வேண்டும்...'' என்றான் கொஞ்சமும் சிரிக்காமல்.

அவளும் விடாது, ''சரி... மகேந்திரன் சார். அப்படி நாங்கள் அறிவுக் கொம்புகளுடன் ரோட்டில் அலைந்து திரியும் போது தயவு செய்து நீங்களும் அங்கு இங்கு எதிர்பக்கம் வந்து விடாதீர்கள்... பின் அந்தக் கொம்புகளால் உங்களை குத்திக் கிழித்து.... ஐயோ... ரத்தம்... ரத்தம்... என நீங்கள் ஓடிக் கொண்டு...'' சொல்லியபடி அடக்க முடியாமல் கலகலவென முத்துப்பற்களைக் காட்டி அவள் சிரிக்க... மகேந்திரனும் தன்னை மறந்து சிரிக்கத்தான் செய்தான்.

அன்றைய காலைப் பொழுது அப்படி ஆரம்பித்திருந்தாலும் பயிற்சியாளர் வந்ததும் இருவரும் சீரியஸாக பாடத்தில் கவனம் கொள்ள ஆரம்பித்து விட்டனர். காஞ்சனை தான் அவ்வப்போது மகேந்திரனை ஓரக்கண்ணால் ஓரிரு முறை பார்த்தாள். அவன் அக்கறையாய் பயிற்சியில் ஆழ்ந்திருப்பதைக் கண்டு அவளுள் வியப்பு கூடியது.



முன்பு போல் இல்லாமல் கம்ப்யூட்டர் கோர்ஸ் படிப்பு என்கிற சூழலில் அவளும் மகேந்திரனும் தினமும் சந்திக்க வேண்டியிருந்தது. பேச வேண்டியிருந்தது. இயல்பான பேச்சு தான் என்றாலும் காஞ்சனைக்கு அவனுடன் பேசுவதே உற்சாகமாய் இருந்தது.

ஆனால் அவளை தினம் கம்ப்யூட்டர் வகுப்பு முடிந்ததும் அழைத்துச் செல்ல வரும் செல்வத்தின் முகம் தான் கடுகடுவென இருந்தது. அவன் வரும் சமயம் எல்லாம் காஞ்சனை மகேந்திரனுடன் சிரிக்க சிரிக்க பேசிக் கொண்டிருப்பது செல்வத்தின் எரிச்சலை அதிகப்படுத்தியது.

''என்ன அப்படி ஒரு சிரிப்பு காஞ்சனா...? அப்படி என்ன சிரிக்கும்படி அவர் சொல்லிவிட்டார்?'' என நேரிடையாகவே அவன் ஒரு முறை கேட்டபோதும் அவன் நோக்கம் புரியாது. ''அதுவெல்லாம் சொன்னால் உங்களுக்குப் புரியாது செல்வம். மிஸ்டர் மகேந்திரன் பேசினால் ஒரே சிரிப்பு தான்....'' என அதற்கும் காஞ்சனமாலா ஒரு சிரிப்பு சிரிக்கவும் செல்வத்திற்கு சப்பென்று போயிற்று.

சில சமயம் மகேந்திரனை செல்வத்தைப் பார்த்து வலியச் சென்று பேச்சும் கொடுப்பான். ''என்ன... செல்வம்... நீங்களும் கூட இந்த கம்ப்யூட்டர் பயிற்சி எடுக்கலாமே... வகுப்பில் சேருகிறீர்களா?'' என்று ஒரு முறை கேட்க பதிலுக்கு முகம் வெட்டிய செல்வம்,

''ம்கூம்! எனக்கு வேண்டாம் மகேந்திரன் சார். இந்தப் பெண்களைப் பார்த்ததும் பல்லைக் காட்டிக் கொண்டு வழிவது.... வெட்கமில்லாமல் நாய் போல் வாலை

ஆட்டிக் கொண்டு அவர்கள் பின்னால் அலைவது... இதுவெல்லாம் நமக்கு ஒத்து வராது சார். நீங்கள் தான் செய்ய வேண்டும்...?'' என முகத்திலடித்தாற் போல் கூற மகேந்திரனே ஒரு கணம் திடுக்கிட்டு அவனைப் பார்த்தவாறு காஞ்சனையையும் உற்றுப் பார்த்தான்.

காஞ்சனைக்குத்தான் ரொம்பவும் சங்கடமாய் போயிற்று. கூடவே பயங்கர கோபமும் வந்தது. என்ன தைரியமாய் மகேந்திரனை நாயுடன் ஒப்பிட்டு... இந்த செல்வம் என்ன தான் நினைத்து...?

கோபமாய் அவள் நிமிர்ந்து பேச வர அதை உணர்ந்த வனாய் கண்களாலே ஒரு அர்த்த பார்வை பார்த்து அவ சரமாய் தடுத்தான் மகேந்திரன். ''இல்லை காஞ்சனை. செல்வம் சொல்வது கூட சரிதான். சில கம்ப்யூட்டர் சென்டர்களில் அப்படி நடப்பதாக நானும் கேள்விப்பட் டிருக்கிறேன்...'' என்றான் அந்தப் பேச்சை அத்தோடு முடித்து வைப்பவனாய்.

மறுவாரம் அதே போல் ஒரு நாள் கூப்பிட வந்த செல்வம் மகேந்திரனிடம் வெடுக்கென, ''மகேந்திரன் சார் உங்களுக்கு தினமும் காஞ்சனையுடன் இப்படி சளசளத்து பேசா விட்டால் தூக்கமே வராது போலத் தெரி கிறது?'' என்றான் முகத்தை உர்ரென வைத்துக் கொண்டு குத்தலாய்.

மகேந்திரன் டக்கென அதிர்ந்தாலும் சமாளித்துக் கொண்டு, ''ம்ம் உண்மை தான்.... காஞ்சனையின் பேச்சு... அந்தப் பளீர் சிரிப்பு... எனக்கு ரொம்பவும் பிடிக்கும்...!'' என்றான் காஞ்சனையின் மெல்லிய இதழ்களை நோக்கி ரஸித்து நோக்கி பார்வையை பதித்தபடி.



செல்வத்தின் பேச்சை விட மகேந்திரன் சொன்னது சொல்லிவிட்டு தன் இதழ்களை ஒரு ரசனைப்பார்வை பார்த்தது கண்டு காஞ்சனமாலா திடுக்கிட்டுத்தான் போனாள். சட்டென முகம் சிவக்க குனிந்தாள்.

ஆனால் செல்வம் அன்று கடித்துக் குதறும் எண்ணத்தில் இருந்தான் போலும். அதனாலே, ''ஆனால் மகேந்திரன் சார். ஒன்றைத் தெரிந்து கொள்ளுங்கள். நீங்கள் ரஸிப்பது சரிதான். ஆனால் அடுத்தவர் பொருளுக்கு, இன்னொருவருக்கு சொந்தமாகப் போகிற பொருளுக்கு நாம் ஆசைப்படக்கூடாது. புரிகிறதா?'' என்றபடி காஞ்சனையின் கைகளைப் பிடித்து விறுவிறுவென இழுத்துச் சென்று விட்டான்.

மறுநாள் வகுப்பிற்கு வந்த காஞ்சனையை மகேந்திரன் பிடித்துக் கொண்டு செல்வம் பற்றி ஆரம்பித்து விட்டான். ''காஞ்சனை உன் அத்தான் செல்வம் என்னிடம் பழகுவது பேசுவது எல்லாம் புதிராக இருக்கிறது. என்ன காரணம் நீயே சொல்லு!'' என்றான்.

காஞ்சனா ஒரு கணம் திகைத்தாள். என்ன சொல்வது? என்ன தயக்கம் காட்டினாள்.

''சும்மாச் சொல்லு காஞ்சனை...'' என மகேந்திரன் வற்புறுத்தியதும் மடமடவென கொட்டி விட்டாள்.

''அது வேறு ஒன்றுமில்லை! செல்வம் என்னைக் கட்டிக் கொள்ள நினைக்கும் முறை மாமா... அவர் நான் உங்களிடம் சிரித்து சிரித்து பேசுவது கண்டு... ரொம்பவும் பயப்படுகிறார். அதனாலே உங்களிடம் தேவையில்லாமல் அப்படி எரிந்து எரிந்து பேசுகிறார்... அதனால்...''

அவள் சொல்லச் சொல்ல... ''ம்ம்... புரிகிறது... புரிந்து விட்டது! அது தானா விஷயம்? ரொம்பவும் நல்லதாய் போயிற்று.... இன்றே இந்த நம் விஷயத்தை செல்வத்திற்கு தெளிவுப்படுத்தி விடுகிறேன்...!'' என்றான் மகேந்திரன் உற்சாகக் குரலில் தலையாட்டியபடி.

காஞ்சனையும் சட்டென பேச்சை நிறுத்தி துணுக்குற்றவள், ''என்ன... என்ன தெளிவுப் படுத்தப் போகிறீர்கள்?'' என்றாள் ஆவலாய்.

''வேறென்ன...? நம் இருவருக்குமிடையே இருப்பது வெறும் நட்பு தான்... வேறு ஒன்றுமில்லை... என்பதை!'' அழுத்தமாய் சொல்லிவிட்டு மகேந்திரன் சிரிக்க ஆரம்பித்தான்.

வாடிய மலர் போல் சட்டென கூம்ப ஆரம்பித்தது காஞ்சனையின் முகம்.

அதை சிரித்த மகேந்திரனும் உற்று கவனித்தான். அவன் அப்படி ஆவலாய் தன் முகக்குறிப்பை கவனிப்பதை அவளும் உணரத்தான் செய்தாள்.

## 17

மகேந்திரன் என்றுமில்லாததாய் அன்று செல்வம் பற்றி பேச ஆரம்பித்து விட்டான். காஞ்சனைக்கு ஒரே ஆச்சரியம். அவனது பண்ணை வீட்டுத் தோட்டத்தில் பூக்களை பறித்து பட்டாம்பூச்சிகளுடன் விளையாடிக்



கொண்டிருந்தவள், அவன் மகேந்திரன் செல்வம் பற்றி ஒவ்வொன்றாய் கேட்க பட்டும் படாமலுமாய் பதில் சொல்லிக் கொண்டிருந்தாள் அவள்.

மகேந்திரன் செல்வம் சிறுவயதில் பெற்றோர்களை பறிகொடுத்தது காஞ்சனையின் தந்தை அரவணைப்பிலே வளர்ந்தது என எல்லாவற்றையும் விவரமாய் கேட்டவன் டக்கென, ''அப்படியானால் சிறுவயதிலேயே முடிவு பண்ணிய விஷயம்தானா அது?'' என்றான்.

குறுக்கும் நெடுக்கும் சிட்டாய் விரட்டி ஓடிக்கொண்டிருந்தவள் சட்டென நின்றாள்.

''என்ன விஷயம்?'' என்றாள்.

''அது... அது...'' என ஆரம்பித்த மகேந்திரன் சொல்லத் தயங்கியவனாய், ''வந்து காஞ்சனை உனக்கும் செல்வத்திற்கும் மணமுடிப்பது.... என்று...'' என முடித்தான் மெல்லிய குரலில்.

காஞ்சனை இதை எதிர்பார்க்கவில்லை. பக்கென்று நெஞ்சை அடைத்தது போல் தான் இருந்தது. இருந்தும் தன் காதுகளில் தவறாய் விழுந்திருக்குமோ என்பது போல், ''என்ன... என்ன சொன்னீர்கள்?'' என்றாள்.

''இல்லை... காஞ்சனை... உனக்கும் உங்கள் செல்வம் அத்தானிற்கும் சிறு வயதிலே மணம் முடிப்பது பற்றி...''

அவன் மேற்கொணடு முடிப்பதற்குள்,

''சுத்தப் பேத்தல்...'' என்றவள் விடாது, ''சிறு வயதில் விளையாட்டாய் பொம்மைக் கல்யாணம் செய்து விளையாடுவார்களே... அது போல் தான்.... அது...'' என முடித்தாள்.

படபடப்பாய் மூச்சு வாங்க கொதிப்புடன் அவள் சொல்லியவிதம், அவள் காட்டிய எரிச்சல் எல்லாவற்றையும் உற்றுக் கவனித்த மகேந்திரன் ஆச்சரியம் விலகாமலே அவளைப் பார்த்தான்.

''காஞ்சனை நான் அப்படிச் சொல்லவில்லை. சிறு வயது முதலே அப்படி ஒரு பேச்சு எழும்பி உங்கள் இருவரது மனதிலும் பதிய வைத்து விட்டார்களோ... என்று தான் கேட்க நினைத்தேன்...''

இம்முறை காஞ்சனை கடகடவென தன் கலகல சிரிப்பை உதிர்த்தாள்.

''மகேந்திரன் சார்... உங்கள் கற்பனை பிரமாதம்! எங்கள் மனதில் நல்ல உரம் போட்டு, ஏர் வைத்து ஆழமாய் உழுது... பதியத்தான் வைத்து விட்டார்கள்...!'' என்றாள் சிரிப்பை விடாமல்.

''விளையாடாதே காஞ்சனை. நான் சீரியஸாய் கேட்கிறேன்...''

''நானும் விளையாடவில்லை. உண்மையைத்தான் சொல்கிறேன்ஞ..'' என்றாள்.

''எந்த உண்மை காஞ்சனை?''

''அப்படி செல்வம் அத்தான் மனதில் எல்லோரும், காஞ்சனை உனக்காக பிறந்தவள் என தவறாக உரம் போட்டு பதிய வைத்து விட்ட உண்மையைத்தான் சொல்கிறேன்...'' என்றாள் காஞ்சனை நேரிடையாய் அவன் கேட்கும் விஷயத்திற்கு வந்தவளாய்.

அட... இவள் சரியாக புரிந்து கொண்டுதான் பேசுகிறாள்... என உணர்ந்து கொண்ட மகேந்திரன் மேலும்



தெளிவுபடுத்த விரும்புபவனாய், ''ஆனால்... அதில் உன் நிலை... உன் நிலைப்பாடுதான் என்ன காஞ்சனை?'' என்றான்.

அவன் கேட்க... காஞ்சனை பதில் பேசாது ஒரிரு நிமிடம் கண்களை விரித்து அவனையே உற்றுப் பார்த்தாள்.

''இன்னுமா அது.... உங்களுக்குத் தெரியவில்லை?'' என்றாள் மேலும் கண்களை படபடப்பாக்கி ஆச்சரியத்துடன்.

''தெரியவில்லை தான்...! நீயே.... உன் வாயால் கொஞ்சம் சொல்லத்தான் செய்யேன்...!'' என்றான் மகேந்திரன் விடாமல்.

மறுபடியும் கலகலவென நகைத்தவள் சட்டென அதை நிறுத்திவிட்டு, ''ஓஹோ...! எல்லாம் இப்போது புரிந்து விட்டது...!'' என்றாள் கண்கள் உருளும் பார்வையுடன்.

''என்ன புரிந்து விட்டது காஞ்சனை?''

''எல்லாவற்றையும் என் வாயால் உளறிக் கொட்டி விஷயத்தை கண்டு பிடிக்க வேண்டும். அது தானே உங்களது திட்டம்...?'' என்றாள்.

எதையோ கண்டு பிடித்து விட்டவள் போல்.

''திட்டமா...? அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை காஞ்சனை...''

''பின் எதற்காக திடீரென இப்படி செல்வம் அத்தான் பற்றி தோண்டித் துருவி கேட்கிறீர்கள்...?''

''எல்லாம்... சும்மாவாக.... தெரிந்து கொள்ளலாம்... என்று தான்...''

''அவ்வளவு தானா?''

''அவ்வளவே தான்...!'' என்றான் மகேந்திரன் கைகளை பிரித்து தன் கூற்றை நியாயப்படுத்துவது போல்.

''ஓஹோ...!'' ... என மறுபடியும் முகம்வெட்டி அவனைப் பார்த்தாள் காஞ்சனை. ''அப்படி என்றால் நானும் ஒரு விஷயத்தை சும்மாவாக கேட்டு சும்மாவாக தெரிந்து கொள்ளலாமா...?'' என்றாள்.

''ம்ம்... தாராளமாய் கேள்...! பதில் சொல்கிறேன்... காஞ்சனை...'' என்றான் மகேந்திரனும் உற்சாக குரலில்.

''அதாவது.... நான்.. செல்வம் அத்தானை சுத்தமாய் விரும்பவில்லை. அவரை மணக்க ஒரு போதும் சம்மதிக்கப் போவதில்லை... என்பது தெரிந்தால்... அப்படி அதை நீங்கள் தெளிவாக தெரிந்து கொண்டால்... நீங்கள்... நீங்கள் என்ன செய்வீர்களாம்...?''

புருவம் உயர்த்தி கண்கள் விரிய அவள் கேட்ட போது அவள் கேட்டதின் முழு அர்த்தம் மகேந்திரன் உணர்ந்தவனாய் ஓரளவு திடுக்கிடவே செய்தான்.

செல்வம் அவள் மனதில் இருக்கிறானா... அவள் மனதில் அவனுக்காக கொஞ்சமாவது இடம் இருக்கிறதா...? என்பதை தெரிந்து கொள்வோம்.... அப்படி லேசான ஆசை காஞ்சனைக்கு செல்வத்தின் மீது இருந்தால் கூட இருவரையும் சேர்த்து வைத்து விடலாம்.... என்றெல்லாம் நினைத்து கேட்ட மகேந்திரனுக்கு அவள் கேள்வியை மாற்றி கேட்ட தொனி குழப்பவே செய்தது.



யோசனையுடன் முகத்தை நிமிர்த்தியவன், ''ஒன்றும் செய்யமாட்டேன். சும்மாவாக கேட்டுக் கொள்வேன். அவ்வளவு தான்!'' என்றான் அவளைப் போலவே பேசிக்காட்டி சிரித்தபடி.

# 18

மகேந்திரன் அன்று அவ்வளவு சொல்லியும் காஞ்சனை கொஞ்சமும் அசரவில்லை. அவளுள் எந்த மாற்றமும் இல்லை!

மகேந்திரனே திகைக்கத்தான் செய்தான்.

இவ்வளவு தூரம் தன்னை காஞ்சனை விரும்புகிறாளா என்பது ஒரு புறம் பெரும் ஆனந்தத்தை ஏற்படுத்தினாலும் மறுபுறம் செல்வத்தின் சோகமான கெஞ்சல் ததும்பும் முகம் தோன்றி தடுத்தது.

என்ன ஆனாலும் செல்வம் பாவம்தானே!

அவன் முறைப்பெண்ணான காஞ்சனை மீது ஆசைப்படுவதும் நியாயம்தானே!

ஆனால் தான் காஞ்சனைக்கு அவனை சுத்தமாய் பிடிக்கவில்லையே! பிடிக்காதவளை எப்படி மாற்ற முடியும்? செல்வத்தைக் கட்டிக் கொள்ள சம்மதிக்க வைக்க முடியும்?

சூழ்நிலையைக் காட்டியோ, நெருக்கடி கொடுத்தோ... காஞ்சனையின் மனதை மாற்ற முடியாது. அதற்கு

எல்லாம் பயப்படுகிற ஆள் அவள் இல்லை. பின் எப்படி?

மகேந்திரன் அதற்கும் தீவிரமாய் இரண்டு நாள் யோசித்தான்.

ஒரு வழியையும் கண்டு பிடித்தான்.

அதாவது அவள் நகைச்சுவையாய், இனிமையாய் பேசிப் பழகுவது கண்டுதானே காஞ்சனை... நம்மீது பிரியம் கொண்டாள்.... அன்பு செலுத்தினாள்...? முதலில் இனி காஞ்சனையிடம் முகம் வெட்டி பேசி கடுமையாக நடந்து கொள்வோம். காஞ்சனைக்கு நம் மீது வெறுப்பு வரும் அளவுக்கு நடந்து கொள்வோம். அப்படி காஞ்சனைக்கு வெறுப்பு வரும் சமயத்தில் செல்வத்தை தூண்டி விட்டு அன்பாய் இனிமையாய் காஞ்சனையிடம் பேசச் சொல்வோம். அப்படியாவது அவன் காஞ்சனையின் மனதில் இடம் பிடித்தால்... சரி...!

இது தான் மகேந்திரன் தீவிரமாய் ஆராய்ந்து கண்டு பிடித்த பிளான்! திட்டம்! அதை மறுவாரமே பிர யோகித்து காஞ்சனையின் மனதை அறிய முடிவெடுத் தான் அவன்.

அதன் படி மறுவாரம் ஆவலாய் தேடி வந்த காஞ்சனையை முகம் கொடுத்து பார்க்காமல் நழுவினான். சாக்கு போக்கு சொல்லி பேசுவதை தவிர்த்தான்.

அப்படியே பேச நேர்ந்தாலும் முன்பு போல் இனிமையாய் இல்லாமல் எரிச்சலாய் எரிந்து விழும் அளவுக்கு பேசினான்.

காஞ்சனைக்கு பேசுவது மகேந்திரன் தானா என ஒரே திகைப்பு!



"நீங்களா... நீங்களா... என்னிடம் இப்படி கோபமாய் பேசுவது?" என அடக்க முடியாமல் வாய் விட்டு கேட்டும் விட்டாள்.

அதற்கும், "நான்... நான் தான்...! எனக்கும் கோபம் ஆத்திரம் என எல்லா உணர்ச்சிகளும் உண்டு. நானும் மனிதன் தானே?" என சமாளித்தான். தொடர்ந்து விரட்டும் தொனியிலே அவளிடம் பேசினான்.

ஆனால் அவனது நடவடிக்கைகளை இரண்டு மூன்று நாள் கூர்ந்து கவனித்த காஞ்சனை நான்காவது நாள் தன்னைக் கண்டதும் அவன் முகம் மாறுவதையும் வேண்டுமென்றே விடாப்பிடியாய் முகத்தில் கடுகடுப்பை வரவழைக்க முயல்வதையும் கண்டு பிடித்து விட்டாள்.

ஆக... இது மகேந்திரனின் இயற்கையான சுபாவம், கோபம் இல்லை செயற்கையான கோபம் எதற்காகவோ, என்ன காரணத்திற்காகவே இப்படிச் செய்கிறான்... தன்னிடம் வேண்டுமென்றே நடந்து கொள்கிறான் என்பது அவளுக்கு தெளிவாய் புரிந்து விட்டது.

விஷயத்தை கண்டு பிடித்து யோசித்தவளுக்கு அதற்கான காரணத்தை கண்டு பிடிக்கவும் எளிதாகவே இருந்தது.

வேறென்ன? செல்வத்திற்காகத்தான் இப்படி மகேந்திரன் நடந்து கொள்கிறான் என்பதையும் நொடியில் கண்டுபிடித்து விட்டாள்.

அட... இப்படி தன்னை வெறுப்பது போல் நடித்தால்... அவள் மனம் மாறி விடுவாளா? உடனே செல்வத்தை விரும்ப ஆரம்பித்து விடுவாளா?

என்ன ஒரு முட்டாள்தனம்?

கொதிப்பாய் நினைத்தவள் மகேந்திரனின் இந்த நினைப்பிற்கு அவனது பாணியிலேயே எரிச்சலூட்டும் படி பதிலடி கொடுக்க நினைத்தாள்.

அதை மறுநாளே செயல்படுத்தவும் செய்தாள்.

மறுநாள் வழக்கம் போல் வந்து மகேந்திரனிடம் பேச முயல, மகேந்திரனும் தனது நடிப்பு சுபாவப்படி அவள் மீது கடுகடுவென முகத்துடன் எரிந்து விழுந்து பேச... ''அப்படித்தான்...! அப்படித்தான்... தொடர்ந்து பேசுங்கள்... இன்னும்... சொல்லுங்கள்.... கேட்க இனிமையாய் இருக்கிறது...'' என்றாள் காதுகளைத் தீட்டி அவன் பக்கம் வைப்பது போன்ற பாவனையில்.

மகேந்திரன் திகைக்கத்தான் செய்தான்.

அட... அதற்குள் நம் நடிப்பை இவள் கண்டு பிடித்து விட்டாளே... என நினைத்தவன் சமாளித்துக் கொண்டு, ''விளையாட்டல்ல... காஞ்சனை... இது... இது... நிஜமான எனது கோபம்தான். என்னுடைய சுபாவம்தான்!'' என்றான்.

காஞ்சனையும் வேகமாய் தலையாட்டியவள்,

''ஆமாம்... ஆமாம்...! எல்லாம் உங்கள் கோபம்தான்! நிஜமான சுபாவம்தான்!'' என முகம் வெட்டியவள், 'வெவ்வ்வ்வே...'' என பழிப்பு காட்டி கலகல சிரிப்புடன் அகன்றாள்.

ம்கூம்! இவளை லேசில் ஏமாற்ற முடியாது தான்! என்ற முடிவுக்கு வந்தான் மகேந்திரன்.



# 19

செல்வத்திற்கு தான் மகேந்திரனுடன் பழகுவது கொஞ்சமே பிடிக்கவில்லை... மகேந்திரனுடன் தான் பேசுவதை பார்த்தாலே முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கத்தான் அலைகிறான் என்பதையும் உணர்ந்திருந்தாள்.

ஆனால் அதற்காக நேருக்கு நேர் மகேந்திரன் தன்னிடம் குற்றம் சாட்டிப் பேசுவான் என அவள் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. எழும் கோபத்தில் மூக்கு நுனி சிவக்க அவன் விறைத்துக் கொண்டு போவான் என்று தான் அவள் எண்ணினாள். ஆனால் அவன் நேருக்கு நேராய் தன்னை சண்டைக்கு இழுக்கக் கூடும் என அவள் கனவிலும் நினைக்கவில்லை.

அன்று செல்வம் நேராய் அவளைத் தேடிவந்து வரிசையாய் குற்றப்பத்திரிகையை படிக்க ஆரம்பித்து விட்டான். ''பார் காஞ்சனை, உனக்கு அந்த மகேந்திரனைப் பற்றி தெரியாது. அவர் எவ்வளவு மோசம் என்று தெரியுமா?'' என ஆரம்பித்து விட்டான்.

காஞ்சனையும் இவன் பேசுவதை கேட்காமல் தப்பிக்க முடியாது என்ற நினைப்பில், ''மோசமா? என்ன சொல்கிறீர்கள் நீங்கள்?'' என்றாள் சுரத்தில்லாத குரலில்.

''காஞ்சனை... அந்த... மகேந்திரன் பெரிய பண்ணை வீட்டுக்காரன் மட்டுமல்ல... பெரிய மைனர்...'' என

முகம் விரித்துச் சொல்லி நிறுத்தியவன், ''மைனர்... மைனர்... என்றால் உனக்குத் தெரியுமா... தெரியும் தானே?'' என கேட்கவும் செய்தான்.

''தெரியும்...'' என்ற காஞ்சனையும் விடாமல் ''இந்த சினிமாப் படங்களில் எல்லாம் காட்டுவார்களே... மல்லு வேட்டி கட்டிக் கொண்டு, பெரிய கிருதா மீசையுடன் கழுத்தில் புலிச்செயின் தொங்க கண்களை உருட்டி பயங்காட்டி வருவார்களே... அந்த மைனர்களைத் தானே சொல்கிறீர்கள்?'' என்றாள் வரும் சிரிப்பை அடக்கிக் கொண்டு.

செல்வமோ அதை உணராமல், ''மிகச் சரியாகச் சொன்னாய் காஞ்சனை. அப்படிப்பட்ட மைனர் தான் இந்த மகேந்திரன்! உனக்குத் தெரியாது.... அவருக்கு... நிறைய கெட்ட குணங்கள். பழக்கங்கள் உண்டு....'' என்றான் சீரியஸாய் முகத்தை வைத்துக் கொண்டு.

''அப்படியா...? எனக்கு தெரியவே தெரியாதே செல்வம் அத்தான்...?'' என்றாள் காஞ்சனையும் அக்கறையாய் கேட்பது போல்.

செல்வமோ குஷியாகி கதை போல் சொல்ல ஆரம்பித்து விட்டான். ''நீ ஒன்றும் தெரியாத அப்பாவி காஞ்சனை. அந்த மகேந்திரன் லாவகமாக பேசிப்பேசி உன்னை ஏமாற்றத்தான் செய்கிறார்? ஊர் முழுக்க அந்த மகேந்திரனைப் பற்றி கதைகதையாய்த்தான் சொல்கிறார்கள்...'' என்றான்.

காஞ்சனையும் தொடர்ந்து அவனிடம் விளையாடும் மனநிலையோடு, ''என்ன நிறைய கதைகள் சொல்கிறார்களா...? அப்படியானால் அதில் ஒரு கதையை எடுத்து



எனக்குச் சொல்லுங்களேன். எனக்கும் தெரிந்து கொள்ள ஆசையாக இருக்கிறது...'' என்றாள்.

அவளது கேலியை உணராமல் செல்வமோ, ''உண்மையான கதைகள் காஞ்சனை. அதில் முக்கியமானது.... மகேந்திரனுடைய சகவாசம் தான்!. அவருக்கு நிறைய இளம்பெண்களுடன் பழக்கமுண்டு... அவரது பண்ணை வீட்டிற்கு பக்கத்து ஊர்களில் இருந்து முக்காடு போட்டுக் கொண்டு பல பெண்கள் இரவோடிரவாய் வந்து போவதை நிறைய கிராமவாசிகள் பார்த்திருக்கிறார்களாம்...''

செல்வம் காஞ்சனை, சொல்வதை நம்புகிறாளா என்பதை அறிய பேச்சை நிறுத்தி கூர்ந்து அவளது முகத்தை உற்றுப் பார்த்தான்.

''அவ்வளவு கெட்டவரா மகேந்திரன்?'' என்றாள் காஞ்சனையும் நம்புவது போன்ற முகபாவனையுடன்.

''அது... மட்டுமல்ல காஞ்சனை... அவரிடம் சிகரெட், மது... போன்ற கெட்ட பழக்கங்களும் உண்டாம். ஊரில் தான் உத்தம புருஷன் போல் காட்டிக் கொண்டு வீட்டில் யாருக்கும் தெரியாமல் சிகரெட் பிடிப்பதும் மது அருந்துவதாயும் பண்ணை வீட்டு ஆட்கள் என்னிடம் சொல்லியிருக்கிறார்கள்...''

''அப்படியா?''

மறுபடியும் உதடு விரிய அவள் வேண்டுமென்றே அதிசயித்தாள்.

செல்வத்திற்கும் சந்தேகம்தான். அவள் தான் சொன்னது எல்லாம் நம்புகிறாளா... அல்லது கேலியில் விளையாடுகிறாளா என்று?

அதனால் திரும்பி அடிக்கடி அவள் முகக்குறிப்பை உற்றுப் பார்த்து ஆராய முயன்றான்.

காஞ்சனையோ எவ்வித சலனமுமில்லாமல் அன்று கேட்டுக் கொண்டு மறுநாள் அவனது கேள்விகளுக்கு பதிலடி கொடுத்தாள்.

மறுநாள் தன்னைப் பார்க்க வந்த மகேந்திரன் செல்வம் முன்னால் கூட்டிச் சென்று உட்கார வைத்து விட்டாள்.

செல்வம் புரியாமல் திகைக்க, "மிஸ்டர் மகேந்திரன் சார், உங்களிடம் சில கேள்விகளை இப்போது கேட்பேன். நீங்கள் டக் டக்கென பதில் சொல்ல வேண்டும். புரி கிறதா?" என்றாள்.

"புரிகிறது..." என்றான் மகேந்திரனும் அவளது கண் ஜாடையின் அர்த்தம் உணர்ந்தது போல்.

"கேள்விகளை ஆரம்பிக்கட்டுமா?" என்றாள் திரும் பவும்.

"ம்ம்... ஆரம்பியுங்கள்..."

"நீங்கள் ரொம்ப கெட்டவராமே?"

காஞ்சனை குரலை உயர்த்தி நகைப்பை அடக்கிய வாறு கேட்க, "ஆமாம்... ஆமாம்... நான் ரொம்ப கெட் டவன்...." என்றான் மகேந்திரனும் அழுத்தமாக.

"உங்களிடம் பீடி, சிகரெட், மது.... என கெட்ட பழக்கங்கள்...?"

"ம்ம்... எல்லாமும் உண்டு...! அது போன்ற பழக் கங்கள் இருந்தால் தானே நான் கெட்டவனாக ஆக முடி யும்..." என்றவன் அதே தொனியில் விடாது, "நான்



கிராமத்து மைனர். விளையாட்டுப் பிள்ளை!" என முடிக்கவும் செய்தான்.

காஞ்சனை கைதட்டாத குறையாய் உற்சாகமாய் செல்வம் பக்கம் திரும்பினாள்.

"செல்வம் அத்தான், நீங்கள் சொன்னது எல்லாம் நூற்றுக்கு நூறு உண்மை. இந்த மகேந்திரன் சார் மிகக் கெட்டவர் தான்.... கெட்ட பழக்கங்கள் உடையவர் தான். அதை அவரே அவரது வாயாலே ஒத்துக் கொண்டார்... இனி நீங்களும் இவருடன் பேசிப் பழகாதீர்கள் சரி தானே?"

காஞ்சனை கேட்க... அப்போது தான் செல்வத்திற்கு புரிந்தது. காஞ்சனை மகேந்திரனுடன் சேர்ந்து கொண்டு தன்னை நன்றாக கிண்டலடிக்கிறாள் என்று கோபத்தில் முகம் சிவந்தான் அவன்!.

## 20

செல்வத்திற்கு அன்று இரவு முழுவதும் தூக்கம் வந்தபாடில்லை. இரவு அவன் அறை பக்கம் வந்த காஞ்சனை கூட, "குட் நைட் மாமா...!" என சிரிப்புடன் சொல்லிச் சென்றது கூட அவன் காதுகளில் உரைக்க வில்லை.

மனம் முழுவதும் மகேந்திரனின் முகமே விரிந்து பயம் காட்டிக் கொண்டிருந்தது. யாரிவன்? எங்கிருந்து

இங்கு வந்து குதித்தான்? சம்பந்தமே இல்லாமல் எப்படி காஞ்சனையிடம் வந்து பழகினான்? நம் நிம்மதி மொத்தத்தையும் வந்து தொலைக்க வைத்து விட்டானே!

புலம்பாத குறையாய், படுக்கப் பிடிக்காதவனாய் எழுந்து குறுக்கும் நெடுக்கும் நடந்தான்.

அவன் முகமும் அந்த கடகடபேச்சும்... நொடிக்கொரு தரம் சிரிக்கும் வண்ணமும்... அந்தச் சிரிப்பைப் போய் இந்த காஞ்சனை ரசிக்கிறாளே! காணாததை கண்டது போல் கண்கள் மின்ன வாய் பிளந்து பார்க்கிறாளே!

மொத்தத்தில் காஞ்சனை தன்னை விட மகேந்திரனோடு இலகுவாய் சிரித்துப் பேசுவதைப் பார்க்க செல்வத்திற்கு வயிறு எரிந்தது. இந்தக் காஞ்சனை, இவ்வளவு வருடங்கள் ஆயிற்று. இப்படி ஒரு நாள் கூட அந்த மகேந்திரனிடம் பேசுவது போல் அவனிடம் சிரித்துப் பேசியதில்லை. மகேந்திரனிடம் பேசும் போது அந்த பேச்சில் அவள் காட்டும் 'நெருக்கம்' அவனுடன் பேசும் போது இருந்தது இல்லையே!

ஒரு கையினால் மறுகையை குத்திக் கிழிப்பது போல் ஓங்கிக் குத்திக் கொண்டான்.

விடக்கூடாது! இப்படியே விட்டால் முதலுக்கே மோசம் என்பது போல் பெரும் ஆபத்து வந்து விடும்.

இவ்வளவு நாள் காஞ்சனையே தன் எதிர்கால துணைவி என எண்ணி மகிழ்ந்த விஷயங்கள் எல்லாம் கூட பின் கனவாகிப் போய்விடும்.

யோசித்த செல்வத்திற்கு முக்கியமாய் இன்னொரு விஷயமும் உறுத்தியது.



அது.... அவன் படிக்காத விஷயம்! என்ன இருந்தாலும் அவன் விவசாயம் பார்க்கும் கிராமத்தான். வயக்காட்டில் இறங்கி மாட்டை ஓட்டி உழும் விவசாயி. படிக்காத தற்குறி!

ஆனால் மகேந்திரன்?

பல நில புலன்களுக்கு சொந்தம் கொண்டாடும் பணக்காரன் மட்டுமல்ல. பட்டணம் போய் காஞ்சனையைப் போலவே படித்தவன். அந்த ஒரு படிப்பு விஷயம் மட்டும் போதுமே!

காஞ்சனையை தீவிரமாய் யோசிக்க வைத்து விடுமே! போயும் போயும் படிக்காத ஒருவனையா கட்டுவது என்று யோசித்து விட்டால்? தனக்கு மகேந்திரன் தான் பொருத்தமாக இருப்பான் என நினைத்து விட்டால்...?

நினைத்து விட்டால்... என்ன... இப்போது அது தானே நடந்து கொண்டிருக்கிறது.

இதை உடனடியாக தடுத்தாக வேண்டும்.

என்ன வழி?

அன்று இரவு முழுவதும் மண்டையைப் பிய்த்து ஒரு வழியை கண்டு பிடித்தான் செல்வம்.

அதன் படி காஞ்சனையை மறுபடியும் மேற்படிப்பு படிக்க பட்டணத்திற்கு ஹாஸ்டலுக்கு அனுப்பி விடுவது. ஒரு இரண்டு வருடம் அப்படி படித்து இருவரையும் சந்திக்க விடாமல் பிரித்தால் போதும். பின் கவலைப்பட வேண்டாம். எவ்வித காதலும் கத்திரிக்காயும் அவர்களுக்குள் முளைக்க வாய்ப்பில்லை தடுத்துவிடலாம்.

தனது யோசனையை தானே மெச்சியபடி முதலில் குருநாதரிடம் போய் சொல்லிப் பார்த்தான். ''மேற்

படிப்பா? காஞ்சனைக்கா... அப்படி அவளுக்கு எதுவும் ஆசை இல்லையே?'' என விட்டேற்றியாய் சொல்லி விட்டுச் சென்று விட்டார்.

சரி காஞ்சனையிடமே சென்று கேட்டு விடுவோம் என அவளிடம் போய் பேசிப் பார்த்தான். அவளும், ''அதெல்லாம் தேவையில்லை மாமா. கரஸ்பாண்டன்ஸ் கோர்ஸில் சேர்ந்து படிக்க இருக்கிறேன். மேலும் தந்தையையும், இந்த நம் பூம்பொழில் கிராமத்தையும் இனி துளியும் பிரிந்து போக எனக்கு இஷ்டமில்லை...'' என்றாள் உறுதியான குரலில்.

பூம்பொழில் கிராமத்தையா அல்லது மகேந்திரனைப் பிரிந்திருக்க இஷ்டமில்லையா? என கேள்வி துளைக்க... நொந்து தலையை தொங்கப் போட்டவனாய் அடுத்த முயற்சியைத் தேடினான் செல்வம்.

அதுவும் அவனது நண்பன் ஒருவன் மூலம் யோசனையாக அவனுக்கு கிடைத்தது. ''அட... அந்தக் காஞ்சனை... உன் முறைப் பெண். இருவரும். ஒரே வீட்டில் இருக்கிறீர்கள்? நீ எதற்கு யாரோ கொத்திக் கொண்டு போய் விடுவான் என பயப்படுகிறாய். பேசாமல் நான் சொன்னபடி செய். சமயம் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் அவளுடன் பேசு. எதையாவது சொல்லி சிரிக்கச் சிரிக்க பேசு. அப்படி நீ சிரித்துப் பேசினாலே... பெண்களுக்கு அதுவும் குறிப்பாக உன் காஞ்சனைக்கு பிடித்து விடும்...!''

நண்பன் ஒரே போடாக போட்ட யோசனையை பிடித்துக் கொண்டு காஞ்சனையிடம் அடுத்த முயற்சியை செய்தான் செல்வம்.



அவள் போகும்போது வரும் போது முன் நின்று போய் சிரித்தான். ''என்ன செய்கிறாய் காஞ்சனை? சாப்பிட்டாயா? தூங்கப் போகிறாயா? டிரான்சிஸ்டரில் பாட்டுக் கேட்கிறாயா.... காஞ்சனை?'' என்றெல்லாம் பெரிய கேள்விகளாய் எண்ணி அவளிடம் கேட்டுப் பார்த்தான்.

அதற்கு பதிலாய் வாயைக் கூடத் திறக்காமல் முகம் வெட்டி அசைப்பிலேயே பதில் சொல்லி காஞ்சனை அகன்று விட செல்வத்திற்கு சப்பென்று போயிற்று.

சரி... தனது வேலைப் பற்றி பேசுவோம் என அந்த மாதம் விளைச்சல், நெல் கொள்முதல், பயிர் சாகுபடி என்றெல்லாம் கதையளக்க, ''ஐயோ! அறுக்காதீர்கள் மாமா...!'' என காதைப் பொத்தியபடி காஞ்சனை ஓடி விட்டாள்....

சரி தான்...! நான் எது பேசினாலும் கசக்கிறது. அந்த மகேந்திரன் பேசினால் இனிக்கிறது! என முடிவுக்கு வந்து விட்டான் செல்வம்.

நாளுக்கு நாள் ஏற்பட்ட குமைச்சலில் அவனுக்கு எரிச்சலே அதிகமானது. அதிலும் கம்ப்யூட்டர் கோர்ஸ் படிக்கும் சாக்கில் காஞ்சனையும் மகேந்திரனும் தினமும் பார்ப்பது பேசுவது இப்போது அதிகரித்து விட்டது என எண்ணினான்.

இரண்டு மூன்று நாள் இப்படியே யோசித்தவனுக்கு அடாலடியாய் அந்த யோசனையும் தோன்றிற்று. எதை எதையோ யோசிப்பதற்கு பதிலாக பேசாமல் சண்டைக்காரன் காலிலே விழுந்து விட்டால்...? மகேந்திரனிடமே நேருக்கு நேர் பேசி என் காஞ்சனையை விட்டு விடு என கேட்டுவிட்டால்...?

யோசித்தவன் தாமதிக்காமல் அன்றே காஞ்சனை இல்லாத சமயமாய்ப் பார்த்து மகேந்திரனை தேடி போய் விட்டான்.

தன் பண்ணை வீட்டிற்கு திடீரென நுழைந்த செல்வத்தைக் கண்டு திகைத்த மகேந்திரன்,

''என்ன காஞ்சனை வரவில்லையா?'' என்று தான் கேட்டான் முதல் கேள்வியாய்.

'அட.... நாம் போய் நிற்கிறோம். நம்மிடமே காஞ்சனை வரவில்லையா...? எனக் கேட்கிறான். என்ன ஒரு துணிச்சல் இவனுக்கு...!' என கோபமாகவே நினைத்தவன் அதை அடக்கிக் கொண்டு,

''காஞ்சனை பற்றி பேசத்தான் வந்திருக்கிறேன்...'' என்றான் நேரிடையாய் விஷயத்திற்கு வந்தவனாய்.

''என்ன காஞ்சனைக்கு என்ன?'' என்றான் மகேந்திரன் முன்னால் வந்து பதட்டமான குரலில்.

'அட... காஞ்சனை என்றதும் பதற்றத்தைப் பாரேன்...' என அதைக் கவனித்து உள்ளுக்குள்ளே நொந்தவன் மடமடவென கொட்டினான்.

'காஞ்சனா அவனது முறைப்பெண்.... எனவும் இரு வரும் கல்யாணம் செய்து கொள்ளப் போவதாகவும்... இது... சிறு வயதிலேயே பெரியவர்களாய்ப் பார்த்து போட்டு வைத்த முடிச்சு...' என அது இதுவென விவரித்து விளக்கினான்.''

அவன் சொல்ல.... சொல்வது எல்லாவற்றையும் பொறுமையாய் கேட்ட மகேந்திரன் ''எல்லாம் சரி செல்



வம். இதுவெல்லாம் எனக்கும் தெரிந்ததுதான். இதை ஏன் என்னிடம் சொல்கிறீர்கள்?'' என வெளிப்படையாகக் கேட்டதும் செல்வம் தயங்கத்தான் செய்தான்.

மகேந்திரனுக்கு, முன்பு காஞ்சனை வேறு செல்வம் தன்னிடம் காட்டிய எரிச்சல் போது சொன்னது ஞாபகத்திற்கு வர... எல்லாம் புரிந்து போயிற்று. மென்மையான அவனது வசீகரச் சிரிப்புடன் முன்னால் நெருக்கமாய் வந்து செல்வம் பக்கம் நின்று அவன் முகத்தை உற்றுப் பார்த்தான்.

''என்ன செல்வம்.... உங்களுக்குச் சொந்தமான காஞ்சனையை நான் தட்டிக் கொண்டு போய் விடுவேன்... என பயப்படுகிறீர்கள். அப்படித்தானே?''

செல்வம் ஓரிரு கணம் பார்வையை தாழ்த்தியபடி தயக்கமாய் தலையசைத்தான்.

மறுகணம் கடகடவென சிரிக்க ஆரம்பித்தான் மகேந்திரன்.

பின் நிறுத்தி. ''பயப்படாதீர்கள் செல்வம். அப்படியெல்லாம் ஒன்றும் நடக்காது...'' என்றான் குரலில் ஒரு வித உறுதியைக் காட்டியபடி.

சொல்லியபடி அத்தோடு நிறுத்தாமல், ''ஆனால் செல்வம் இதில் இன்னொன்றும் இருக்கிறது. இதே கேள்வியை என்னிடம் கேட்பது போல் நீங்கள் காஞ்சனையிடமும் கேட்டுக் கொள்ள வேண்டும். அவளையும் தெளிவு படுத்திக் கொள்ள வேண்டும்.... சரியா?'' என்றதும் ரொம்பவும் குழம்பித்தான் போனான் செல்வம்.

# 21

மகேந்திரன் செல்வத்தை அன்று ஏதோ சொல்லி திருப்பி அனுப்பி விட்டாலும் உள்ளுக்குள் குடைச்சலாய்த்தான் உணர்ந்தான்.

உண்மையில் சமீப காலமாய் அவன் மனதை காஞ்சனை வெகுவாய் கவர்ந்திருந்தாள். அவளுடன் பேசுவது சரிக்கு சரியாய் மல்லாடுவது எல்லாம் ஒரு வித்தியாசமான உணர்வை, சந்தோஷத் துள்ளலை ஏற்படுத்துவதை அடிக்கடி உணர்ந்திருந்தான்.

அந்த உணர்வு காதலா... காதல் தானா? எனவும் அவனுள் சந்தேகக் குமிழ் எழுந்து கேள்விகளையும் எழுப்பியிருக்கிறது. ஒரு நாள் அப்படி காஞ்சனையை பார்க்காவிட்டால் ஒரு ஏமாற்றம் ஒரு விதமான சலிப்பு உண்டாவதை உணர்ந்து திடுக்கிடவும் செய்தான்.

ஆரம்பத்தில் காஞ்சனையுடன் கிண்டல் கேலி செய்து பேசுவது ஒரு விளையாட்டாகவே அவன் ஆரம்பித்ததும் ஒரு கட்டத்தில் அதுவே அவசியமான தவிர்க்க முடியாத ஒன்றாயும் ஆகி வருவதை உணர்ந்தான்.

அந்த அவனது எண்ணம் காஞ்சனையும் அவனைப் போலவே தினம் அவனைப் பார்க்க.... அவனுடன் பேச என எதாவது சாக்கு வைத்துக் கொண்டு ஓடி வருவதைக் கண்டதும் வலுப்பெற்றது.



அதிலும் காஞ்சனை தன்னைக் காணாமல் திராட்சைத் தோட்டத்திற்கே தேடி வந்திருப்பதைக் கண்டதும் மகேந்திரனின் மனது விஷயத்தை உறுதியே செய்து விட்டது.

மகேந்திரன் இது வரை எத்தனையோ அழகிகளைப் பார்த்திருக்கிறான். பேசியிருக்கிறான். அவர்கள் யாரையும் பார்த்து ஏற்படாத உணர்வு காஞ்சனையைப் பார்த்ததும் ஏற்பட்டு விட்டதே!

காஞ்சனையின் உற்சாகமான பேச்சு, மனதை மயக்கும் சிரிப்பு கள்ளங் கபடமில்லாமல் அவள் காட்டும் ஸ்னேகிதமும்தான் காரணமாக இருக்கக்கூடும் என்றும் அவன் மனம் சொல்லியது.

அப்படியானால் தன்னையறியாமல் காஞ்சனையை நாம் விரும்புகிறோமா? என தனக்குத்தானே அவன் கேட்டுக்கொண்டு குழப்பமாய் இருந்த வேளையில் தான் செல்வம் வேறு வந்து இப்படிச் சொல்லி விட்டான்!

செல்வத்திடம் ஏதேதோ சமாளித்து சமாதானம் சொல்லி அனுப்பி விட்டாலும் மகேந்திரனுக்கு உள்ளூர நெருடல் ஒன்று எழும்பியது. செல்வம் சொல்வதும் ஒருவகையில் நியாயம் தானே?

நாம் நேற்று முளைத்து புதியதாய் காஞ்சனையிடம் அறிமுகமான நபர்தானே? காலங்காலமாய் பிறந்தது முதல் காஞ்சனையின் பக்கத்திலே இருந்து வளர்ந்திருப்பவன் செல்வம். அவனுக்கு நேற்று அறிமுகமானவன் காஞ்சனையை தட்டிக் கொண்டு போய் விடக்கூடாதே என்ற பயம் எழுவது நியாயம்தானே.

அவனது பயத்தில் அந்த நியாயம் இருப்பது கூட உண்மைதானே?

கோபமாய் வந்து எதிர்த்து நின்றால் பதிலுக்கு பதில் பேசி விடலாம். ஆனால் கோழை போல் காலில் விழுந்து கெஞ்சுபவனை என்ன செய்வது? அவனிடம் எப்படி வீரத்தைக் காட்டுவது?

அதனால் தான் அப்படி பட்டும் படாமல் பேசியது சரிதான் என மகேந்திரன் தன்னுள் உறுதிபட நினைத்துக் கொள்ளவும் செய்தான்.

ஆனால் மறுநாள் காஞ்சனையை தற்செயலாய் சந்தித்த போது செல்வம் பற்றிய அவளது மனநிலையை அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வமும் அவனுள் பீறிட்டது.

அதனாலே பேச்சினூடே மகேந்திரன், ''காஞ்சனை, உன்னிடம் இன்னொரு விஷயம் ஒன்று கேட்க நினைத்தேன்...'' என்றான் பீடிகையாய்.

காஞ்சனை கண்களை மேலும் அகல விரித்து பழிப்பு காட்டியவள், ''அது... என்ன.... இன்னொரு... விஷயம்...? அப்படியானால் இது வரை நீங்கள் பேசியது ஒரு வேறு ஒரு விஷயமா?'' என்றாள் இடக்கமான குரலில்.

''ஐயோ.... விளையாடாதே... காஞ்சனை.... இது முக்கியமான சீரியஸான விஷயம்....''

அவன் முகத்தை பயம் காட்டுவது போல் வைத்துச் சொல்ல... ''அப்படியா...? சொல்லுங்கள் வாத்தியார் ஐயா...!'' என்றாள் சலாம் அடிக்காத குறையாய் போலி பவ்யம் காட்டி குனிந்து முகத்தை திருப்பி காதுகளை அவன் பக்கம் தெளிவாய் வைத்துக் கொண்டு,

''இப்போது தான் வார்த்தைகள் நன்றாக... காற்றில் எதுவும் கரைந்து போகாமல் அப்படியே என் காதுகளில்



விழும்... ம்ம்... சொல்லுங்கள்...!'' என்றாள் பரபரப்பவளாய்.

''விளையாட்டு போதும் காஞ்சனை... நான் சொல்ல வந்தது செல்வம் அத்தான்... செல்வம் அத்தான்.... பற்றி..!''

அதற்கும் காஞ்சனை கேலியை விடாமல், ''ஓ... செல்வம்... அத்தான்...? மிஸ்டர் செல்வம் அத்தான்...?'' என்றவள் தொடர்ந்து ''மிஸ்டர் மகேந்திரன் சார், ஒரு விஷயம் புரியவில்லை.... அவர் எனக்கு மட்டும் தான் அத்தானா அல்லது உங்களுக்கும் அவர் அத்தானா?'' எனவும் மகேந்திரனுக்கு முதல் முறையாய் அவள் வேண்டுமென்றே விளையாடுகிறாளோ... என்ற சந்தேகம் வந்தது.

அதை உறுதிப்படுத்த அவனும் தொடர்ந்து, ''நேற்று செல்வம் என்னை சந்தித்து என்ன பேசினார் தெரியுமா?'' என்றான்.

''என்ன பேசினார்...? ஏதேனும் தேவலோக ரகசியம்... என்னிடம் சொல்லக்கூடாத ரகசியம்... எதுவாக இருந்தாலும்... விட்டு விடுங்கள்... மகேந்திரன் சார்... என்னிடம் சொல்ல வேண்டும் என அவசியமில்லை...'' என்றாள் மறுபடியும் செவ்விதழ்களை விரித்து மின்னடிக்கும் பற்களின் நகைப்பை உதிரவிட்டவாறு.

மகேந்திரனும் விடாது, ''நீ கரெக்டாக சொல்லிவிட்டாய் காஞ்சனை... உண்மையிலேயே அது தேவர்களால் கூட கண்டுபிடிக்க முடியாத மனித ரகசியம் தான்...'' என்றான்.

''அட... அது வேறா...?'' என முகம் வெட்டி காஞ்சனை விழிகளை உருட்டியவள், ''அப்படியானால் அந்த

ரகசியத்தை உங்கள் திருவாயைத் திறந்து சீக்கிரமாக சொல்லிவிடுங்கள்.... மகேந்திரன் சார்... இல்லாவிடில் தேவலோக சாபப்படி உங்கள் தலையே சுக்கு நூறாய் வெடித்து விடக் கூடிய அபாயமும் இருக்கிறது...'' என்றாள் நடுங்குவது போன்ற பயத்துடன்.

அவள் வேண்டுமென்றே விளையாடுகிறாள். 'விளையாட்டாய் பேசியே சீரியஸாக பதில் சொல்வதில் இருந்து தப்பித்துக் கொள்ளலாம்...' என்றும் நினைத்து விட்டாள் என்பதை தெளிவாகப் புரிந்து கொண்டான் மகேந்திரன்.

இனி இவளிடம் செல்வம் பேசியது பற்றி கேட்டு பலனில்லை. விளையாட்டான பதிலே கிடைக்கும். உண்மையை அறிய முடியாது... என நினைத்தவன், ''ஒன்றும் பெரிய விஷயம், ரகசியம் இல்லை காஞ்சனை. சும்மாவா உன்னை பயங்காட்டி விளையாடவே அப்படியெல்லாம் சொன்னேன்...'' எனக் கூறி அவளைப் போலவே கடகடவென சிரித்துக் காட்டி பேச்சை முடித்தும் விட்டான்...

## 22

புதுமாதம் பிறந்து இரண்டு நாள் கழிந்திருந்தது.

அன்று தான் அப்படியொரு பயங்கரமான விஷயம் காஞ்சனையின் வாழ்க்கையில் நடந்தது. அதிர்ச்சி என்றால் அப்படி ஒரு அதிர்ச்சி காஞ்சனமாலாவிற்கு!



அவள் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.

கனவிலும் இப்படியெல்லாம் தனக்கு நிகழ்ந்து விடும் நிகழக்கூடும் என கற்பனை பண்ணிப் பார்த்ததில்லை!

ஒரே வாரத்தில் அவள் தலையே சுழன்று விடும் அளவுக்கு எல்லாம் முடிந்து விட்டது.

விதி... விதி... என்கிறார்களே... அது இதுதானோ? என்று அப்போதுதான் முதன் முறையாய் நினைத்தாள்.

ஒரே நாளில் உலகம் தலைகீழாகி அவள் வாழ்க்கையையே புரட்டிப் போட்டு விட்டதே...!

தந்தை கைலாசநாதர் அன்று மதியம் உணவு முடித்து விட்டு வழக்கமான தனது ஈஸி சேரில் ஓய்வெடுக்க அமர... அவளும் வழக்கம் போல் அவரது கால் மாட்டுப் பக்கம் அமர்ந்து பழைய கல்லூரி விஷயங்களை சுவாரஸ்யமாய் சொல்ல ஆரம்பிக்க... கேட்டுக் கொண்டிருந்த கைலாசநாதர் முகம் மாறினார்.

''அம்மா.. கண்மணி. இந்தப் பக்கம் இடப்புறமாய் நெஞ்சுப் பக்கம் ஒரு வித வலியாய் இதயத்தை நெருடுகிறதம்மா...'' என்று திகிலாய் சொல்ல அப்படியே அரண்டு போனாள் காஞ்சனா.

அப்போது செல்வம் வேறு வீட்டில் இல்லை. வேலைக்காரி தங்கத்துடன் பரபரவென வெளிவந்து பார்க்க... தற்செயலாய் ரோட்டில் தன் காரை ஓட்டிக் கொண்டு மகேந்திரன் வருவது தெரிய... பதறிக் கை காட்டி விஷயத்தைச் சொன்னாள்.

மகேந்திரனும் மறுகணமே அதே பதட்டத்துடன் உள்ளே நுழைந்து இருவரும் கைலாசநாதரை கைத்தாங்

கலாய் பிடித்துக் கொண்டு பக்கத்து டவுண் ஆஸ்பத்திரிக்கு ஓடினர்.

ஸ்டிரோக், மாரடைப்பு என ஒற்றை வார்த்தைகள் சொல்லப்பட்டது. ஒரு நாள் முழுவதும் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சையளித்தும் எவ்வித பயனும் இல்லாது போயிற்று. கைலாசநாதர் பெரும் அதிர்ச்சி கொடுப்பவராய் காஞ்சனையை தனியே தவிக்க விட்டுவிட்டு உலகத்தை விட்டே போய் விட்டார்.

அப்படியே இடிந்து நிலை குலைந்து உட்கார்ந்து விட்டாள் காஞ்சனை. இப்படி ஒன்று தனக்கு நிகழும் என அவள் கொஞ்சமும் நினைக்காத, நினைத்துப் பார்க்காத ஒன்று.

ஆனால் நிகழ்ந்து விட்டதே...!

ஒரு வாரம் யார் தேற்றியும் தாளமுடியாமல் பிழியப் பிழிய அழுதாள். சொந்த பந்தங்கள் என சொல்லிக் கொள்ள அவளுக்கு கொஞ்சம்தான். அந்த சொந்தங்களும் வந்து அவளுக்கு ஆறுதல் சொல்லி தேற்றி விட்டுச் செல்ல கடைசியில் மிஞ்சியது கனகம் அத்தையும் செல்வம் மாமாவும் தான்.

அத்தை அவள் கவலையைப் போக்கும் வண்ணமாய் இனி காஞ்சனைக்கு ஒரு வாழ்க்கை ஏற்படுத்திக் கொடுக்கும் வரை அவளுக்கு உற்ற துணையாய் கூடவே இருக்கப் போவதாய் சொல்லிவிட்டாள்.

அது ஒரு ஆறுதலாய் பெரும் உதவியாகவே காஞ்சனைக்குத் தோன்றிற்று. வருந்தி தலைகவிழ்ந்து அழுவதற்காகவாவது ஆறுதலாய் ஒரு தோள் வேண்டுமே! தாயின் பரிவுடன் அவளைத் தேற்ற ஒரு ஜீவன் வேண்டுமே!



அவளால் எதையும் மறக்க முடியவில்லை! வீட்டின் எந்தப் புறம் திரும்பினாலும் தந்தையின் நினைவுகளே எழும்பி சுழன்று கொண்டிருந்தது. எப்படி முடியும்? அவ்வளவு எளிதில் மறக்கக் கூடியவரா அவளது இனிய தந்தை?

இந்த விஷயத்தில் அத்தை கனகத்தையும் சும்மா சொல்லக்கூடாது. தனது தம்பியின் சிறு வயது விஷயங்களை எல்லாம் நினைவுபடுத்தி அவளுக்கு விவரிக்க ஆரம்பிப்பாள். மணிக்கணக்காய் அந்தப் பேச்சு நீளும். தந்தையின் பிரிவு வருத்தத்தில் இருக்கும் காஞ்சனைக்கும் நாள் முழுக்க தந்தையைப் பற்றியே அப்படி பேசிக் கொண்டிருப்பது மிகுந்த ஆறுதலைத் தரும்.

இப்படியே இரண்டு மாதங்கள் சோகத்துடன் எவ்வித சலனமில்லாமல் ஓடியது. செல்வமும் கைலாசநாதரின் பிரிவால் இடிந்துதான் போயிருந்தான்.

அவனுக்கு நினைவு தெரிந்த நாளில் இருந்து கைலாசநாதர் தான் அன்பும் அரவணைப்புமாய் வழி நடத்திச் சென்றவர். படிப்பு வராத அவனை தன் கூடவே வைத்து விவசாய வேலைகளை கற்றுக் கொடுத்து அவனுக்கென்று ஒரு வாழ்க்கைப் பாதையை அமைத்துக் கொடுத்தவர். என்ன.... அருமை மகளை தனக்கு கட்டிக் கொடுத்து தன்னை மாப்பிள்ளையாக்குவதற்குள் இப்படி மறைந்து போய் விட்டாரே... என்ற கவலை செல்வத்திற்கு!

அதே போல்... மகேந்திரனுக்கும், கைலாசநாதர் மறைவு பெரும் அதிர்ச்சியைக் கொடுத்தது. காஞ்சனைக்கு இந்த வயதில் இப்படி ஒரு பெரும் சோதனை

ஏற்பட்டு விட்டதே என மிகவும் வருந்தத்தான் செய் தான். இழக்கக் கூடாத பிரிவு தாங்க முடியாத துயரம் இதற்கு காஞ்சனையை எப்படி ஆறுதல் சொல்லி தேற்றுவது என்றே அவனுக்கு கவலையாய்ப் போயிற்று.

அதனாலே தினம் அவள் வீட்டுக்கு வந்து காஞ்சனை யின் மனதை மாற்ற கவலையைப் போக்க வேறு ஏதாவது விஷயங்களைத் தேடித் தேடி பேசினான். ஆனாலும் காஞ்சனையால் அவனது பேச்சில் ஒன்ற முடியவில்லை. எவ்வித சுவாரஸ்யமும் இல்லாதது போல்தான் சுவரில் தலையைச் சாய்த்தவாறு கேட்டுக் கொண்டிருப்பாள். இப்படியே கவலையாகவே மேலும் இரண்டு மாதங்கள் ஓடியது.

ஒரு நாள் காஞ்சனையே கண்ணாடி முன் நின்றவள் தினம் தினம் அழுது வடியும் தன் பரிதாப கோலத்தைக் கண்டு திகைத்தாள்.

இழக்கக்கூடாத விஷயம்தான் தந்தையின் பிரிவு! ஆனால் அந்தத் தந்தையே அவள் இப்படி தலைவிரி கோலமாய் தினம் அழுது புலம்பிக் கொண்டிருந்தால் தாங்கிக் கொள்வாரா?

யோசித்தவள் சோகமான மன ஓட்டங்களை முதலில் நிறுத்த முடிவு செய்தாள். தினம் பிரிவிற்காக வருந்துவதை விட்டு விட்டு தந்தை தனக்கென விட்டுச் சென்றிருக்கும் கடமைகளை செவ்வென நிறைவேற்றி அவர் பெயரைக் காப்பாற்றுவது தான் அவருக்கு செய்யும் முக்கியமான விஷயமாய் நன்றியாய் இருக்கும் என நினைத்தாள்.

அதை அன்று வந்த மகேந்திரனிடம் சொன்ன போது அவனும் உற்சாகம் கொண்டான். ''இன்றாவது உணர்ந்து



கொண்டாயே... சந்தோஷம்...!'' என்றபடி அவள் மனநிலைக்கு ஏற்ப அன்று அவளை தன் காரில் பக்கத்து ஊரில் நடந்த கோயில் திருவிழாவிற்கு அழைத்துச் சென்றான். கூடவே மறவாமல் மல்லிகைக் கொடி, நீலாவதி, செண்பகக்கண்ணு என அவள் தோழிகள் பட்டாளத்தையும் ஏற்றிக் கொண்டான்.

ஏறக்குறைய ஆறு மணி நேரத்தை கோயில் திரு விழாவில் கழித்தார்கள். ஆடல், பாடல், தெருக்கூத்து, வில்லுப்பாட்டு, நாடகம் என அவ்வளவையும் கண்டு ரசித்தார்கள். நீண்ட நாட்களுக்குப் பின் காஞ்சனையும் அன்று தான் இறுக்கம் தளர்ந்து மனம் விட்டுச் சிரித்தாள்.

அவளது கலகலச் சிரிப்பை மீண்டும் பார்த்த மகேந் திரனுக்கும் ரொம்பவும் நிம்மதியாயிற்று.

ஆனால் தற்செயலாய் அதே கோயில் திருவிழா விற்கு வந்து இந்த காட்சியைக் கண்ட செல்வம், காஞ்சனை என்றுமில்லாததாய் மகேந்திரனுடன் சிரிக்கச் சிரிக்க பேசி கூத்தடித்துக் கொண்டிருப்பதாய் நினைத் தான். அவன் முகம் கடுகடுப்புக்கு மாற ஆரம்பித்தது.

## 23

நிஜமாகவே செல்வத்திற்கும் கைலாசநாதர் மறைவுக் குப் பின் ஒரே குழப்பம் தான். முன்பாவது அவரிடம் பேச்சால் சரிகட்டி அவர் மூலமாக காஞ்சனையை கட்டிக் கொள்ளலாம் என்ற நினைப்பு இருந்தது. இப்போது அதுவும் முடியாது.

அதில் அவன் வயிற்றில் புளியைக் கரைப்பது போல் காஞ்சனை மகேந்திரனுடன் பேசுவது பழகுவதில் தான் மிகுந்த ஆர்வம் காட்டி வருகிறாள். இதை இப்படியே விட்டால் ஆபத்து. அத்தை கனகம் மூலமாக ஏதாவது செய்தாக வேண்டும் என எண்ணினான் செல்வம்.

அதனாலே காஞ்சனை இல்லாத சமயமாய் பார்த்து கனகத்திடம் பேச்சை ஆரம்பித்து விஷயத்தைச் சொன்னான். கனகத்திற்கு மகேந்திரன் விஷயம் ஒன்றும் தெரியாததால், ''அட... காஞ்சனை உனக்குத்தான். [illegible] எதற்கு கவலைப்படுகிறாய்... உங்களுக்கு முடிச்சு போட்டு வைக்க வேண்டியது என்னுடைய பொறுப்பு!'' என்று சொன்னது பெரும் நிம்மதியைத் தந்தது.

ஆனாலும் செல்வத்திற்கு முழுவதும் நம்பிக்கை வரவில்லை. அத்தை சம்மதிப்பது பெரிய விஷயமில்லை. காஞ்சனை சம்மதிக்க வேண்டுமே? அது தானே முக்கியம்!

ஆயினும் அவன் மனம் பரபரத்தது. தீவிரமாக யோசித்தான்.

காஞ்சனை லேசில் சம்மதிக்க மாட்டாள் தான். சம்மதிக்கும்படி வைக்க வேண்டும். அப்படி ஒரு சூழ்நிலையை உண்டாக்க வேண்டும்.

இரண்டு மூன்று நாள் யோசித்து ஒரு திட்டத்தையும் தீட்டினான் அவன்.

அதன்படி அத்தை கனகத்துடன் அவளது சொந்த ஊரான திருச்சிக்கு காஞ்சனையுடன் சென்று விடுவது. அங்கு அத்தையின் உறவினர் ஒருவர் மளிகைக் கடை வைத்து நடத்துகிறாராம். அவருக்கு வாரிசு இல்லாததால்



யாரிடமாவது கடையை ஒப்படைத்து விட்டு ஓய்வெடுக்க விரும்புகிறாராம். அது அத்தை மூலமாக வாங்கி கடை முதலாளியாய் செல்வம் உட்கார்ந்து கொண்டு காஞ்சனையையும் மனைவியாக்கிக் கொண்டு... நினைத்துப் பார்த்த செல்வத்திற்கு கற்பனை நன்றாக இருக்கிறது... அப்படியே செய்து விடுவோம் என்ற முடிவுக்கு வந்தான்.

கனகத்திடம் இந்த யோசனையைச் சொன்ன போது சொந்த ஊரான திருச்சியில் தனது கடைசி காலத்தை கழிக்க வேண்டும் என்ற அவளது ஆசைக்காக பெரிதும் தலையாட்டினாள் அவள்.

செல்வம் அத்தோடு விடாது இந்த பூம்பொழில் கிராமத்தில் உள்ள கைலாசநாதரின் வீடும் சொற்ப விவசாய நிலத்தையும் நல்ல விலைக்கு விற்று விட்டு ஊரை விட்டே போய் விடலாம் என்பதும் அவனது [illegible]ளான்.

அவனுக்கு முக்கியமாக மகேந்திரன் இருக்கும் பூம்பொழில் கிராமத்தை விட்டு கிளம்பிவிட வேண்டும். அப்படிச் சென்றுவிட்டால்... காஞ்சனையால் மகேந்திரனை சந்திக்க முடியாது. இருவரையும் வெகு எளிதாக பிரித்து விடலாம். பின் காஞ்சனை மகேந்திரனை மறந்து விடுவாள் பின் அவளை மணந்து கொள்வது சுலபமாகி விடும் என நினைத்தான் செல்வம்.

அதன்படி வேகமாய் காரியங்களில் இறங்கவும் செய்தான் அவன். முதலில் காஞ்சனையை நம்ப வைப்பதற்கு பொய்யான சில ஏற்பாடுகளை உருவாக்கவும் செய்தான். அதாவது கைலாசநாதரின் நிலத்தில் விவ

சாயம் செய்வது பாதிக்கப்பட்டு விட்டது போலாக கூ ஆட்களை வைத்து காஞ்சனையின் முன் பேச வைத்தா

காஞ்சனைக்கு இந்த விஷயம் பெரும் திகைப்பா தான் இருந்தது. தந்தை காலத்திலிருந்து நல் வருமானத்தை ஈட்டி வரும் நிலத்தில் திடீரென என் ஆகும்? என திகைத்து அவர்களிடமே விளக்கம் கே டாள்.

'அது... நம் நிலத்தில் தவறான உர மருந் பொருட்களை போட்டு விவசாயம் செய்ததால் நில கெட்டுப் போய்விட்டது...' என்ற விளக்கமும் சொ னதும் அவள் நம்ப வேண்டியதாயிற்று.

'எல்லாம் செல்வம் சொல்லிக் கொடுத்த பொய்..' அவள் புரிந்து கொள்ள இரண்டு நாள் தான் ஆயிற் மகேந்திரன் வந்தவனிடம் அவள் விஷயத்தைச் சொல் ''யார் சொன்னது? நல்ல விளைநிலம் அல்லவா இ வேண்டுமானால் நானே குத்தகைக்கு எடுத்துக் கொ கிறேன். மாதா மாதம் உரிய பணத்தை கொடுத்து வி கிறேன். சரியா?'' எனக்கூறி அன்றே ஒப்பந்த போடத் தயாராகி விட்டான்.

செல்வத்திற்கு இதைக் கேட்டு குமைச்சல் அதிகம கைகளைப் பிசைந்தான். ஆனாலும் அத்தை தூண்டிவிட்டு ஊரை விட்டு திருச்சிக்கு சென்று வி தனது திட்டத்தை செயலாற்ற முனைந்தான்.

என்ன இருந்தாலும் காஞ்சனைக்கு சொந்தம் எ சொல்லிக் கொள்ள இருப்பது அவனும் அத்தை தானே? அவர்கள் இருவரும் விலகிவிட்டால், வில சென்றுவிட்டால் அவள் என்ன செய்வாள்? பய



விடுவாள் தானே? அந்த பயத்தில் சம்மதித்து விடுவாள் தானே? தனது நினைப்பை அடுத்த ஆயுதமாக்கி அத்தை மூலமாக காஞ்சனையிடம் பிரயோகித்தான் அவன்.

அவன் ஆட்டுவித்தது போல் அப்படியே ஆடினாள் கனகம்.

''இதோ பார் காஞ்சனை, எனக்கு ஒரு நல்ல யோசனை தோன்றுகிறது. பேசாமல் நாம் மூவரும் என் சொந்த இடமான திருச்சிக்கு சென்று விடுவோம். அங்கு இருக் கும் எனது உறவினர் மளிகைக் கடையை செல்வத்திற்கு வாங்கிக் கொடுத்து விடுகிறேன். அதனால் வருமானத் திற்கும் பஞ்சம் வராது. நாம் நல்லபடியாக வாழலாம். உனக்கும் ஒரு சந்தோஷமான வாழ்க்கை கிடைக்கும் என்ன சொல்கிறாய்?''

அத்தை கேட்டதற்கு தாமதியாமல், ''நான் வர வில்லை. எனக்கு இதில் சம்மதம் இல்லை..'' என்றாள் காஞ்சனை தெளிவாக.

''என்ன சொல்கிறாய் காஞ்சனை?''

''ஆமாம் அத்தை. தந்தை வாழ்ந்த இந்த வீட்டை இந்தப் பூம்பொழில் கிராமத்தை ஒரு போதும் என்னால் பிரிய முடியாது...'' அழுத்தமான குரலில் காஞ்சனை, சொல்லி முடித்தாள்.

ஆனால் கனகம் விடவில்லை.

''நானும் செல்வமும் திருச்சி போவதாக முடிவெடுத்து விட்டோம் காஞ்சனை....''

''தாராளமாகப் போங்கள்...'' கைகளை விரித்தாள் அவள்.

"நீ மட்டும் தனியே இந்த கிராமத்தில் இருந்து என்ன செய்யப் போகிறாய்?"

"அப்பாவின் விவசாய நிலத்தை குத்தகைக்கு விட்டு அதில் கிடைக்கும் வருவாயில் பிழைத்துக் கொள்கிறேன். அப்பாவின் நினைவுகளோடு இந்த வீட்டிலே தங்கி விடுகிறேன்..."

இந்த காஞ்சனையின் பதில் கனகத்தை மட்டுமல்ல அவர்களது பேச்சை பக்கத்து ரூமிலிருந்து ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்த செல்வத்தையும் அதிர வைத்தது.

கனகம் திரும்பவும், "சரி காஞ்சனை... நீ சொல்வது போல் இருந்து கொள்ளலாம். ஆனால் உன் எதிர்காலம்...? செல்வத்தை நீ கட்டிக் கொள்ள வேண்டுமே? அதற்கு என்ன செய்யப் போகிறாய்..?" என்றாள் விடாது.

சற்றும் தயங்காமல், "செல்வத்தை நான் கட்டிக் கொள்ளப் போவதாக யார் சொன்னது? அப்படி ஒரு நினைப்பு எனக்கு இல்லையே... அத்தை...!" என்றாள் காஞ்சனை தீர்மானமாக.

வாயடைத்துப் போனார்கள் இருவரும்.

## 24

அத்தையின் பேச்சுக்கு தகுந்த பதிலடி கொடுத்து விட்டாலும், அத்தை சொன்ன விஷயமே அதிர்ச்சியாய் இருப்பதாய் நினைத்த காஞ்சனைக்கு, விஷயத்தை



மகேந்திரனிடம் சொன்னபோது அது அணுகுண்டாகி அவள் தலையிலே வெடித்தது.

அக்கறையாய் கேட்டுவிட்டு மிகச் சாதாரணமாக, "அத்தை சொல்வது கூட சரிதானே? செல்வம் அத்தானை நீ கட்டிக் கொள்வது பொருத்தமாய்த்தான் இருக்கும்!" என்றான்.

அவளுக்கு திகைப்பானது. தலை சுழன்றது. தூக்கி வாரிப் போட்டது. என்ன வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளலாம். எல்லாவற்றையும் தாங்கிப் பிடித்துக் கொண்டே அடுத்த கேள்வியைக் கேட்டாள். "என்ன சொல்கிறீர்கள் மகேந்திரன். நீங்களா இப்படிப் பேசுவது?" என்றாள் ஆற்றாமையாய்.

அவள் நிலையை மகேந்திரன் புரிந்து கொண்டானோ அல்லது புரியாதது போல் காட்டிக்கொண்டானோ அவன் திரும்பவும் சிரித்து அதே பதிலைச் சொன்னான். "என்ன காஞ்சனை... இதில் புதியதாய் ஒன்றும் இல்லையே...? உன் தந்தை இருக்கும் போதே உனக்கும் செல்வத்திற்கும் மணமுடிப்பது பற்றி பேசி வைத்திருந்ததாய் நீயே சொல்லியிருக்கிறாயே?"

காஞ்சனை முகம் நொடித்தவள், "அது முன்பு சொன்னது... வெறும் பேச்சளவில் சொல்லிக் கொண்டது... அவ்வளவே..." என்றாள்.

"அவ்வளவே... என்றால்? அதில் அப்போது உனக்கு சம்மதம் இருந்தது தானே?" என்றான் மகேந்திரனும் விடாமல்.

"அப்போது இருந்தது. ஆனால்..." என இழுத்து அவனையே உறுத்துப் பார்த்த காஞ்சனை மறுகணமே

பட்டென, ''இப்போது சம்மதம் இல்லை...'' என்றாள் தெளிவான குரலில்.

மகேந்திரனுக்கு புருவம் எகிறியது.

''என்ன சம்மதம் இல்லையா?''

உதடுகளை அழுத்திப் பிடித்துக் கொண்டு வேகமாய் தலையாட்டினாள் அவள்.

அவன் நேருக்கு நேர் அவள் முன் வந்து நின்று கொண்டான்.

''சம்மதம் இல்லை... என்றால்... என்ன... அர்த்தம்... சொல் காஞ்சனை...!''

''பிடிக்கவில்லை... என்று அர்த்தம்...!'' அவள் தலையாட்டி கிளிப்பிள்ளை போல் சொல்ல அவனது பார்வை கூர்மையானது.

''நான் அதை கேட்கவில்லை காஞ்சனை. அதற்கு அடுத்த வார்த்தை என்ன...? அடுத்தாற் போல் என்ன செய்யப் போகிறாய் என்று கேட்கிறேன்?''

இப்போது மறுபடியும் அவளுள் சந்தேகம் ஓடியது.

இவன் எல்லாவற்றையும் தெரிந்து கொண்டு கேட்கிறானா? அல்லது நிஜமாகவே தெரியாமல் தெரிந்து கொள்ள கேட்கிறானா?

ஒரு கணம் விழிகளை விரித்து அவனையே உற்றுப் பார்த்தாள் காஞ்சனை.

ஆறடி உயரத்தில் பெரும் பராக்கிரம பாண்டியன் போல் திண்தோள்களும் புஜங்களுமாய் நெஞ்சு நிமிர மல்யுத்த வீரன் போல் நிற்கும் இவன் இங்கே? ஒடி



சலான நோஞ்சன் போல் குட்டை தட்டையாய் இருக்கும் செல்வம் எங்கே?

சரி... உடல் வளர்ச்சியை விடுவோம்... மனது? எவ்வளவு பணமிருந்தும் எளிமையாய் பழகும் குணம்.... கள்ளங்கபடமில்லாமல் சிரிக்க சிரிக்க பேசும் அழகு... புரிந்து கட்டிக் கொண்டு உதவும் பாங்கு... இதுவெல்லாம் செல்வத்திற்கு வருமா? எதற்கெடுத்தாலும் மிரட்டும் அந்த கடுகடுப்பான முகமும் சிடு சிடுத்தனமும் செல்வத்தை விட்டு விலகுவது கிடையாதே!

ஒப்பிட்டுப் பார்த்து மகேந்திரன் பக்கத்தில் ஒப்புக்காக கூட செல்வத்தை நிற்க வைக்க முடியாது என்பதை உணர்ந்தாள் காஞ்சனை.

அவள் அப்படி விழிகளை விரித்து தன்னையே உறுத்துப் பார்ப்பதை அதிசயமாய்ப் பார்த்தவாறே அவள் தோள்களை உலுக்கினான் மகேந்திரன்.

''காஞ்சனை... உன்னைத்தான் கேட்கிறேன்... என்ன கனவுலகத்துக்கு போய் விட்டாயா?'' என்றதும் நினைவுக்கு வந்தாள்.

''ஒன்றுமில்லை...?'' என்றாள்.

''ஒன்றுமில்லையா...?''

''எனது பதில் ஒன்றுமில்லை தான்..!'' என்றாள் மறுபடியும் அழுத்தமாக.

''புரியவில்லை....'' என்றான் மகேந்திரன் நெற்றியைச் சுருக்கியபடி. தொடர்ந்து அவள் மௌனமாக இருக்கவே, ''செல்வத்தைப் பிடிக்கவில்லை... என்றால் அடுத்து என்ன செய்யப் போகிறாய் என்று கேட்கிறேன் காஞ்சனை...?'' என்றான் விளக்கம் கேட்பது போல்.

அவளுக்கு ஆத்திரமாக வந்தது.

இப்படிக் கேட்டால் என்ன பதில் சொல்வது? இவனுக்குப் புரியவில்லை...? அல்லது தொடர்ந்து புரியாதது மாதிரியே நடித்துக் கொண்டிருக்கிறானா? நிமிர்ந்து இம்முறை அவனை நன்றாக முறைத்தாள்.

''பதில் சொல் காஞ்னை...'' விடாமல் அக்கறையாய் கேட்டான்.

''ஒன்றுமில்லை.... தான்... எனது பதில்..!'' என்றாள் எரிச்சலாய்.

அவன் மகேந்திரன் விடாது அவள் எண்ண ஓட்டத்தை படிக்க முயல்வது போல் பார்த்தது மேலும் எரிச்சலூட்டியது. தெரியாதது மாதிரி நடித்துக் கொண்டு இதில் ஆராய்ச்சி வேறா?

கோபமாய் நிமிர்ந்து, ''என்னையே கேள்வி கேட்கிறீர்களே... நீங்கள் பதில் சொல்கிறீர்களா?'' என்றாள்.

''கேளு...'' என்றான் மகேந்திரன் சிறிதும் தயங்காமல்.

''நீங்கள் என் விஷயத்தில் என்ன தான் நினைக்கிறீர்கள்?'' என்றாள்.

''என்ன நினைக்கிறேன்... என்று..'' அவன் இழுக்க அவள் முகம் மேலும் சிவந்தது.

''இந்த இழுப்பு பேச்சு எல்லாம் என்னிடம் வேண்டாம். நேரிடையாக சொல்லுங்கள். என்னைப் பற்றி... என் வாழ்க்கையைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? என்ன முடிவு எடுக்கப் போகிறீர்கள்?'' கேட்டபடி ஓரளவு பூடகமாய் விஷயத்தை சொல்லிவிட்ட திருப்தியுடன் அவன் முகத்தையே பார்த்தாள் காஞ்சனை.



''உன் வாழ்க்கை பற்றி நீ தான் முடிவெடுக்க வேண்டும்...!'' என்றான் மகேந்திரன் சட்டென.

''ஏன்... அதில் உங்களுக்கு அக்கறை இல்லையா?'' என்றாள் அவளும் வெடுக்கென.

''அக்கறை இருக்கிறது. அதனால் தானே கேட்கிறேன்...''

''எனக்கு செல்வம் அத்தானை பிடிக்கவில்லை. அவருடன் ஆன ஒரு வாழ்க்கையை நினைத்துப் பார்க்க முடியாது. ஆனால், வேறு...'' - அவள் ஒரு நிமிடம் நிறுத்தி விட்டு அவனது முகத்தை தயக்கமாய்ப் பார்த்தாள்.

''சொல்லு...! செல்வத்தைப் பிடிக்கவில்லை. சரி... வேறு யாரையும் பிடித்திருக்கிறதா?''

''ம்ம்...'' பதிலை விட தலையைத்தான் வேகமாய் ஆட்டினாள்.

''ம்ம்... சொல்லு... யாரது..?''

அவன் மறுபடியும் விரட்டும் தொனியில் கேட்க ஒரு வேளை எல்லாவற்றையும் தெரிந்து கொண்டு அவள் வாயினால் வரவழைப்பதற்காக விளையாடுகிறானா? என்று கூட நினைத்து அவனையே உற்றுப் பார்த்தாள்.

''இன்னும் உங்களுக்கு புரியவில்லை...?''

''புரியவில்லை...''

''நீங்கள் தான்...!'' அவள் விழிகள் தாழ குரல் நடுங்கச் சொன்னாள்.

''அது நடக்காத காரியம்...!'' கொஞ்சமும் தாமதியாமல் சட்டென அவனிடமிருந்து வந்த அந்த பதில் அவளை மேலும் நிலைகுலைய வைத்தது.

ஒரு கணம் காஞ்சனைக்கு பேச்சே வரவில்லை!

முகத்திலடித்தாற் போல்... சட்டென... வார்த்தைகளை வீசுவது... அவள் ரசித்த அவளை வசீகரித்த அந்த மகேந்திரன் தானா?

அதுவும் எப்படி...? நடக்காத காரியமாமே?

ஒரு வேளை வலியப் போய் மனதில் உள்ளதை கொட்டியதும் பிகு செய்கிறானா? நினைப்புடன் விழி விரிய அவள் மறுபடி கண்களைச் சுழற்றினாள்.

அவனது சீரியஸான முகம் அவன் சொல்வது விளையாட்டல்ல... ஆணித்தரமான பேச்சு என பறை சாற்ற... அப்படியே மனம் நோகத்தான் செய்தாள் காஞ்சனை.

அவன் மனம் மகிழ்வான் என்று பார்த்தால் நெருப்பாய் அல்லவா தக தகக்கிறான்... முதல் முறையாய் அவனுக்காக, அவனையே நினைத்துக் கொண்டிருக்கும் தனது நிலைக்காக அவளுக்கு பயமே ஏற்பட்டது.

இருந்தாலும் அதற்காக அவன் சொன்னதற்கெல்லாம் தலையாட்டிக் கொண்டிருக்க முடியாது அவளுக்கு விடை தெரிந்தாக வேண்டும்!

''ஏன் முடியாது?'' என்றாள் குரலை கூட்டிக் கொண்டு தைரியம் வந்தவளாய்.

அவன் மகேந்திரன் மறுபடியும் நெற்றியைச் சுருக்கினான்.

அவளிடம் என்ன பேச என்று அவன் யோசிப்பது கூட அவளுக்குப் புரிந்தது.

கவனமாய் வார்த்தைகளை விட வேண்டும். ஜாக்கிரதையாய் பேச வேண்டும் என்பது போல் அவனது முக பாவனை மாறி உதடுகள் அசைந்தது.



''புரிந்து கொள் காஞ்சனை. நான்... எனது மனது கொள்கைகள் எல்லாம் வேறு. கல்யாணம் என்ற ஒன்று பற்றியெல்லாம் சிந்திக்கும் நிலையில் நான் இல்லை... அது நிதர்சனமான உண்மை...!''

ஆஹா...! என்ன ஒரு பதில்! உதட்டைச் சுழித்து பழிப்பு காட்டியவள், ''அப்படி நீங்கள் கல்யாணம் பற்றி சிந்திக்கும் வரை. அது எத்தனை மாதமோ எத்தனை வருடமோ... நான் காத்திருக்கேன்... காத்திருக்க தயார் தான். போதுமா?'' என முடித்தாள்.

அவன் இம்முறை உதடுகளை இறுக்கினான்.

''ம்ம்... சரி... சரி..'' என தலையாட்டியவன்,

''சுற்றி வளைத்துச் சொல்லலாம் என்று பார்த்தால் உனக்குப் புரியவில்லை. அதனால் நேரிடையாக சொல்லி விடுகிறேன். உண்மையான காரணம் என்ன தெரியுமா?''

''என்ன?''

''எனக்கு என்னுடைய பணத்திற்கு உன்னைப் போல் ஆயிரம் அழகிகள் மணப்பெண்களாய் கிடைப்பார்கள். ஆனால் செல்வம்... செல்வத்திற்கு? உன்னை விட்டால் யாரும் இல்லை. அதனால் அவர் மனதை நோகடிக்க நான் விரும்பவில்லை!'' அதே இறுக்கத்தோடு முடித்தான் மகேந்திரன்.

## 25

மகேந்திரனின் பேச்சு அன்று மிகவும் எரிச்சலூட்ட அதற்கு மேல் அங்கு நிற்கப் பிடிக்காமல் விறுவிறுவென வந்து விட்டாள்.

அதன் பின் ஒரு வாரம் அவள் அவனைப் பார்க்கவில்லை. எப்பொழுதும் இறுக்கமான முகமும், யார் முகத்தையும் நிமிர்ந்து பாராமல் விலகிச் செல்வதும் அவளது சுபாவமாயிற்று.

அத்தை அவளை இரணடு மூன்று நாள் அவளை கவனித்து விட்டு அக்கறையோடு, ''என்ன விஷயம் காஞ்சனை?'' என்று கேட்க, ''ஒன்றுமில்லை...'' என்று மட்டும் சொன்னாள். செல்வமும் தன் பங்கிற்கு, ''என்ன காஞ்சனை ஏன் ஒரு மாதிரியாய் இருக்கிறாய்?'' என்று கேட்டதும் விஷயத்தைப் போட்டு உடைத்தாள்.

''உங்களைக் கட்டிக் கொள்ள எனக்கு துளியும் விருப்பமில்லை. என்னை வற்புறுத்தாதீர்கள்...!'' என்றாள்.

செல்வம் இதைக் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. இது நாள் வரை காஞ்சனை அவளிடம் எதிராய் பேசியதில்லை. முகத்திலடித்தாற் போல் எடுத்தெறிந்து சொல்லி விட்டாளே! ஒரு கணம் அப்படியே முகம் கூம்பிப் போயிற்று அவனுக்கு.

காஞ்சனைக்கும் யார் யார் மீதோ ஆத்திரம்... கோபம்... எரிச்சல்... அந்த எரிச்சல் முழுவதையும் அவள் செல்வம் மீது அப்படியே காட்டிவிட்டாள்.

அவளது பதிலால் செல்வம் நொந்து நூலாகியவன் சமாளித்துக் கொண்டு அவள் எண்ணம் முழுவதையும் தெரிந்து கொள்ள விரும்புபவன் போல் அடுத்த கேள்வியை வீசினான்.

''சரி காஞ்சனை என்னைப் பிடிக்கவில்லை. யாரை உனக்கு பிடித்திருக்கிறது... யாரை நீ கட்டிக் கொள்ளப் போகிறாய்?''



அவன் கேட்டதும் மின்னல் வெட்டியது போல் மறுபடியும் பதில் வந்தது... காஞ்சனையிடமிருந்து ''மிஸ்டர் மகேந்திரன்...! மிஸ்டர் மகேந்திரனைத்தான் கட்டிக் கொள்ள விரும்புகிறேன்...'' அழுத்தந் திருத்தமாய் உச்சரித்துச் சொன்னாள்.

செல்வம் மறுபடி முகம் கன்றியவன் அதையும் சமாளித்தவாறு புருவம் உயர்த்தியபடி, ''காஞ்சனை ஒரு வேளை அந்த மகேந்திரன் உன்னைக் கட்டிக் கொள்ள மாட்டேன் என்று மறுத்து விட்டால்... என்ன செய்யப் போகிறாய்?'' என்றான்.

காஞ்சனை இம்முறை திடுக்கிட்டாள்.

இவன் எதற்கு இப்படி கேட்கிறான்? இவன் கேட்பதைப் பார்த்தால் மகேந்திரன் அன்று நம்மிடம் அப்படிப் பேசி மறுத்ததிற்கு கூட இவன் காரணமாக இருக்குமோ? இவன் மகேந்திரனிடம் போய் ஏதாவது சொல்லி வைத்திருப்பானோ...?

சந்தேகம் தலைதூக்க உற்றுப் பார்த்து அவன் முகத்தை ஆராய முற்பட்ட போது செல்வம் என்ன நினைத்தானோ... விருட்டென முகத்தைத் திருப்பிக் கொண்டான். ''நான் கேட்டதற்கு பதில் சொல்... காஞ்சனை... மகேந்திரன் மறுத்தால்...?'' என இழுத்தான்.

''மறுக்க மாட்டார். அப்படி மறுத்தால் அவர் சம்மதிக்கும் வரை காத்திருப்பேன்..!''

''எவ்வளவு நாள் ஆனாலுமா?''

மறுபடியும் செல்வம் வியப்பாய் அதையே நோண்டி நோண்டி கேட்டது அவளுக்கு எரிச்சலையே கிளப்பியது. அதனாலே, ''குடுகுடு கிழவியானாலும்

அவருக்காக... அவருக்காக மட்டும் காத்திருப்பேன். போதுமா?'' என்றாள்.

மறுபடியும் முகத்தை வெட்டி கோபத்துடன் அகன்று விட்டான் செல்வம்.

காஞ்சனை தலையைப் பிடித்துக் கொண்டு உட் கார்ந்து விட்டாள்.

அவளுக்கு நிஜமாகவே தலை வலியை உண்டு பண்ணும் இன்னொரு விஷயம் தோழி நீலாவதி மூலம் அவள் காதுகளில் விழுந்தது.

''மகேந்திரன் ஊரில் இல்லையாம். வெளியூர் சென்று ஒரு வாரமாகி விட்டதாம். பண்ணைப் பொறுப்புகள் முழுவதையும் மேனேஜர் ஒருவரிடம் ஒப்படைத்து விட்டு உடைமைகளை பெரிய சூட்கேஸ் ஒன்றில் திணித்துக் கொண்டு கிளம்பி விட்டானாம். எங்கு செல்லப் போகி றேன் என்பது பற்றி கூறவில்லையாம். ஆனால் தான் திரும்ப பல மாதங்கள் ஆகும்.... என்று மட்டும் பணியாளர் களிடம் சொல்லி அதுவரை பண்ணையை பொறுப்பாக நிர்வகிக்கும்படி உத்தரவிட்டு விட்டுச் சென்றிருக் கிறானாம்...

அட... இது என்ன கூத்து...? எங்கு போனான்? எதற்காக இப்படிச் சொல்லாமல் கொள்ளாமல் ஓடி ஒளிந்து கொண்டான்?

நிஜமாகவே அதிர்ந்து போய் திடுக்கிடத்தான் செய் தாள்.

நம்பமுடியாமல் நேரிடையாகவே அவனது பண்ணை வீட்டிற்குச் சென்று எல்லோரிடமும் பேசி விசாரித்தாள்.



மகேந்திரனைத் தெரிந்தவர்களிடம் எல்லாம் போய் கேட்டாள்.

எல்லோரும் அதே பதிலைத்தான் சொன்னார்கள்.

யாருக்கும் அவன் மகேந்திரன் போன இடம் தெரிய வில்லை.

எப்போதாவது போன் செய்து நிலைமைகளை கேட் டறிந்து கொள்வதாக அவன் சொன்னதையும் சொன் னார்கள்.

காஞ்சனைக்கு ஒரு விஷயம் தெளிவாகப் புரிந்தது.

அவன் மகேந்திரன் ஒரு திட்டத்துடன்தான் இப்படிச் சென்றிருக்க வேண்டும்.

அந்த திட்டமும் யோசித்த போது அவளுக்குப் புரிந்தது.

வேறு என்ன? அவளது கோரிக்கையை நிராகரித்த தோடு, இப்படி சொல்லாமல் கொள்ளாமல் ஓடி ஒளிந்து காணாமல் போய் விட்டால்... காஞ்சனைக்கு வேறு வழி யில்லாமல் போய் விடுமே?

அவளும் காத்திருந்து மனம் மாறி வேறு வழியில் லாமல் செல்வத்தைக் கட்டிக் கொள்ள சம்மதித்து விடு வாளே..?

இதுதானே மகேந்திரன் போட்டிருக்கும் திட்டம்? மனக்கணக்கு?

என்ன ஒரு மடத்தனம்! அவனைக் காணவில்லை என்றதும், வேறு வழியில்லை என்றதும் அவள் மனம் மாறி விடுவாளா? அப்படி மனம் மாறி உடன் செல்வத் திற்கு கழுத்தை நீட்ட சம்மதித்து விடுவாளா?

சே! இந்த மகேந்திரனுக்கு அறிவு, மூளை இதுவெல்லாம் எங்கே போயிற்று?

எவ்வளவு தரக்குறைவாய் அவளை நினைத்திருக்கிறான்... எடை போட்டிருக்கிறான்!

நொடிக்கொருதரம் மாற்றிக் கொள்ளும் மனதா அவளுக்கு... ஆரம்பம் முதலே அவனையே நினைத்து தானே உருகினாள்... உருகிக் கொண்டிருக்கிறாள்!

அவளது அன்பை அந்த நேசத்தை அவன் புரிந்து கொள்ளவே இல்லையே!

ஒரு கணம் மகேந்திரனை நினைத்து அவளுக்கு வெறுப்பாகவும் இருந்தது. அவன் சொல்லிவிட்டால் உடனே அவள் 'ஆமாம் சாமி!' போட்டுக் கொண்டு செல்வத்தைக் கட்டிக் கொண்டு விடுவாளா?

இந்த புத்தி கெட்டு யோசிக்கும் மகேந்திரனுக்கு சரியான பாடம் புகட்ட வேண்டும். அவனுக்கு உரைக்கிறபடி நம் நிலையை உணர்த்தியாக வேண்டும்!

எப்படி?

எல்லாவற்றுக்கும் மேலாக முதலில் ஓடி ஒளிந்து கிடக்கும் மகேந்திரனை கண்டு பிடித்தாக வேண்டும். அதற்கு என்ன செய்ய?

காஞ்சனை தீவிரமாய் யோசித்து அதற்கும் ஒரு வழி கண்டு பிடித்தாள்.

திரும்பவும் அவன் மகேந்திரன் பண்ணை வீட்டு பணியாள் ஒருவனிடம் கெஞ்சாத குறையாய் நையமாய் பேசி விஷயத்தையும் கறந்து விட்டாள்.



மகேந்திரனுக்கு சென்னையில் ஒரு சிறிய உரக் கொள்முதல் கம்பெனி இருப்பதாகவும் அவன் உறவினர் ஒருவர் அதை நிர்வகித்து வருவதாகவும் அங்கு தான் மகேந்திரன் சென்றிருப்பதாகவும் ரகசியம் வெளிப்பட்டது.

இதற்குள் மேலும் பத்து நாட்கள் ஓடியிருந்தது. ஆக மகேந்திரன் சென்னை போய் இருபத்தைந்து நாட்கள்... கிட்டத்தட்ட ஒரு மாதம்... அவளுக்கு மேலும் எரிச்சலை மூட்டும் வண்ணம் செல்வமும் சொல்லாமல் கொள்ளாமல் எங்கோ கிளம்பிப் போய்விட்டான்.

கனகம் அத்தை தான், ''பாவம் செல்வம்! அவன் முகமே சரியில்லை. இடிந்து குலைந்தவன் போல் நடமாடினான். பின் 'என்னைத் தேட வேண்டாம். விரைவில் திரும்பி வருகிறேன்' எனக் கூறிக்கொண்டு கிளம்பிப் போய் விட்டான்'' என புலம்பிக் கொண்டிருந்தாள்.

காஞ்சனைக்குப் புரிந்தது. அன்று முகத்திலடித்தாற் போல் உன்னை பிடிக்கவில்லை. மகேந்திரனைத்தான் கட்டிக் கொள்ளப் போகிறேன்... என்று சொன்னது அவனை நிலைகுலையச் செய்திருக்க வேண்டும். அதான் முகத்தில் விழிக்க விரும்பாது ஓடி விட்டான்.

சரி... அவன் போனதும் சரி... மகேந்திரனை தன் வழிக்கு கொண்டு வர ஏதாவது செய்தாக வேண்டுமே!

யோசித்து ஒரு வழியும் புலப்படாது கடைசியில் அவளே அந்த முடிவிற்கு வந்தாள்.

மகேந்திரனை தேடிக் கண்டு பிடித்து சத்தியாகிரகம், உண்ணாவிரதம் என எதாவது போராட்டம் நடத்தியாவது அவனை சம்மதிக்க வைக்க வேண்டும். அது

ஒன்று தான் இருக்கிற வழி...! எனவும் தீர்மானித்தாள் காஞ்சனை.

# 26

ஒருவழியாய் போராடி கிராடி அத்தை கனகத்திடம் சம்மதம் வாங்கி விட்டாள். சூட்கேஸைத் தூக்கிக் கொண்டு சென்னைக்கு கிளம்ப ஆரம்பித்து விட்டாள்.

உண்மையான காரணம் மகேந்திரனை தேடிக் கண்டு பிடிப்பது என்றாலும் அத்தையிடம், ''மனதுக்கு சரியில்லை கொஞ்ச நாள் சென்னையில் தங்கி தோழிகள் மூலம் ஏற்பாடு செய்திருக்கும் வேலையை பார்க்கப் போகிறேன்...'' என்று சொல்லியிருந்தாள்.

அத்தையும் தன் பங்கிற்கு தன் தூரத்து உறவினான மோகனசுந்தரம் விலாசத்தையும் கொடுத்தனுப்பினாள். மோகனசுந்தரம் சென்னையில் கிரானைட் தொழில் செய்யும் பெரிய கோடீஸ்வரனாம். அத்தை கனகத்தின் மேல் பெரும் மதிப்பு வைத்திருப்பவனாம். அவனை சந்தித்தால் அவனது கம்பெனியிலே அவளுக்கு நல்ல வேலை ஒன்று போட்டுக் கொடுத்து விடுவானாம். மகளிர் விடுதி ஏதாவது ஒன்றில் அவள் தங்கி இருக்கவும், அவனே ஏற்பாடு செய்து விடுவானாம்.

கேட்ட காஞ்சனை பலமாய் தலையை ஆட்டிக் கொண்டாள். அவள் உயிர்த் தோழிகளான மாலதி, ராதா இருக்கையில் இது எதற்கு? என்ற நினைப்புடன் அத்தை



கொடுத்த லெட்டரையும் முகவரியையும் வாங்கி பெட்டி ரமாய் வைத்து விட்டாள்.

ஆனால் கிளம்பி ட்ரெய்னில் சென்னையை நெருங்கும் போது பக்கத்து ஸ்டேஷன் ஒன்றில் இறங்கி போன் செய்த போது தான் அந்த விஷயம் தெரிந்தது.

தோழிகள் மாலதி, ராதா இருவருமே ஊரில் இல்லை. ராவல்ஸ் கம்பெனி ஒன்று மூலம் தங்கள் குடும்பத்துடன் வடநாட்டு டூர் ஒன்றுக்கு சென்றிருக்கிறார்கள் என்று. திரும்பி வர எப்படியும் இருபது நாட்களுக்கு மேல் ஆகும்... என்பது தெரிய வர அட... இது என்ன சோதனை? தலையில் கைவைத்தபடி உட்கார்ந்து விட்டாள் காஞ்சனை.

அவர்கள் ஊரிலிருந்து கிளம்புவதற்கு முன்பாவது தொடர்பு கொண்டிருக்க வேண்டும். எங்கே போய் விடுவார்கள் ஊரில் தானே இருப்பார்கள் என தைரியமாய் கிளம்பி விட்டாள். ஆனால் இப்போது இப்படி ஆயிற்றே! என்ன செய்வது?

திகைத்து யோசித்தவளுக்கு அத்தை கனகம் சொன்ன மோகனசுந்தரத்தின் ஞாபகம் தான் வந்தது. வேறுவழி இல்லை அத்தை சொன்ன நபரைத்தான் போய்ப் பார்க்க வேண்டும்.

பார்த்து அவர் சொல்லும் ஏதாவது ஒரு வேலையில் ஒட்டிக் கொண்டால் தான் சென்னையில் தங்க முடியும். அப்படித் தங்கி சென்னையில் ஓடி ஒளிந்து கிடக்கும் மகேந்திரனை கையுங்களவுமாய் கண்டு பிடிக்கவும் முடியும்!

அதற்குள் ட்ரெய்ன் சென்னை ஸ்டேஷனை அடைந்து விட்டது. பெட்டியைத் தூக்கிக் கொண்டு இறங்கினாள்.

ஸ்டேஷனில் ஒரே நெரிச்சல். பிதுங்குமளவுக்கு ஜனத்திரள்களாய் கூட்டம்.

அந்த கூட்டத்தில் தெரியும் ஆண்களில் எங்காவது மகேந்திரன் தென்படுகிறானா...? எனவும் ஆவலாய்ப் பார்த்தாள். பின்... அது எவ்வளவு முட்டாள்தனம்? இந்த லட்சக்கணக்கான கூட்டத்தில் மகேந்திரனை தேடுவது நடக்கிற காரியமா? என அதை ஒதுக்கி விட்டு மலைப்புடன் நடந்தாள்.

பெட்டியில் இருந்து அத்தை கொடுத்த மோகனசுந்தரத்தின் முகவரியையும் கடிதத்தையும் எடுத்துக் கொண்டாள்.

வேறுவழியில்லை. இப்போது அவளுக்கு அடைக்கலம் கொடுக்க இந்த மோகனசுந்தரத்தை விட்டால் வேறு ஆள் இல்லை. அதையும் பார்த்து விடுவோம் என கிளம்பி விட்டாள்.

ஆட்டோவில் ஏறி அரைமணி நேரப் பயணத்தில் மோகனசுந்தரத்தின் கிரானைட் அலுவலகத்தை அடைந்து விட்டாள். மொசைக் பளபளப்பில் பிரம்மாண்டமாய் இருந்தது அந்த அலுவலகம்.

அத்தை சொன்னது சரிதான். இந்த மோகனசுந்தரம் பெரிய கோடீஸ்வரனாகத்தான் இருக்க வேண்டும் என்ற நினைப்புடன் உள்ளே நுழைந்தாள்.

நுழைந்து ரிசப்ஷன் முகப்பில் தகவல் சொல்லி காத்திருந்தாள்.

ஐந்து நிமிட காத்திருப்பிற்குப் பின் பணியாள் அவளை அழைத்துச் சென்று மோகனசுந்தரத்தின் அறையில் நிறுத்தினான்.



ஏஸி குளிரில் விலையுயர்ந்த சோபாக்கள் இருக்கைகளுடன், அந்த அலங்கார வடிவமைப்பில் தெரிந்த அந்த அறையைக் கண்டு பிரமிக்கத்தான் செய்தாள்.

மோகனசுந்தரம் மேனேஜிங் டைரக்டர் என மின்னும் எழுத்துக்களில் போர்டு பளீரிட பின்னால் குஷன் இருக்கையில் அவன்!

மோகனசுந்தரம்!

வயதான நபரை எதிர்பார்த்த அவளுக்கு முப்பது வயது இளவயதுக்காரனாய் மோகனசுந்தரம் உட்கார்ந்திருப்பது திகைப்பையே உண்டு பண்ணியது.

அத்தை இவனைப் பற்றி எல்லாம் சொன்னவர்கள் இதைச் சொல்லவில்லையே. என நினைத்தாள்.

திகைப்பாய் நோக்கியவனின் கைகளில் அந்த லெட்டரைக் கொடுத்தாள்.

சலனமில்லாமல் அவனை ஆராய்ந்தாள். ஒட்டடைக் குச்சி போல் நெடு நெடு உயரத்துடன் இருந்தான் மோகனசுந்தரம். புல் கோட் சூட்டில் அந்த எக்ஸிகியூட்டிவ்களை அவனுக்கு தென்பட்டாலும் சிரிக்கும் போது தெரியும் வரிசையற்ற பற்கள் அமைதிக்குப் பதில் ஒரு வித விகாரத்தையே உண்டு பண்ண... ஒரு வித பயத்துடனே அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள் அவள்.

அவன் மோகனசுந்தரமோ அவள் நீட்டிய கடிதத்தை படபடவென படித்தவன் உற்சாகம் அடைந்தவனாய் இருக்கை விட்டு எழுந்து விட்டான்.

''கனகம் அத்தை?... ஓ... மை... ஸ்வீட் கனகம் ஆண்ட்டி.... அனுப்பினார்களா?'' என்றபடி ஒய்யார

குரலில் சொல்லி, "உன் பெயர் என்ன காஞ்சனையா? உனக்கு என் கம்பெனியில் வேலை வேண்டுமா?" என்றபடி உரிமையுடன் அவள் கையைப் பிடித்து குலுக்கவும் செய்தான்.

இதை சற்றும் எதிர்பாராத காஞ்சனை திகைக்கத்தான் செய்தாள். கையை சட்டென உதற முடியாமல் திரு திருவென விழித்தபடியே அவனைப் பார்த்தாள்.

"கனகம் அத்தை என் தூரத்து உறவு தான். அவர்களை எனக்கு மிகவும் பிடிக்கும். அவர்களுக்காக எந்த உதவி வேண்டுமானாலும் செய்வேன்..." என்றபடி கடகட வென பேசிக் கொண்டு போனான் மோகனசுந்தரம்.

அவன் பேசிக் கொண்டிருந்தாலும் அவனது கண்கள் கழுகு போல் தன் மேலே படர்ந்து ஊடுருவது கண்டு முதல் முறையாக திடுக்கிடத்தான் செய்தாள் காஞ்சனை.

# 27

மோகனசுந்தரம் உடனடியாக எல்லா ஏற்பாடு களையும் செய்து விட்டான். அவனது கிரானைட் கம் பெனியில் சூபர்வைஸிங் வேலை கொடுத்தவன் தங்கு வதற்கு அவன் பங்களா அவுட்ஹவுஸை காட்டினான்.

"இது எதற்கு? நான் ஏதாவது லேடீஸ் ஹாஸ்டலில் தங்கிக் கொள்வேன்..." என காஞ்சனை மறுத்துப் பார்த்தாள்.



"ம்ம்... என்ன சொல்கிறாய் நீ? சொந்தம் என்று ஆகிவிட்டது. இனியும் உன்னை விடுதியில் தங்கச் சொன்னால் ஊர் என்னை என்ன பேசும்? அதனால் நீ அவுட் ஹவுசில் தான் தங்க வேண்டும்... இது என்னுடைய கட்டளை..." என கைகளை வேகமாய் ஆட்டி அவன் பேசிய போது அவனையே வியப்பாய் உற்றுப் பார்த்தாள் காஞ்சனை.

மோகனசுந்தரம் அவளுக்கு தூரத்துச் சொந்தம்தான். அவன் நல்லவனா கெட்டவனா... என்று எப்படி நம்புவது? சில சமயங்களில் அவன் தன்னை ஊடுருவப் பார்க்கும் பார்வை கூட விஷமத்தனமாய் இருப்பதாய் கூட உணரத்தான் செய்தாள் காஞ்சனை.

ஆனால் அவளுக்கு வேறு வழியும் இல்லை. நம்பி வந்த தோழிகள் ஊரில் இல்லை... சென்னையில் தங்கி எப்படியும் மகேந்திரனை வேறு கண்டுபிடித்தாக வேண் டும். இல்லாவிட்டால் ஊருக்கு திரும்பிப் போக வேண் டியதுதான்.

அதை விட இந்த சென்னையில் ஒரு பத்து நாள் இருந்தால் கூட போதும்தான். எப்படியாவது அலைந்து திரிந்து விசாரித்து மகேந்திரனை கண்டுபிடித்து விடலாம் தான். அப்படி அவனை கண்டுபிடித்து விட்டால் போதும் வேலை எல்லாம் சுளுவாகி விடும்.

அவனை எப்படியாவது சம்மதிக்க வைத்து தரதர வென ஊருக்கு இழுத்துப் போய் கூட மணவறையில் உட்கார வைத்து விடலாம். தாலி கட்ட வைத்து விடலாம். ஆனால்... ஆனால்... அவனை கண்டுபிடித் தாக வேண்டும்.

அப்படி அவனை கண்டுபிடிக்க அவள் சென்னையில் இருந்தாக வேண்டும்... அதற்காகவாவது அவள் இந்த தூரத்து உறவான மோகனசுந்தரத்தின் அவுட் ஹவுசில் தங்கி அவனது அலுவலகத்தில் வேலை பார்த்தாக வேண்டும்.

அதனாலே வேறு வழி தெரியாமல் காஞ்சனை சம்மதம் சொல்லி விட்டாள். மோகனசுந்தரம் புளகாங்கிதம் அடைந்தவன் போல் குஷியாகி அவளுக்கு அவனது அலுவலகத்தை சுற்றிக் காண்பித்தான். அவன் பங்களாவிற்கு கூட்டிப் போய் வீட்டு உறுப்பினர்களை அறிமுகப்படுத்தி வைத்தான்.

மோகனசுந்தரத்திற்கு வயதான தாயும் உடன்பிறப்பாய் சகோதரி ஒருவரும்தான் உடன் இருந்தனர். சகோதரிக்கு கல்யாணமாகி மாப்பிள்ளை வெளி நாட்டில் வேலை பார்ப்பதால் தனது ஒரே மகனுடன் அவள் பிறந்தகத்திலேயே தங்கி விட்டாள்.

அவளும் மோகனசுந்தரத்தின் தாயாரும் அவளை அக்கறையாய் நலம் விசாரித்தனர். கனகம் அத்தை தங்களுக்கு ரொம்பவும் வேண்டப்பட்டவர் எனவும் அதற்காக என்ன உதவி வேண்டுமானாலும் செய்யத் தயாராய் இருப்பதாகவும் சொல்லினர்.

கூடவே மோகனசுந்தரம் தனக்கு கல்யாணம் வேண்டாம் எனச் சொல்லி சொல்லி காலம் தாழ்த்துவது தங்களுக்கு மிகவும் கவலையளிப்பதாய் சொல்லி வருத்தப் பட்டனர்.

உண்மையில் காஞ்சனையை ஆச்சரியப்படுத்திய விஷயமும் அது தான்! இவ்வளவு வசதி வாய்ப்பு



களுடன் வாழ்பவன் கல்யாணம் செய்து கொள்ளாமல் காலம் தாழ்த்துவது எதற்காக என நினைத்தாள்.

அதை இரண்டு மூன்று நாள் கழித்து பேச்சு வாக்கில் அவனிடமே கேட்ட போது காஞ்சனைக்கு சுருக்கென்றது. ஏன்டா கேட்டோம்... என்பது போல் ஆயிற்று.

''அது... அது... வேறு ஒன்றுமில்லை காஞ்சனை.... என் மனதுக்கு பிடித்த நான் விரும்பும் அழகில் எந்தப் பெண்ணையும் இதுவரை நான் சந்திக்காமல் தான் இருந்தேன். ஆனால்..'' என இழுத்தவன் . ''ஆனால் உன்னைப் பார்த்ததும் காஞ்சனை உண்மையிலே என் மனம் தடுமாறுகிறது. என் மனத்தில் இனம் புரியாத சலனம் ஒன்று உண்டாகிறது...'' என உளறிக் கொட்டிய போது திடுக்கிட்டே போனாள் அவள்.

அதற்குப் பின் பேச்சை மாற்றி வேறு விஷயங்களை பேசினாள். அவனது தனிப்பட்ட விருப்புகளை பற்றி கேட்பதை அடியோடு விட்டு விட்டாள். ஒரு வாரத்தில் மோகனசுந்தரத்தின் அலுவலகத்தில் சூபர்வைசராக பொறுப்பேற்று வேலைகள் முழுவதையும் கற்றுக் கொண்டாள்.

மாலை ஐந்து மணியுடன் வேலை முடிந்து விடும்.

உடன் ஆட்டோ பிடித்து கிளம்பி விடுவாள். ஒரு இரண்டு மணி நேரம் சென்னையில் வெவ்வேறு பகுதிகளுக்குச் சென்று மகேந்திரனை தேடிப் பார்த்தாள்.

ஆனால் அது பெரும் கூட்டத்தில் தொலைந்த சிறு ஊசியைத் தேடுவது போன்ற முட்டாள்தனம் எனவும் அவளுக்குத் தோன்றியது. என்ன செய்ய... இப்படித் தேடிக் கண்டுபிடிப்பது முடியாத காரியமே என திகைத்தாள்.

வேறு வழிகளைத் தேடியபோது மோகனசுந்தரம் தான் அவள் ஞாபகத்திற்கு வந்தான். அவனிடம் உதவி கேட்டால் என்ன.... இதே சென்னையில் பல ஆண்டு களாக குடி இருப்பவன்... அவனால் எளிதில் முடியும் தானே என நினைத்தாள்.

மறுநாளே தாமதிக்காமல் விஷயத்தை தயங்கித் தயங்கி சொல்லி விட்டாள். மோகனசுந்தரம் முன்பே மகேந்திரனை தேடி வந்ததைப் பற்றி அவள் சொல்லி யிருந்ததை கேட்டிருந்தாலும் அதில் ஆர்வம் காட்டா மலே இருந்தான்.

ஆனால் இப்போது காஞ்சனை மகேந்திரனை தேடிக் கண்டுபிடிக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தவே அவனுள் திகைப்பு ஓடியது. மேலும் அதை முழுமையாக அறிந்து கொள்ளும் விதமாக, ''மகேந்திரன் அவ்வளவு முக்கியமானவரா?'' என கேட்கவும் செய்தான்.

''ஆம்.... முக்கியமானவர்தான்! அவரை நான் விரும்புகிறேன். அவரைத்தான் கட்டிக் கொள்ள இருக் கிறேன்...!'' என படபடவென சொன்னாள் காஞ்சனை.

சுருக்கென கசப்பு கஷாயத்தை குடித்தது போல் மோகனசுந்தரத்தின் முகம் மாறி அஷ்ட கோணலானது. அதை காஞ்சனையும் சரியாகவே கவனிக்கச் செய் தாள்.

''ஏன்... உங்களால் முடியாதா?'' என காஞ்சனை மறுபடியும் வினவ, ''ஏன் முடியாது? ஒரே வாரத்தில் அந்த மகேந்திரனை தேடிப் பிடித்து உன் கண் முன்னே நிறுத்துகிறேன். போதுமா?'' என குரலை உயர்த்தி கேட்டான் மோகனசுந்தரம்.



காஞ்சனை அதை நம்புபவள் போல் தலையசைக்கச் செய்தாள். மோகனசுந்தரம் அப்படி அவளிடம் சொல் லியபடி ஒரு விஷமச் சிரிப்பு சிரித்ததை கொஞ்சமும் அவள் உணரவில்லை.

# 28

மோகனசுந்தரம் அன்று இரவு முழுவதும் தூக்கம் வராதவனாய் தனது ரூமில் நடை பயின்று கொண்டிருந் தான்.

காஞ்சனையைப் பார்த்தது.... அவளது பேரழகை கண்டு உடன் மயங்கியது. அதிலும் அவள் சொந்தம் தன் ஆதரவை நாடி வந்திருக்கிறாள்... என்பது தெரிந்த தும் மனதில் ஆசைகள் இறக்கை கட்டி ஓடியது... எல் லாம் அவன் ஞாபகத்தில் வந்து அவனை ஒரு கணம் சிலிர்ப்பாக்கியது.

ஆனால் இப்போது புதுக்கதையாய் மகேந்திரன் என்று யாரையோ சொல்கிறாளே...! அவனைத் தேடி வந்திருக் கிறாளாம்.... அவனைத் தான் கட்டிக் கொள்ளப் போக இருக்கிறாளாம்... ஏதோ சினிமாக் கதை போல் அல்லவா சொல்கிறாள்?

கைகளைக் குத்தியபடி தீவிரமாய் யோசிக்க ஆரம்பித் தான் மோனகசுந்தரம். அவனுக்கு ஒரு விஷயம் தெளி வாய் புரிந்தது. அவளது பூம்பொழில் கிராமத்தில் பழக்கமாகியவன்தான் அந்த மகேந்திரன். ஏதோ

காஞ்சனையிடம் பேசியிருக்கிறான். பழகியிருக்கிறான். அதை காதல் என்று நம்பி ஏமாந்து அவனைத் தேடி அவன் பின்னாலே ஓடி வந்திருக்கிறாள்...!

ஆக இந்த மகேந்திரன் விஷயம் ஒன்றும் பெரிய கஷ்டமில்லை. கொஞ்சம் கவனமாக டீல் செய்தால் போதும். எல்லாவற்றையும் சரிக்கட்டி விடலாம். காஞ்சனையையும் அந்த மகேந்திரன் பற்றி மறக்கடித்து விடலாம்.

காஞ்சனையும் காலப் பொழுதில் அந்த மகேந்திரனை மறந்துவிட்டு பெரும் பணமும் பகட்டுமாய் இருக்கும் நம்மை உற்று கவனிப்பாள். மனம் மாறி விடுவாள். பின் அவளை சுளுவாய் மனைவியாக்கி கொள்ளவும் முடியும்!

மனதில் வேகமாய் கணக்குகளை போட்டு முடிவெடுக்க ஆரம்பித்தான் மோகனசுந்தரம். மேலும் முதலில் காஞ்சனை நம்புவது போல் அவளுக்கு நம்பிக்கை வரும்படி தான் நடந்து கொள்ள வேண்டும் என்று திட்டமிட்டான்.

அதனாலே அவளிடம் மகேந்திரன் பற்றிய முழு விவரங்கள், விஷயங்களை கேட்டுக் கொண்டான். தனது தொழில் நண்பர்கள் மூலம் எப்படியும் கண்டுபிடித்து விடலாம் என உறுதியும் கூறினான்.

காஞ்சனை மேலும் நம்பும் வகையில் அவளை ஓரிரு சமயம் காரில் அழைத்துக் கொண்டு நகரின் முக்கிய பகுதிகளுக்குச் சென்று காட்டினான். கூட்ட நெரிசல்களில் மகேந்திரன் தென்படுகிறானா என தேடச் சொன்னான்.



காஞ்சனையும் அவன் சொல்வதையெல்லாம் நம்பி நிஜமாகவே அங்கும் இங்கும் அலைந்தாள். தேடிப்பார்த்தாள். ஆனால் மகேந்திரன் என்ன காணாமல் போன குழந்தையா... கூட்ட நெரிசலில் தேடிக் கண்டு பிடிப்பதற்கு.

எங்கு தேடியும் அவளால் கண்டுபிடிக்க முடியவில்லை! ஆனால் மனதுள் மட்டும் எப்படியும் மகேந்திரனை சீக்கிரம் கண்டுபிடித்து விட வேண்டும் என்ற தீவிரம் கூடிக் கொண்டிருந்தது.

மோகனசுந்தரம் அவள் தேடுவதை மட்டுப்படுத்த வேண்டுமென்றே அவளை குழப்பவும் செய்தான். ''காஞ்சனை நீ சொல்வதைப் பார்த்தால் அந்த மகேந்திரன் சூழ்நிலைக்கு பயந்து எங்காவது வெளிநாடு கூட சென்றிருக்கலாம்... அல்லது வேறு யாராவது ஒரு பெண்ணை கட்டிக் கொண்டு கண் காணா ஊர் ஒன்றில் செட்டிலாகி இருக்கலாம்...'' என்றான்.

''நிச்சயம் இருக்காது...'' என்றாள் காஞ்சனை.

''எதை வைத்து அப்படிச் சொல்கிறாய்?''

''எனக்கு மகேந்திரனைப் பற்றி நன்கு தெரியும். அவர் ஒன்றும் கோழை அல்ல. அதனால் அவர் நிச்சயம் அது போன்ற கோழைத்தனமான முடிவுகளை எடுக்க மாட்டார்...'' என்றாள் உறுதியான குரலில்.

இப்படியே மகேந்திரனைத் தேடுவதிலே ஒரு மாதம் சென்று விட்டது. காஞ்சனைக்கு முதல் முறையாய், இனி மகேந்திரனை கண்டுபிடிப்பது முடியாத காரியமா? என்ற பயமும் கலக்கமும் ஏற்பட்டது. மோகனசுந்தரத்

திற்கு இனி நிஜமாகவே அந்த மகேந்திரன் கிடைக்கப் போவதில்லை. காஞ்சனையை எளிதில் வளைத்து விடலாம் என்ற குஷியே உண்டானது.

அதனாலே அவன் வேறு ஒரு திட்டமும் தீட்டினான். அதன் படி காஞ்சனையை மகேந்திரனைத் தேடச் செல்ல அழைத்துச் செல்லும் சாக்கில் கூட்டிப் போய் ரெஸ்ட் டாரண்டிற்குள் நுழைவான்.

''இங்கு அமர்ந்து ஏதாவது டிபன் சாப்பிடுவோம். நகரின் பிரபல ஹோட்டல் இது. உன் மகேந்திரன் இங்கு கூட சாப்பிட வரலாம் தானே?'' என்பான்.

காஞ்சனையும் வேறு வழி தோன்றாதவளாய் தலை யாட்டுவாள்.

ஹோட்டல் இருக்கையில் மெல்லிய விளக்கொளி யில் அவளுக்கு எதிரே காதலன் போல் அமர்ந்து மோகன சுந்தரம் ஏதாவது கதையளக்க ஆரம்பித்து விடுவான். அவனது தொழிலில் அவன் செய்த வீர சாகஸங்களை பெரிய சாதனைகளாய் விவரிப்பான்.

அப்படிப் பேசியாவது அவள் காஞ்சனை தன்னை புரிந்து கொள்வாள். மனம் மாறுவாள் என்ற கற்பனை அவனுக்கு!

ஆனால் போகப் போக காஞ்சனையின் நடவடிக்கை களை கவனித்தவன் தனது நினைப்பு அவ்வளவு சுலபத்தில் ஈடேறாது.... என்று தோன்ற ஆரம்பித்தது. அதனாலே ஒரு வாரம் யோசித்து வேறு ஒரு விஷமமான முடிவு எடுக்கத் தயாரானான் அவன்.



# 29

அன்று வழக்கம் போல் வேலை முடிந்ததும் மகேந் திரனைத் தேட கூட்ட நெரிசலான சென்ட்ரல் பஸ் ஸ்டாண்டிற்கு சென்றாள். அங்கு காஞ்சனைக்கு ஆச் சரியம் ஒன்று நிகழ்ந்தது.

நெரிசல்களுக்கிடையே பெட்டியைத் தூக்கிக் கொண்டு மாணிக்கம் நடந்து வருவதை கவனித்தாள். மாணிக்கம் மகேந்திரனின் பண்ணை வீட்டு தோட்டக்காரர். அவர் இங்கே... என்றால் நிச்சயம் மகேந்திரன் அழைத்து தான் இங்கு வந்திருக்கக் கூடும்.

அப்படியானால்... அவருக்கு... நிச்சயம் மகேந்திரன் இருக்கும் இடம் தெரிந்திருக்கும்.

குஷியடைந்தவளாய் ஓடிச்சென்று மாணிக்கத்தின் முன்னால் போய் மூச்சு வாங்க நின்றாள். ''என்னைத் தெரிகிறதா? நான் தான் காஞ்சனை... பூம்பொழில் கிராம கைலாசநாதரின் மகள்...!'' என்றாள் பெருமிதத்தோடு.

மாணிக்கம் பெரிதாய் தலையாட்டியபடி, ''தெரியும் அம்மா. சொல்லுங்கள்... என்ன விஷயம்?'' என்றதும் படபடவென மகேந்திரன் பற்றி கேள்விகளாய் துளைத்தாள்.

முதலில் தயங்கிய மாணிக்கம் அவளது கெஞ்சலைப் பார்த்ததும் அவ்வளவு விஷயத்தையும் உளறிக் கொட்டி விட்டான்.

மகேந்திரனுக்கு சென்னையில் ஒரு சிறிய உரக் கொள்முதல் கம்பெனி இருப்பதாகவும் அவன் உறவினர் ஒருவர் அதை நிர்வகித்து வருவதாகவும் அங்கு தான் மகேந்திரன் சென்றிருப்பதாகவும் ரகசியம் வெளிப் பட்டது.

ஆஹா... விஷயம் இது தானா? மகேந்திரன் இங்கு வந்து தான் பூனை போல் பதுங்கி ஒளிந்திருக்கிறானா? என வியந்து தான் போனாள் காஞ்சனை.

ஆனாலும் அவள் அவசரப்படவில்லை. ஒரு கணம் நிதானமாய் யோசித்தாள். தான் இப்போதே இந்த மாணிக்கத்துடன் சென்று மகேந்திரன் முன்னால் போய் நின்று விடலாம்.

ஆனால்... ஆனால்... அந்த மகேந்திரன் என்ன செய் வான்? என்ன சொல்வான்?

அவள் நினைப்பது போல் நடந்து கொள்ள மாட் டானே! ஏதாவது தத்துவம் பேசுவான். 'வேண்டாம்... இங்கிருந்து போய்விடு காஞ்சனை' என அட்வைஸ் மழை பொழிவான்! ஆனால்.... நிச்சயம் அவளை உட னடியாக ஓடி வந்து ஏற்றுக் கொள்ள மாட்டானே!

அதனால் இந்த சூழலில் அவனை சென்று பார்ப்பது தேவையில்லாதது. வேறு ஏதாவது தான் பிளான் செய்ய வேண்டும் என்ற முடிவிற்கு வந்தாள் காஞ்சனை.

அப்படி யோசித்த போது பளீரென அந்த எண்ணம் தான் உதித்தது. மோகனசுந்தரம் கொடுத்திருந்த விசிட்டிங் கார்டு அவளது கைப்பையில் இருந்தது.

அதை எடுத்து மாணிக்கத்திடம் நீட்டினாள் அவள். "உங்கள் முதலாளி மகேந்திரனிடம் இதைக் கொடுத்து நான் இங்கு தான் தங்கி வேலை பார்ப்பதாய் மட்டும் சொல்லுங்கள்...!" என சொல்லி கார்டை கொடுத்தாள்.



மாணிக்கமும் தலையாட்டலுடன் கார்டை வாங்கிய வாறு அவளிடம் விடைபெற்று கிளம்பினான்.

மாணிக்கம் சென்று விட்டான். காஞ்சனை அவன் சென்ற திசையையே பார்த்துக் கொண்டிருந்தாள். ஒரு கணம் அவளுக்கு அவன் பின்னாலே தொடர்ந்து போய் தொம்மென அந்த மகேந்திரன் முன் குதித்து நிற்க வேண்டும் போலவும் இருந்தது.

ஆனால் எழுந்த ஆசையை அடக்கிக் கொண்டாள். அவள் அப்படி போய் நின்றால்... என்றாலும் உடனே மகேந்திரன் காணாததை கண்டது போல் தாவிக் குதித்து வந்து கட்டியணைக்கப் போவதில்லை. எதற்காக வந்தாய் காஞ்சனை? என சிடுசிடுக்கத்தான் செய்வான்.

அதனால் அவனை அப்படி தேடிச் சென்று பார்ப்பதை விட அவன் தன்னைத் தேடி வரவழைத்தால் நன்றாக இருக்கும் தானே?

மேலும் ஒரு விஷயத்தில் காஞ்சனை ரொம்பவும் தெளிவாகத்தான் இருந்தாள். எப்படி அவளுக்கு அவனைப் பார்க்காமல் ஒரு வித தவிப்பாய் இருக்கிறதோ.... அதே போல் மகேந்திரனுக்கும் அவளைப் பார்க்க வேண்டும் என்ற தவிப்பு துடிப்பு நிச்சயமாய் இருக்கும்.

அதுதான் காதல்! அந்தக் காதல் அப்படி அவளிடம் இருக்கும் போது அதே போல் அவனிடமும் இருக்கும் தானே? அதனால் நாமே வலியப் போவதை விட மகேந்திரனை அவளை நாடி வரச் செய்வதும் ஒரு நல்ல டெக்னிக்தானே?

மேலும் மகேந்திரன் தான் இருக்கும் இடம் தெரிந்தும் காஞ்சனை உடனே வராமல் இருக்க மாட்டாளே? சென்னைக்கு தனக்காக தன்னைத் தேடி வந்திருப்பவள் இடம் அறிந்ததும் எப்படி வராமல் இருக்க முடியும்?

என்ன காரணம்? ஒரு வேளை காஞ்சனைக்கு ஏதும் பிரச்சினையோ? என்றெல்லாம் நினைத்து குழம்புவான். தவிப்பாய் சிந்திக்கத்தான் செய்வான்!

மனதுள் இவ்வாறு கணக்குப் போட்டு குமிழ்களாய் மகேந்திரனை பார்க்க வேண்டும் என்று எழும்பிய ஆவலை அடக்கிக் கொண்டாள் காஞ்சனை.

உண்மையில் நடந்ததும் அவள் நினைப்பு படியே தான் இருந்தது. பணியாள் மாணிக்கம் சொன்ன காஞ்சனையைப் பார்த்த விஷயத்தைக் கேட்டு திகைத்துதான் போய் விட்டான் மகேந்திரன்.

அவள் தன்னைத் தேடி சென்னைக்கே வந்திருப்பாள் என்பது மகேந்திரன் கொஞ்சமும் எதிர்பாராதது. அதிலும் தன்னை எப்படியும் தேடிக் கண்டுபிடித்து விட வேண்டும் என்ற வைராக்கியத்தோடு வேலை ஒன்றிலும் சேர்ந்து விட்டாள் என்பதை அறிந்த போது அவனுக்கு வியப்பே ஏற்பட்டது.

மாணிக்கம் நீட்டிய காஞ்சனை முகவரியை, அவள் வேலை பார்க்கும் மோகனசுந்தரத்தின் அலுவலக விலாசத்தை கவனமாய் படித்தான்.

மறுநாளே அந்த மோகனசுந்தரத்தைப் பற்றி தனக்குத் தெரிந்த தொழில் நண்பர்களிடம் விசாரிக்க ஆரம்பித்தான்.



கிடைத்த தகவல்கள் அவனை ரொம்பவும் திகைத்து அதிரத்தான் வைத்தது. மோகனசுந்தரம் போன்ற ஒரு பிராடு பித்தலாட்ட ஆசாமியை உலகத்திலேயே வேறு எங்கும் பார்க்க முடியாது என்பதுதான் அந்த தகவல்.

விஷயம் அறிந்து மகேந்திரன் ரொம்பவும் அதிர்ந்து விட்டான்.

காஞ்சனையை புத்திசாலிப் பெண். விபரமறிந்தவள் என நினைத்தால்... போயும் போயும் ஒரு பிராடு ஆசாமியிடம் போய் அல்லவா அடைக்கலம் ஆகியிருக்கிறாள்?

எப்படி நேர்ந்தது? எதனால் அவனிடம் போய் காஞ்சனை வேலைக்குச் சேர்ந்திருக்கக் கூடும்? என்றெல்லாம் அவனுள் தீவிரமாய் நினைப்பு ஓடியது.

ஆனால் அவனது கேள்விகளுக்கு எவ்வளவு சிந்தித்தும் விடை காண முடியவில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக ஏதாவது விபரீதம் நடப்பதற்குள் அந்த மோகனசுந்தரத்தின் பிடியில் இருந்து அப்பாவி காஞ்சனையை காப்பாற்ற வேண்டும் என முடிவிற்கு வந்தான்.

அதற்கு முன் வேறு ஒரு யோசனையும் அவனுள் உதித்தது. காஞ்சனையைச் சென்று சந்திப்பதற்கு முன் ஊரில் கிராமத்தில் நடந்த விஷயங்கள், காஞ்சனை ஊரை விட்டு கிளம்பிய காரணம், அவளது செல்வம் அத்தான் எப்படி அவளை சென்னை சென்று வர சம்மதித்து அனுப்பினான்? என்பதையெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும் என்று நினைத்தான்.

தனது பணியாட்கள் மூலம் தொடர்பு கொண்டு எல்லா தகவல்களையும் சேகரித்துச் சொல்லச் சொன்னான்.

மறுநாளே மடை திறந்து கொட்டுவது போல் அவ்வளவு விஷயமும் அவனது காதுகளுக்கு வந்து விட்டது.

காஞ்சனை தான் மகேந்திரனை மணப்பதில் எவ்வித மாற்றமும் கிடையாது என தெளிவாய் உறுதிபட செல்வத்திடம் சொல்லி விட்டதும் அதனால் மனமுடைந்த செல்வம் ஊரை விட்டு முன்பே வெளியேறி விட்ட விஷயமும் அவனுக்குத் தெரிந்தது.

'காஞ்சனையை சென்று சந்தித்தால் உடனே ஓடி வந்து கட்டிக் கொள்வாள். உடனே கல்யாணம் செய்து கொள்ளலாம் என வற்புறுத்துவாள்... பின் முடிவெடுக்க முடியாமல் திரும்பவும் குழம்பத்தான் வேண்டும்...!' என்று சிந்தித்து சோர்வடைந்தவனின் கண்களில் விடிவெள்ளி போல் அன்று தென்பட்டான் செல்வம்!

# 30

மகேந்திரனின் இருப்பிடத்தை அறிந்து விட்ட காஞ்சனையும் தாமதிக்கவில்லை. அன்றே மோகனசுந்தரத்தைப் பார்த்ததும் விஷயத்தைச் சொல்லி விட்டாள்.

மோகனசுந்தரம் தனது நீளமான புருவங்களை உயர்த்தியபடி அதிசயித்து அதிர்ந்து போனான்.

"என்ன கண்டு பிடித்து விட்டாயா...? எப்படி... எப்படி...?" என்றான் நம்ப முடியாதவனாய்.

காஞ்சனை மகேந்திரன் பண்ணை வீட்டு பணியாளைப் பார்த்தது முதல் எல்லாவற்றையும் ஒன்று



விடாமல் சொல்லி முடித்தாள்.... மோகனசுந்தரம் முகத்தை திருப்பியவன் வேகமாய் அவள் பார்க்காத வண்ணம் கைகளை குத்திக் கொண்டான்.

அடாடா... என்ன.... இது? பழம் நழுவி.... பாலில் விழும் சமயத்தில் வில்லன் போல் வந்து விட்டானே? இவளும் தேடிக் கண்டுபிடித்து விட்டாளே? என்ன செய்வது?

திடுக்கிட்டு போனவனாய்த்தான் மின்னல் வேகத்தில் சிந்தித்தான். கணக்குகளைப் போட்டான்.

இவள் மகேந்திரன் இடம் தெரிந்தால் உடன் ஓடி போய் விடுவாளே? பின் நாம் போட்டு வைத்திருக்கும் திட்டம் எல்லாம் பாழாகி விடுமே! விடக்கூடாது.... இந்த காஞ்சனை சொல்வதைப் பார்த்தால்... இவள் அந்த மகேந்திரன் இருக்கும் முகவரியைத்தான் கண்டு பிடித்திருக்கிறாள்.

இன்னும் அவனை சந்திக்கவில்லை. அது போதுமே! அவர்கள் இருவரையும் சந்திக்க விடாமல் செய்து எளிதில் பிரித்து விட வேண்டும்.

யோசித்த மோகனசுந்தரம் முதலில் மகேந்திரன் ஆள் எப்படிப்பட்டவன் நல்ல பலசாலிதானா என்றெல்லாம் அறிந்து கொள்ள விரும்பினான்.

ஒரு வேளை அவன் ஒடிசலான தேகத்துடன் கோழையாய் இருந்தால் மிரட்டியே அவனை காஞ்சனையிடமிருந்து விலகி ஓடச் செய்து விடலாம் என்றும் எண்ணினான்.

அதனாலே காஞ்சனைக்குத் தெரியாமல் அன்று மதியமே அவள் சொல்லியிருந்த முகவரியில் உரக் கம்பெனியைத் தேடினான்.

அவனது கழுகுக் கண்கள் அதை கண்டுபிடித்தும் விட்டது.

உரம் வாங்க வந்த விவசாயி போல் தன்னைக் காட்டிக் கொண்டு அங்கு நுழைந்தான்.

முகப்பு ரூமிலேயே கம்பீரமாய் சிங்கம் போல் உட்கார்ந்திருந்தான் மகேந்திரன்.

நெடுநெடு உயரத்தில், திடமான புஜபலங்களுடன் ஆஜானுபாகுவாய் இருந்த மகேந்திரனைக் கண்டு அதிரத்தான் செய்தான் மோகனசுந்தரம்.

உரம் வாங்க வந்தவன் போல் தொடர்ந்து நடித்து விலைகளை கேட்டுக் கொண்டு திரும்பி வந்து வாங்குவதாக உறுதி கூறிக் கொண்டு வெளி வந்தான்.

வெளிவந்து தலையை சிலுப்பிக் கொண்டு மறுபடியும் தீவிர சிந்தனைக்குப் போனான். இந்த மகேந்திரனைப் பார்த்தால் லேசுப்பட்ட ஆளாய் தெரியவில்லையே! இவனை மிரட்டி அனுப்புவதெல்லாம் முடியாத காரியம்! என்று அவன் எண்ண மிட்டுக் கொண்டிருந்த போதே அந்த போலீஸ் ஜீப் விரைவாய் வந்து அங்கு நின்றது.

உள்ளிருந்து இறங்கியவர் நகரின் போலீஸ் அதிகாரி, கமிஷனர் துரைசிங்கம்!

கமிஷனரைப் பார்த்ததும் முகத்தை திருப்பிக் கொண்டு மறுபடியும் புரியாமல் விழிக்க ஆரம்பித்தான் மோகனசுந்தரம்.

என்ன நடக்கிறது என பார்வையை கூர்மையாக்கி கவனிக்க... கமிஷனர் காரிலிருந்து புன்னகையுடன்



இறங்கி மகேந்திரனின் உரக் கம்பெனியினுள் நுழைந்தார்.

மேலும் பார்வையை கூர்மையாக்கி திறந்திருந்த ஜன்னல் கதவுகள் வழியாக பார்வையை ஓட்டியபோது மேலும் அதிர்ச்சி ஆனான் மோகனசுந்தரம்.

இருவரும் ஒருவர் கையை ஒருவர் தட்டிக் கொண்டு... நெருங்கிய நண்பர்கள் போல் சிரிக்கச் சிரிக்க பேசிக் கொண்டு...

தன் சந்தேகத்தை தெளிவுபடுத்த அசட்டுப் புன்னகையுடன் கமிஷனரின் கார் பக்கம் போனான். தலையைச் சொரிந்தபடி பையில் சிகரெட்டைத் தேடிக் கொண்டிருந்த கார் டிரைவரிடம் மெல்ல பேச்சைக் கொடுத்து அவன் சந்தேகப்படாத வண்ணம் விசாரிக்கவும் செய்தான்.

அவன் நினைத்தது போலவே கார் டிரைவரும் விஷயத்தை உளறிக் கொட்டினான். மகேந்திரனும் நகர போலீஸ் கமிஷனரும் பலகால நண்பர்களாம். சிறுவயது முதலே ஒரே பள்ளியில் படித்து வந்ததால் ஏற்பட்ட நெருங்கிய நட்பு எனவும் விவரித்தான்.

கூடவே காஞ்சனை அந்தப் பணியாள் மூலமாக தான் இருக்கும் மோகனசுந்தரத்தின் அலுவலக மற்றும் அவுட்ஹவுஸ் முகவரியை மகேந்திரனுக்கு கொடுத்து அனுப்பி இருந்ததும் ஞாபகத்திற்கு வர... அவன் முகம் இஞ்சி தின்ற குரங்கு போல் ஆனது.

இனியும் காஞ்சனை நினைத்துப் பயனில்லை. ஏதாவது அவளிடம் விளையாட நினைத்தால் மகேந்

திரன் இந்த போலீஸ் கமிஷனர் நண்பன் மூலம் தன்னை பெண்டு கழற்றி விடுவான்... என்பதும் புரிந்தது.

அதனால் மனம் மாறியவனாய் ஒரு தீர்மானமான முடிவும் எடுத்தான் அவன்!

அதனால் மறுநாளே காஞ்சனையிடம் வந்தவன், "நீ கிளம்பலாம்" என்று சொல்லி விட்டான்.

காஞ்சனை திகைத்துப் பார்க்க, "அதான் நீ தேடி வந்த மகேந்திரனின் முகவரி கிடைத்து விட்டதே... இனியும் நீ ஏன் தாமதிக்கிறாய்? உடனே அவனைப் போய் பார்... விடாமல் பிடித்துக் கொள். இல்லையென்றால் அங்கிருந்தும் உன் மகேந்திரன் ஓடிவிடக் கூடும்..." என்றான்.

முதலில் காஞ்சனை அதிர்ந்தாலும் அவன் அங்கிருந்து கூட ஓடக்கூடும்... என மோகனசுந்தரம் சொன்னது அவளுக்கு பொட்டிலடித்த மாதிரி இருந்தது. அவள் இருப்பது அவள் அவன் முகவரியை கண்டு பிடித்து விட்டது தெரிந்தால் அந்த மகேந்திரன் இவன் சொல்வது போல் பயந்து ஓடக்கூட செய்வான். அவனை விடக்கூடாது...!

யோசித்தவள் அது தான் சரி... என முடிவெடுத்தாள்.

மோகனசுந்தரம் சொன்னதும் காஞ்சனை உடனே தலையாட்டி விட்டாள் என்று தான் சொல்ல வேண்டும். அவளுக்கு மகேந்திரனை இருக்குமிடம் தெரிந்தும் இனியும் பார்க்காமல் இருப்பது பெரும் தவிப்பாய் இருந்தது.

அதனாலே மோகனசுந்தரம் சொன்னதும் அது தான் சரி... என கிளம்பி விட்டாள். அவள் போவதை கைக்கு



சிக்காமல் போய் விட்ட கிளி போல் ஏமாற்றத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான் மோகனசுந்தரம்.

வெளியே உடைமைகளுடன் வந்த காஞ்சனை உடனே ஒரு ஆட்டோ பிடித்து உட்கார்ந்தாள். நேராய் மகேந்திரன் விலாசத்தை கொடுத்து போகச் சொன்னாள்.

ஆட்டோ ஓட... ஓட... அவள் சிந்தனையும் வேகமாய் ஓடியது. இப்படி திடுதிப்பென மகேந்திரன் முன் போய் நின்றால் என்ன செய்வான்? எரிந்து விழுவானா? அல்லது ஓடி வந்து அணைத்துக் கொள்வானா?

பணியாள் மாணிக்கம் இதற்குள் நம்மைப் பார்த்த எல்லா விஷயத்தையும் அவனிடம் சொல்லியிருப்பானே?

அப்படிச் சொல்லியும் இந்த மகேந்திரன் பதறவில்லையே!

அவளைத் தேடி வரவில்லையே?

என்ன மனிதன் இவன்? இவனுக்காக கிராமத்தை விட்டு ஓடி வந்து நாயாய் அலைந்து தேடிக் கொண்டிருக்கிறோம். இவன் என்னவென்றால்... எல்லாம் தெரிந்த போதும் சும்மாவாக இருக்கிறானே?

எதனால் மகேந்திரன் இப்படி இருக்கக் கூடும்? என்ன காரணமாய் இருக்கும்?

யோசித்தபடியே அவள் பல வித மனநிலையுடன் தத்தளிக்க... அரைமணி நேர பயணத்திற்குப் பின் ஆட்டோ நின்றது.

பார்த்தால்... மகேந்திரனின் உரக் கம்பெனி!

துள்ளிக் குதித்து இறங்கினாள் அவள்.

அதே வேகத்தில் கண்ணாடிக் கதவுகளைத் திறந்து உள்ளே நுழைய... அங்கு அவளுக்கு பெரும் ஆச்சரியம் காத்திருந்தது.

கம்பெனி உள்ளிருந்து தோளோடு தோள் கை போட்டபடி வெளிவந்தது செல்வமும் மகேந்திரனும்! இருவர் முகத்திலும் சினேகிதமான அந்தப் புன்னகை.

''காஞ்சனை, நீ ஜெயித்து விட்டாய். உன் விருப்பம் போல் இனி மகேந்திரன் சாரை நீ கட்டிக் கொள்ளலாம்... நாங்கள் நண்பர்களாகி விட்டோம்!'' என்றான் செல்வம்... உற்சாகமாக,

# 31

அடுத்து வந்த சில நிமிடங்களை சந்தோஷமான நிமிடங்களாகவே காஞ்சனை உணர்ந்தாள். அந்த சில நிமிஷங்களில் நடந்த எல்லாவற்றையும் கொட்டி விட்டு வாழ்த்துடன் அகன்று விட்டான் செல்வம்.

அறையில் அவளும் மகேந்திரனும் தனியே.

அவனைப் பார்க்க பிடிக்காமல் விலகிப் போனவளை அப்படியே இழுத்து அணைத்தான் அவன். முகம் வெட்டி கோபமாய் திரும்பிக் கொண்டாள் காஞ்சனை.

''அடா...டா... இந்த மலர் முகம் இப்படி வாடுவது தகுமோ?'' என்றபடி அதை கரங்களால் திருப்பிய போது,



''காரணத்தைச் சொல்லுங்கள்...'' என்றாள் அவள் கோபமாய்.

''என்ன காரணம் காஞ்சனை...?''

''முதலில்... என்னைப் பிடிக்கவில்லை... திருமணம் நடக்காத காரியம் என்றெல்லாம் எடுத்தெறிந்து பேசினீர்களே...?''

அவன் கடகடவென சிரித்தான். பின் செல்லமாய் அவள் தலையை ஒரு தட்டு தட்டியபடி, ''நன்றாக நினைவுபடுத்தி பார். நடக்காத காரியம் என்று மட்டும் தான் சொன்னேன். உன்னைப் பிடிக்கவில்லை... என்று சொல்லவா செய்தேன்? இந்த நொடிக்கொருதரம் குங்குமமாய் சிவக்கும் அழகு முகத்தை பிடிக்கவில்லை என்று யாராவது சொல்ல முடியுமா?'' என்றதும், ''சொல்ல வந்த விளக்கத்தை முதலில் சொல்லுங்கள்...'' என்றாள் கறாராய்.

''ம்ம்... சொல்கிறேன்! முதலில் நான் உன்னை மனதார விரும்பினேன் காஞ்சனை. ஆனால் உன் விஷயத்தில் கூட்டை விட்டு நீயே உடைத்துக் கொண்டு வர வேண்டும் என நான் எண்ணினேன். நான் அப்படி மறுத்துச் சொன்னாலும், எந்த வித தடை வந்தாலும் நீ பிடிவாதமாய் நின்று என்னை விரட்டி நான் தான் வேண்டும் என்று உறுதியாய் பின் வந்தாயே... அந்த துணிச்சல், அந்த திடமான உறுதி உனக்கு ஏற்பட வேண்டும் என்று விரும்பினேன். அதே போல நீ வெறியாய் செயல்பட்டு நீ என்னைத் தேடி வந்தாய். நான் இப்படி நடந்ததற்கு உன்னை சோதனை செய்ததற்கு ஒரு சரியான காரணமும் இருக்கிறது.... காஞ்சனை...''

''அது... என்ன காரணமோ...?''

''அது... உனக்குத் தெரியாத காரணம்.... செல்வம் வந்து என் காலில் விழுந்த கதை...'' என்றான் மகேந்திரன் அமைதியாக.

''என்ன செல்வம் உங்கள் காலில் வந்து விழுந் தாரா?'' திடுக்கிட்டு நிமிர்ந்தாள் காஞ்சனை.

மென்மையான சிரிப்புடன் தலையாட்டினான் மகேந் திரன்... ''அது... பெரிய கதை காஞ்சனை. திடீரென ஒரு நாள் மாலை என் வீடு தேடி வந்த செல்வம் சட்டென என் காலில் விழுந்து பொலபொலவென அழுது விட்டான். நான் பதறிப் போய் தூக்கி விஷயத்தைக் கேட்டால்... என்னிடம் கெஞ்சுகிறான்... காஞ்சனையை நான் மிகவும் நேசிக்கிறேன்... அவளை விட்டுக் கொடுங்கள். எனக்கு அவளை விட்டால் வேறு யாரும் கிடையாது... என ஒரே... புலம்பல். எனக்கு ஒரு கணம் அவனை எப்படி ஆறுதல்படுத்துவது என்றே தெரிய வில்லை..''

''செல்வம் என்னை விரும்பலாம். ஆனால் நான் விரும்பியது உங்களைத் தானே?'' டக்கென குறுக்கிட்டு கேட்டாள் காஞ்சனை.

மகேந்திரன் தலையாட்டினான். ''அது எனக்கும் உனக்கும் தெரியும். ஆனால் செல்வம் அதை தெரிந் தும் புரிந்து கொள்ளாமலே உன்னை மணமுடிக்க வழி களைத் தேடினான். என்னிடம் கெஞ்சியதும் அந்தக் காரணத்தினால் தான்! அதனால் எனக்குத்தான் சங்கட மாய் போயிற்று. கோழை போல் காலில் விழுந்து



கெஞ்சுபவனிடம் வீரத்தைக் காட்டுவது முடியாதது அல்லவா? அதனாலே அவனுக்காக உண்மையான எனது நிலையை மறைத்தேன். உன்னை மணக்க விருப்பமில்லை போல் நாடகமாடினேன். கூடவே செல்வத்திற்கும் புரியவைக்க வேறு சில வழிகளைத் தேடினேன்...''

''அது... என்ன வழிகள்? அதையும் சொல்லுங்கள்!''

''இரண்டு பேர் மனம் ஒப்பி இணைந்தால் தான் அது இனிமை... முறையான இல்லறம்... மனதில் ஒருவரை நினைத்துக் கொண்டு வேறு ஒருவருடன் இணைந்தால் அது துன்பமே... என்பதை உன் மூலமாகவே அவனுக் குப் புரியவைத்தேன்...''

''என் மூலமாகவா.. எப்படி?''

''வேறு என்ன...? நான் யாரிடமும் சொல்லாமல் கொள்ளாமல் சென்னைக்குச் சென்றதும்... நீயும் கோபமும் ஆத்திரமுமாய் வெறியோடு என்னைத் தேடி சென்னைக்கே வந்தது என்னை சரியாக கண்டு பிடித்தது... எல்லாம் நீ என் மீது எவ்வளவு அன்பு காதல் வைத்திருக்கிறாய் என செல்வத்தை சிந்திக்க வைத்தது. என்ன இருந்தாலும் அவனுக்கும் மனது என்ற ஒன்று உண்டல்லவா...? அது... எல்லாவற்றையும் புரிந்து கொண்டது... உண்மைக் காதலர்களான நமக்காக இரக் கப்படவும் ஆரம்பித்து விட்டது...''

''அடாடா... உண்மைக் காதலர்களா? யார் நாமா...? கேட்கவே காதில் தேன் பாய்கிறதே...!'' கேலியாய் அவள் விளிக்க... பதிலுக்கு சிரித்த மகேந்திரன் தொடர்ந்து விளக்கினான்.

''அது மட்டும் இல்லை கண்மணி. செல்வம் விஷயத்தில் திடீரென அவன் மனதில் இன்னொரு காதலும் புகுந்து கொண்டது. அந்தப் பெண் பெயர் மல்லிகா...''

''மல்லிகாவா...? யார் அது...?''

''மல்லிகா வேறு யாருமல்ல...! சென்னையில் உள்ள என்னுடைய சிறிய உரக் கொள்முதல் கம்பெனியின் செகரட்டரி. இடையிடையே செல்வம் என்னை தேடி வரும்போது அவளை சந்திக்க... அந்த மல்லிகாவுக்கு கிராமத்து காளையான செல்வம் மேல் ஒரு ஈர்ப்பு ஏற்பட... அவ்வளவு தான்... அங்கு புதியதாய் இருவருக்கும் காதல் தீ பற்றிக் கொண்டது இருவரும் காதலிக்க ஆரம்பித்து விட்டார்கள்...''

''அப்புறம் என்னாயிற்று?''

''ம்ம்.... பார்த்தேன்... அவர்களது காதலுக்கு பச்சைக் கொடி காட்டி, செல்வத்தை என்னுடைய அந்த உரக் கொள்முதல் கம்பெனியின் மேனேஜராக ஆக்கினேன். செல்வமும் சந்தோஷமாய் ஒப்புக் கொண்டான். விரைவில் அவர்கள் இருவருக்கும் நம் இருவர் தலைமையில் திருமணம்...''

அவன் மூச்சு விடாமல் பேசி முடித்தான். அவள் வில்லான புருவங்களை உயர்த்தி அப்படியே சுழற்றினாள்.

''நம் இருவரா... யார் அது...?''.

அவன் பதில் சொல்லாமல் வேகமாய் ஒரு அணைப்பு செய்து விடுவித்தவன், ''இந்த பாசாங்கு நடிப்பு எல்லாம் போதும். நிஜத்திற்கு வா!'' என்றவன் கண்மணி... அதற்கு முன் முக்கியமான ஒன்று... என்னை பெரும் மனது கொண்டு என்னை மன்னித்து விடு உன்னை உள்ளூர விரும்பிக் கொண்டு அதை வெளிப்படுத்தாமல் உன்னை ரொம்பவும் தான் சோதித்து வேதனைப்பட வைத்து விட்டேன் அப்படித்தானே...?''



தலைசாய்த்து அவன் சொல்ல இம்முறை கைகளால் அவள் தலைக்கேசத்தை படபடவென கலைத்து தனது எரிச்சலை அடக்கிக் கொண்டவள், ''அதைத் திருவாளர் ஐயா அவர்கள் இப்போதாவது உணர்ந்து புரிந்து கொண்டீர்களே... அந்த மட்டிலும் என் பாக்கியம் ஐயா... பாக்கியம்...'' போலியாய் கை கூப்பி அவனைப் போலவே தலை சாய்த்து சிரித்தாள் அவள்.

பளீரென சிரித்த அவளது முத்துப் பல் புன்னகையை வெகுவாய் ரஸித்தவன், ''இன்னுமொரு முக்கியமான கேள்வியை கண்மணியிடம் கேட்க வேண்டி இருக்கிறது. கண்மணி பதில் தருவார்களா? கண்மணியிடம் இருந்து உண்மையான பதில் கிடைக்குமா?'' என்றான் குறும்புப் பார்வையை முகத்தில் பதிய வைத்தபடி,

''எதுவானாலும் தைரியமாய் கேளுங்கள். ஐயா! பதில் சொல்கிறேன்!'' அவளும் அதே கிண்டலுடன் சொல்லி கைகள் இரண்டையும் முறுக்கி ஸ்டைலாய் கட்டிக் கொண்டு அவனைப் பார்த்தாள்.

மகேந்திரன் தொண்டையை செருமிக் கொண்டு, ''அதாவது கண்மணி, என்னிடம் எது... உன்னைக் கவர்ந்தது... எதனால் காதல் கடலில் நீ தொபுக்கடீர் என விழ நேர்ந்தது அதைக் கொஞ்சம் விளக்கமாக...''

அவன் முடிக்கும் முன்பே, ''ம்ம் சொல்கிறேன்...'' என ஆரம்பித்தவள் அவன் முன் நேருக்கு நேர் நின்று அவன் முகத்தையே உற்றுப் பார்த்தாள்.

கருவிழிகள் மின்ன விழிகள் விரித்து அவள் பார்க்கும் அழகைக் கண்ட இதழ்கள் பிரியாமல் அவன் சிரிக்க ஆரம்பித்தான்.

சட்டென கைகளைச் சுண்டி அதைக் காட்டினாள் அவள்.

''இதுதான்... இந்த உதடு பிரியாமல் வரும் இந்த வசீகரச் சிரிப்புதான் ஐயா... என்னை... தங்களிடம் மிகவும் கவர்ந்தது...! ஈர்த்தது.... காதல் கொள்ள வைத்தது! மொத்தத்தில்.... நீங்கள் எனக்கு யார் தெரியுமா? என் இனிய மனங்கவர்ந்த வசீகரமான புன்னகை மன்னன்!... புன்னகை மன்னன்! புன்னகை மன்னனே தான்!'' மூச்சு வாங்க அவள் மூன்று முறை உரக்க சொல்லி முடிக்க பதிலுக்கு படபடவென தலையாட்டிய மகேந்திரன், ''இளிச்சவாயன் என வெளிப்படையாய் சொல்லாமல் நாசுக்காய் சொல்கிறாய் அப்படித்தானே?'' எனவும் பொங்கிய சிரிப்பை அடக்கிக் கொண்டு, ''புரிந்து கொண்டால் சரி...!'' என்றாள் அவள் துடுக்கான தலையாட்டலுடன்.

''ஆனாலும் இவ்வளவு துடுக்குத்தனம், ஆணவம் இவைகளுக்கு இருக்கக்கூடாது. உடனே அவைகளை தண்டித்து விடுகிறேன் சரியா?'' என்றபடி தனது இதழ்களால் அவளது செவ்விதழ்களை நோக்கிக் குனிந்தான் மகேந்திரன்.

அவன் நோக்கம் புரிந்தவளாய் முகம் சிவக்க ஆரம்பித்தாள் காஞ்சனை!

*